
"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவகாளம்



டாக்டர் யோனத்தான் கோபோர்த் (முதிர் வயதில்)

கடந்த இதழின் தொடர்ச்சி

மஞ்சூரியாவில் தேவ ஆவியின் அருள்மாரி

13 ஆண்டுகளாக கோபோர்த், சீனாவில் ஆற்றிய தேவ சேவை கனியற்றதாகவே இருந்தது. எனினும், தாம் நேசித்த சீன மக்களின் மீது தேவனது அருள்மாரி பொழியப்பட வேண்டுமென அவரது இருதயம் வாஞ்சித்து கதறியது. சீனாவில் அயல்நாட்டினருக்கு எதிரான பாக்ஸர்

Vol. No. 34 ஜூலை - செப்டம்பர் 2001 No. 7 to 9

புரட்சி கிறிஸ்தவ சமுதாயத்தை சீரழித்தது கண்டு கோபோர்த் மனமுடைந்தார். பல கிறிஸ்தவ தேவாலயங்கள் தீ வைத்து கொழுத்தப்பட்டன. கிறிஸ்தவ மிஷனரிகளும், கிறிஸ்தவ மக்களும் கயவர்களின் கூர்மையான வாளுக்கு பலியானார்கள். கோபோர்த், ஆவியில் கலக்கமடைந்தவராக யாக்கோபு தேவனோடு போராடியது போல ஜீவனுள்ள தேவனின் ஆவி சபையில் ஊற்றப்பட போராடி அழுது மன்றாடினார். இதன் காரணமாக பரலோகின் மதகுகள் திறக்கப்பட்டு தேவ அன்பின் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி தேவனுக்கு வெகு தொலைவிலுள்ள பல்லாயிரக்கணக்கான சீன மக்களை பரமபிதாவின் அரவணைப்பினுள் கொண்டு வந்து சேர்த்தது. தேவன் தமது தாசனாம் கோபோர்த்தைக் கொண்டு மகத்தான செயல்களை செய்யத் தொடங்கினார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் எழுப்புதலின் தீ பற்றி எரிந்தது. சார்லஸ் பின்னியை தேவன் பயன்படுத்தியது போல கோபோர்த்தையும் கர்த்தர் தமது கரத்தின் கருவியாக எடுத்தாட்கொண்டார்.

மஞ்சூரியாவில் லியாங் என்ற இடத்தில் பெரும் எழுப்புதல் ஏற்பட்டது. கோபோர்த் இதுவரை பெற்றிராத தேவ வல்லமையோடு பிரசங்கிக்கத்தக்கதாக தேவன் அவரோடிருந்தார். மக்கள் தங்கள் பாவங்களை வெளியரங்கமாக அறிக்கையிட்டு தேவனுடைய மன்னிப்புக்காக கதறினார்கள். காலைக்கூட்டத்தில் கோபோர்த் பேச்சை முடித்த பின்னர் சபையினர் ஜெபிக்க அவர் அவகாசம் கொடுத்தார். இரண்டு நாட்களுக்கு முன் சபையில் கதறி அழுத மூப்பர் ஒருவர் எழுந்து மேடை மேல் சென்று தான் ஒரு வேசிக்கள்ளன் என்றும் தனது மனைவியை கொன்று விட மூன்று தடவைகள் முயன்றதால் தான் ஒரு கொலைகாரன் என்றும் இதய குமுறலுடன் அறிக்கையிட்டார். அப்படியே ஒவ்வொரு மூப்பரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்ட பின்னர் சபையின் குருவானவரே தனது கொடிய பாவங்களை அறிக்கையிட்டு தான் அந்த சபையின் குருவானவராக பணி செய்ய சற்றும் அருகதையற்றவன் என்று கண்ணீரோடு ஓலமிட்டார். கிறிஸ்தவ வைத்தியன் ஒருவன் தனது பகைஞன் தன்னிடம் வைத்தியத்துக்காக வந்தபோது அவனை விஷம் கொடுத்து கொன்றதாக பகிரங்கமாக அறிக்கை செய்து அழுதான். லியாங்கில் ஏற்பட்ட எழுப்புதலைக்கண்ட டக்ளஸ் என்ற மிஷனரி அது 1859 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து தேசத்தில் ஏற்பட்ட பெரும் எழுப்புதல் போன்றது என்று கூறினார்.

கோபோர்த்தின் இந்த உயிர் மீட்சி கூட்டங்களுக்கு பின்னர் லியாங்கில் இரட்சிக்கப்பட்டவர்கள் சுற்றிலுமுள்ள இடங்களுக்குச் சென்று கிறிஸ்துவின் நற்செய்தியை கூறி அறிவித்தனர். அதின் காரணமாக பலர் ஆண்டவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

சூதாட்டத்தில் தேர்ச்சிபெற்ற ஒரு துன்மார்க்கன் தனக்கு வரவேண்டிய பணத்தை சேர்க்க கழுதையின் மேல் ஏறி தன் கிராமத்தினின்று வட திசை நோக்கிச் சென்றான். கிராமத்தின் எல்லையை அடைந்ததும், கழுதை மேலும் செல்ல மறுத்தது. கழுதையை மேலும் செலுத்த முடியாது போகவே தென் திசையிலும் தன் கடன்காரர்கள் இருந்ததால் அந்த திசையில் தனது கழுதையை ஓட்டினான். ரஸ்தா தென்மேற்கிலும், தென்கிழக்கிலுமாக பிரியும் இடம் வரை கழுதை அமைதியாக சென்றது. தென் மேற்காக அவன் தெரிந்து கொண்ட பாதையில் கழுதை ஒரு அடிகூட முன்செல்ல மறுத்தது. உதைகளும், வசை மொழிகளும், மன்றாட்டுகளும் வீணாயிற்று. பொறுமை இழந்த சூதாடி கழுதையை அதின் விருப்பப்படியே போகவிட்டான். அப்பொழுது அது அவனுக்கு கொஞ்சம் கூட சிரமம் அளிக்காது அமைதியாகச் சென்றது. சிறிது நேரத்திற்குள்ளாக அவன் ஒரு கிராமத்தை வந்தடைந்தான். கழுதை அங்குள்ள தேவாலயத்தின் முகப்புவாசலின் முன் வந்து நின்றது. பின்னர் அவன் சோர்புடன் ஆலயத்தின் அருகே சென்றான். கோபோர்த்தின் தேவ செய்திகளால் எழுப்புதலடைந்த லியாங் கிறிஸ்தவர்கள் பாடிய கீதங்களின் இன்னிசை அவனைக்கவரவே அவன் தேவ ஆலயத்தினுள் சென்றான். தங்கள் பாவங்களை கண்ணீருடன் அறிக்கையிடுபவரையும், கிறிஸ்துவால் தாங்கள் தங்கள் வாழ்க்கையில் பெற்ற சந்தோசத்தையும், சமாதானத்தையும் குறித்து மலர்ந்த முகத்துடனும், ஒளி வீசும் கண்களுடனும் சாட்சி கொடுப்பவரையும் அவன் அங்கு கண்டான். தேவனது வல்லமையான பிரசன்னத்தில் அவன் தன் பாவங்களை குறித்து ஆழமாக உணர்த்தப்பட்டான். தன் பாவ அக்கிரமங்களை சபையில் அறிக்கையிட்டு தேவன் தமது அதிசயமான கரத்தால் அந்த ஆலயத்திற்கு தன்னை வழிநடத்தி வந்த விந்தையை எடுத்துரைத்தான். மனந்திரும்பிய அந்த சூதாடி பாவியினிமித்தம் பரலோகத்தில் பேரானந்தம் உண்டாயிற்று.

நியூச்வாங்கில் ஏற்பட்ட உயிர்மீட்சி

நியூச்வாங்கிலுள்ள திருச்சபை, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாது கடினப் பட்டிருந்தமையால் எந்த நன்மையும் அச்சபையினின்று என்றும் வரப்போவதில்லை என்று எண்ணினார்கள் அந்த சபையைக் குறித்து எல்லாரும் தீதாகவே பேசினார்கள். லியாங்கில் ஏற்பட்ட எழுப்புதல் இங்குள்ள சபையில் ஏற்படும் என்று எதிர்பார்ப்பது முற்றும் தவறு என்று மக்கள் பேசிக்கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட கோபோர்த் "நீங்கள் தேவனது வல்லமையை பல இடங்களிலும் கண்டிருக்கின்றீர்கள். எனவே, மிகுந்த நம்பிக்கையுடன் தேவன் இந்த சபையிலும் இரக்கம் காட்டும்படியாக மன்றாடி ஜெபியுங்கள்" என்று சபையினரிடம் கூறினார்.

சர்வவல்லவரால் கூட நொறுக்கப்படக்கூடாத கல்லான கடின சபை என்று கருதப்பட்ட அந்த நியூச்வாங் சபையின் தேவாலய பிரசங்க பீடத்தில் கோபோர்த் பெருமூச்சோடு ஏறினார். சபையினருக்கு மகல் பாடல் கீதத்தை அறிவிக்குமுன்னர் ே
மௌனமாகவே தனக்குள்ளேயே ஆ
தலைநிமிர்ந்து பார்த்தபோது ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்களது பாவ அக்கிரமங்களின் கொடுமையை உணர்ந்தவர்களாய் தேவனது நியாயாசனத்தின் முன் மனமுடைந்தோராய் கண்ணீர் வடித்து பலவிதமான பாவங்களை அறிக்கைசெய்து நொறுங்குண்ட இருதயத்தோடு ஜெபிக்கும் காட்சியை கோபோர்த்தின் கண்கள் கண்டன. ஒரு சிறு பிரசங்கமும் அவர் செய்யவில்லை. ஒரு கீதமும் கூட்டத்தில் பாடப்படவில்லை. ஏன், ஒரு சிறு ஜெபம் கூட செய்யப்படவில்லை. அதற்குள் அச்சபையின் கல்லான கடின இருதயம் தேவனின் முன்பாக மெழுகாக உருகிற்று. ஆம். இந்த மகத்தான வெற்றி வல்லமையான நம் கர்த்தரின் பராக்கிரமத்தாலேயே நிகழ்ந்தது.

ஷான்ஸியில் பரிசுத்த ஆவியானவரின் அக்கினி பற்றி எரிந்தது.

"சீனாவின் இரத்த சாட்சிகளின் பிரதேசம்" என்று ஷான்ஸி மாகாணம் இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. 1900 ஆம் வருடம் ஏற்பட்ட பாக்ஸர் கலவரத்தின்போது மிகுதியாய் துன்புறுத்தப்பட்டவர் இங்குள்ள கிறிஸ்தவர்களே. நூற்றுக்கணக்கான மக்கள் தாங்கள்

கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருந்ததால் தங்களது இன்னுயிரை இழக்க வேண்டியதாயிற்று. மிஷனரிகளான 100 பேர் இந்தக் கொடியவர்களின் வாளுக்கு முதல் பலியானார்கள்.

"மரணம் ஒரு நிமிட காலத்திற்கும் அருகில் வந்துவிட்டது. எனினும் அக்கிறிஸ்தவ மிஷனரிமார்களின் முகத்தில் நான் எங்கும் கண்டிராத அமைதியும், புன்முறுவலுமே தோன்றிற்று. அக்கணத்திலும் தன்னைப்பற்றிப் பிடித்துக் கொண்டிருந்த தனது பாலகனை அணைத்துக் கொண்டு அவனிடம் அன்புடனும், முகமலர்ச்சியோடும் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் ஒரு மாது. சில வினாடிகளில் அவளது உடல் கூரிய வாளின் வீச்சினால் தரையிலே விழுந்தது. அப்பாலகன் எவ்வித அச்சமும் வருத்தமுமின்றி இன்னும் தனது தாயை இறுகப்பற்றிக்கொண்டான். கயவரின் வாள் இன்னொரு தரம் வீசப்பட்டது. அவனது அழகிய உருவம் இரத்தத்தால் சிதைந்து அவனது தாயின் உடல் அருகே பிணமாக விழுந்தது. இப்படி விவரிக்க இயலாத ஆச்சரியமான வீரத்தை என் கண்கள் கண்டபின்னர் வேத புத்தகம் உண்மையிலேயே சர்வ வல்லமையுடைய கர்த்தரது உயிருள்ள வார்த்தை என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் வேர் ஊன்றியதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது?" என்று சீன கவர்னரின் கோட்டையில் நடைபெற்ற இப்படுகொலையை நேரில் கண்ட ஒரு சீன சாஸ்திரி எழுதுகின்றார்.

இவ்விதமாக கொடூர படுகொலை நடந்து எட்டு வருடங்களுக்குப் பின்னர்தான் 1908 ஆம் வருடம் கோபோர்த் அங்கு சென்று எழுப்புதல் கூட்டங்கள் நடத்தினார். "இரத்த சாட்சிகளின் இரத்தமே சபையின் உயிர் மூலம்" என்ற ஒரு சொல் உண்டு. அதின்படி அவ்விடத்தில் ஏற்பட்ட தேவனது ஆவியின் வல்லமையான கிரியைகள் இச்சொல்லின் உண்மையை நிரூபிக்கின்றன.

கிறிஸ்தவ மக்களின் வாழ்க்கை மிகவும் சீர்குலைந்த நிலையிலிருந்த சமயம் அது. கிறிஸ்தவர்களின் சீர்கெட்ட நடத்தை கிறிஸ்துவின் நாமத்திற்கு நிந்தை அவமானத்தை கொண்டு வந்த காலம் அது. கிறிஸ்தவ மக்களின் கேவலமான நடத்தையாலும், அஞ்ஞானிகளுக்கொத்த அவர்களது பாவ வாழ்க்கைத்தரத்தாலும் கர்த்தரது பரிசுத்தமுள்ள நாமம் புற ஜாதியாரின் மத்தியில் தூஷிக்கப்பட்டது. புருஷர் தங்களது மனைவிமாரை நேசியாது அவர்களை மிருகங்களைப்போல அடித்து துன்புறுத்துவது சர்வசாதாரணமாக இருந்தது. பிள்ளைகள் பெற்றோரின்

சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடப்பது அநாகரிகம் என்று கருதப்பட்டது. கோபோர்த்தின் எழுப்புதல் கூட்டங்களின் காரணமாக இந்த பாவங்களை எல்லாம் மக்கள் மறைத்து வைக்காமல் தேவனது சந்நிதியில் அழுகையோடும், கண்ணீரோடும் அறிக்கையிட்டு விட்டுவிட்டு கர்த்தரண்டை மனந்திரும்பினார்கள்.

ஏதோ ஓர் அபூர்வ ஆற்றல் பொல்லாத கிறிஸ்தவரையும் சீரான நல்ல கிறிஸ்தவராக மாற்றி விடுகின்றது என்ற செய்தி நகரத்தில் எங்கும் பரவிற்று. மக்களை மாற்றி, அவர்களை அடக்கியாளும் சக்தியற்ற "பழைய இயேசு" விற்குப் பதிலாக கொடிய கயவரையும் மாற்றி அவர்களை சிறந்த சான்றோராக செய்யும் வல்லமை பொருந்திய "புதிய இயேசு" தோன்றி இருப்பதாக ஷான்ஸி பட்டணம் எங்கும் பேச்சாயிற்று. இப்படி, பாவத்திலிருந்து மக்களை விடுவிக்கும் திறன்பெற்ற ஜீவனுள்ள தேவன் தாமே தமது மக்களிடையே தோன்றியிருக்கின்றார் என்று பிற மதஸ்தரும் திட்டமும் தெளிவுமாக கண்டுகொண்டனர். "அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1 : 21) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றதல்லவா?

ஷன்மின் பூவில் எழுப்புதல்

ஷன்மின்பூவிலுள்ள கிறிஸ்தவர்கள் 1900 ஆம் வருடத்திய பாக்ஸர் கலவரத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். அங்கு 54 கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சிகளாக மரித்திருந்தனர். மரணத்திற்கு தப்பிய கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி இப்படுகொலையை செய்தவர்களின் பெயர் பட்டியலை தயாரித்து அவர்களை எப்படியும் கொன்று பழிக்குப்பழி வாங்கியே தீருவது என்று தீர்மானம் எடுத்துக் கொண்டனர்.

பழிக்குப்பழி வாங்கியே தீர வேண்டும் என்ற மன்னிப்புக்கு இடமில்லாத மக்களின் மனக்கசப்பின் ஆவி பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக இருந்தது. நான்காம் நாள் மாலையில் தான் பரிசுத்த ஆவியானவர் சகல எதிர்ப்பையும், அந்தகார இருளையும் கடந்து வல்லமையுடன் மக்கள் மேல் இறங்கினார். மூன்று மணி நேரம் கூட்டம் நீடித்திருந்த பின்னர் கோபோர்த் ஆசீர்வாதம் கூறி கூட்டத்தை முடித்தார். "எங்களுக்கு இரக்கம் காட்டுங்கள். தயவுசெய்து கூட்டத்தை அவ்வளவு சீக்கிரமாக முடித்துவிடாதீர்கள். இவ்வளவு நாட்களும் எங்களுக்கு தூக்கம் என்பதே இல்லை. எங்கள் பாவங்களை அறிக்கை செய்து

விட்டுவிட எங்களுக்கு அவகாசம் தராது சீக்கிரம் எங்களை இங்கிருந்து அனுப்பிவிடுவீராயின் இன்னும் எங்கள் நிலை பழைய பாவ நிலையாகவே இருக்கும்" என்று சபையார் அனைவரும் ஒன்றுபோல சேர்ந்து கோபோர்த்திடம் கூறினார்கள்.

அதைக்கேட்ட கோபோர்த், பெண்களை எல்லாம் தனியாகச் சென்று ஜெபிக்கும்படியாக பக்கத்திலிருந்த பாடசாலைக்கு அனுப்பிவிட்டு ஆண்கள் மாத்திரம் ஆலயத்தில் தங்கியிருந்து ஜெபிக்கும்படி செய்தார். அன்று அனைவரும் தேவனுடன் ஒப்புரவாகிக் கொள்ள வேண்டுமென மிகுந்த ஆவலுடன் இருந்ததால் அப்படி கூட்டத்தை தனித்தனியாக பிரிக்க முடிவு செய்யப்பட்டது.

அதின் பின்னர் ஒரு சுவிசேஷகர் முழந்தாளில் நின்று தனது அநேக பாவங்களை அறிக்கையிட்டார். எனினும், அவரது துயரம் கொஞ்சம் கூட குறைவுபடவில்லை. ஏனெனில் பாவங்கள் அனைத்தையும் அவர் அறிக்கை செய்து விட்டுவிடவில்லை. பாக்ஸர் கலவரத்தின் போது தனது தந்தையை வெட்டிக்கொன்ற பாதகனை தம்மால் ஒருபோதும் மன்னிக்க முடியாது என்றார். இவ்வளவு நாட்களாக தன் தந்தையை கொன்றவனை பழிக்குப்பழி வாங்குவதென்ற ஒரே நோக்கத்துடன் ஜீவித்து வந்திருப்பதாக கூறினார். தன் பாவங்களை அறிக்கையிட்டு தேவனுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஒரு புறமும், தன் தந்தையைக் கொன்றவனை கொலை செய்வதே தந்தைக்கு தான் ஆற்றும் சிறந்த நன்றி கடன் ஆகும் என்ற தப்பான ஆர்வம் ஒரு புறமும் அவரை இழுத்ததால் அவர் இன்னும் முழங்காலில் நின்று போராடினார்.

பின்னர் உயர்தர பாடசாலை மாணவன் ஒருவன் எழுந்து நின்று, பாக்ஸர் குழப்பத்தின் போது தன் தகப்பனாரும் கொலை செய்யப்பட்டதாகவும், குழந்தைப் பருவத்திலேயே அக்கொலைகாரனை பழிவாங்க வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினான். கோபோர்த் நடத்தும் இக்கூட்டங்களுக்கு வந்த பின்னர் தன் தந்தையைக் கொன்ற கயவனை மன்னித்துவிட தேவ ஆவியானவர் தன் இருதயத்தில் ஏவுவதாகவும், அதினால், தான் உண்ணவோ, உறங்கவோ இயலாதபடி தன் உள்ளத்தில் பெருங்கலக்கமும், போராட்டமும் இருப்பதால், கொலைஞனை மன்னித்து விட தேவையான தேவ கிருபை தனக்கு அளிக்கும்படியாக சபையார் யாவரும் ஜெபிக்கும்படியாக கெஞ்சினான். அதின் பின்னர் 9 பேர் ஒவ்வொருவராக தங்களது

பெற்றோர், சகோதரர் அல்லது சகோதரிகள் எப்படி தங்கள் கண்களுக்கு முன்பாகவே கொடூரமாக கொலைசெய்யப்பட்டனர் என்று பரிதாபகரமான குரலில் கூறினர். தங்களது இருதயத்தின் வேதனை நீங்கும்படியும், கொலைஞரை மன்னித்துவிட தேவனது அளவற்ற கிருபை தங்களுக்கு அருளப்படவும் சபையார் ஜெபிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அதின்படி அந்தக் கூட்டம் இன்னும் இரண்டரை மணி நேரம் நீடித்தது. கூட்டத்தின் முடிவில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சுவிசேஷகர் எழுந்து நின்று, தன் தந்தையைக் கொன்ற கொலைஞனைத்தாம் எந்தவிதத்திலும் மன்னிக்க இயலாது என்றும், பழிக்குப்பழி வாங்கினால்தான் தன் மனம் அமைதியடையும் என்று கூறி அனைவரையும் திகைப்படையச் செய்தார்.

அடுத்த நாள் காலைக்கூட்டம் ஆரம்பமானது. அந்தக் கூட்டத்தில் பேச தனக்கு அவகாசம் கொடுக்கும்படியாக அந்த சுவிசேஷகர் கோபோர்த்திடம் கேட்டுக்கொண்டார். அப்படியே அவருக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. அவர் பேச எழுந்து நின்றார். அவரது முகத்தில் ஒரு புதிய ஒளியும், அமைதியும் காணப்பட்டது. கொலைஞனை மன்னிக்க கிருபை தனக்கு அருளப்பட சபையாரை ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்ட இளைஞரை அழைத்தார். முந்திய இரவு தான் அவனிடம் நடந்து கொண்ட விதம் அந்த வாலிபனுக்கு கிறிஸ்துவுக்குள்ளாக நல்ல முன் மாதிரியாக இல்லாமல் அவனுக்கு தான் இடைஞ்சலாக இருந்தது குறித்து தம்மை நொந்து மன்னிக்கும்படியாக கேட்டுக்கொண்டார். இந்த வாலிபன் தேவனது குரலுக்கு கீழ்ப்படிய முன்வரும் சமயம் சபை மூப்பனும் சுவிஷேசகனுமாகிய நான் தேவனுக்கு எதிர்த்து நின்றது எத்தனை தவறு என்று தாம் உணருவதாக கூறி, பின்னர், தேவன் எப்படி தமக்கு முந்தின நாள் இரவில் தனது தந்தையைக் கொன்ற கொலைகாரனை மன்னித்து விட கிருபை தந்தார் என்று சபையினருக்கு விவரித்துக் கூறினார். அதற்கப்பால், சபை மக்களால் பழிவாங்கப்பட வேண்டும் என்று முன்குறித்திருந்த 150 பேர்கள் அடங்கிய பெயர் பட்டியல் பத்திரத்தை சுக்கு நூறாக கிழித்து மிதித்து வீசி எறிந்தனர்.

தன்னை தரைமட்டாகத் தாழ்த்திய தேவ மனிதன்

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்ல தேவன் யோனத்தான் கோபோர்த்தை மிகவும் வல்லமையாக சீன தேசத்திலே பயன்படுத்தினார். அவர் மூலமாக ஒரு பெரிய ஆவிக்குரிய எழுப்புதல் சீன

தேசத்திலே உண்டாயிற்று. அந்த எழுப்புதலின் சரித்திரத்தை இந்த சிறிய பத்திரிக்கையில் முழுமையாக எழுதுவது என்பது முற்றும் கூடாத காரியம். தேவ நாமத்திற்கு மகிமையாக அந்த எழுப்புதலின் ஓரிரு காட்சிகளை மாத்திரமேதான் நான் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

கோபோர்த்தை தேவன் வல்லமையாகவும், அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாகவும் பயன்படுத்துவதை கண்ணுற்ற சாத்தானாம் பிசாசு அவ்வப்போது அவரண்டை வந்து "கோபோர்த்தே பார், உனது பிரசங்கங்களால் எத்தனை ஆயிரம் சீன மக்கள் உயிர் மீட்சி அடைந்துள்ளனர்! உனது பிரசங்கத்தின் வல்லமைதான் எத்தனை மாட்சியானது!" என்று அவரது காதுக்குள் கூறி தேவனுக்கு சேர வேண்டிய மகிமையையும், கனத்தையும் களவாடி தனக்கு எடுத்துக்கொள்ளவும், பெருமையாக நடக்கவும் அவருக்கு தீய ஆலோசனை கூறுவான். அப்பொழுதெல்லாம் தேவ மனிதன் கோபோர்த் நினைவுகூர்ந்து தன்னை தரைமட்டாகத் தாழ்த்தும் ஒரு கதை உண்டு. அது இதுவேதான் :-

"ஒரு மரங்கொத்திப் பறவை வானுற ஓங்கி வளர்ந்திருந்த ஒரு உயரமான பெரிய பைன் மரத்தின் உச்சியில் பறந்து வந்து அமர்ந்து அதில் ஏதாவது புழுக்கள் கிடைக்குமா என்ற ஆசையில் ஒன்று, இரண்டு, மூன்று என்று மூன்று கொத்து கொத்தியது. அப்பொழுது மழை காலமானதால் ஒரு பயங்கர இடி மிகுந்த முழக்கத்துடன் அந்தச்சமயம் பார்த்து முழங்கி அந்த பைன் மரத்தில் விழுந்தது. இடி தாக்கிய அந்த பெரிய பைன் மரம் சில நொடிகளில் சின்னாபின்னமாக சிதறி உடைந்து ஒரு குவியல் மரப்பட்டைகளாகிவிட்டன. இடி இடிக்கவும் மரங்கொத்தி பறவை பயந்து நடுங்கி பக்கத்து மரத்துக்கு பறந்து சென்று அமர்ந்து கொண்டு இனி நமக்கு என்ன ஆபத்து நடக்குமோ? அடுத்த இடி நமது தலைமேல்தான் விழுமோ? என்று அஞ்சிக்கொண்டிருந்த நேரத்தில் அதற்கப்பால் எதுவுமே நடப்பதாகத் தெரியவில்லை. இடிமுழக்கங்கள் எல்லாம் முற்றுமாக நின்றுவிட்டது. நேரம் ஆக ஆக மரங்கொத்திப் பறவையின் பயங்கள் யாவும் மறைந்து ஒரு அசட்டுத் துணிச்சலான எண்ணம் அதின் மனதில் தோன்றலாயிற்று. "ஆ, நான் எத்தனை பலவான்! எனது அலகிலுள்ள மகா பலத்தின் அளவை யாரே அறிவர்! மூன்றே மூன்று கொத்துக்கள் தான். பிரமாண்டமான உயர்ந்த பைன் மரம் இருந்த இடம் தெரியாமல் உருக்குலைந்து நொறுங்கி போய்விட்டது!" என்று தனக்குள்ளே பெருமிதமாக எண்ணிக் கொண்டதாம்.

தேவன் என்னைக் கொண்டு நடப்பிக்கும் எழுப்புதல் அக்கினியை குறித்து நான் ஏதாவது கூறி ஆண்டவரது மகிமையை நான் எனக்கென்று எடுப்பேனானால் அது அந்த புத்தியற்ற மரங்கொத்திப் பறவையின் கதையாகத்தான் இருக்கும். அந்தவிதமான மதியீனமான எண்ணத்தை நான் ஒருக்காலும் கொள்ள மாட்டேன். அகண்டு வியாபித்து பரந்து கிடக்கும் சர்வவல்லவரின் ஆகாயவிரிவில் கண்ணுக்குப் புலப்படாமல் காற்றால் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தூசி மாத்திரமே தான் நான், வேறொன்றுமில்லை என்ற உணர்வு மட்டும்தான் எனக்குள்ளதே தவிர வேறு எந்த உணர்வும் எனக்கு இல்லை என்று கோபோர்த், சாத்தானிடம் கூறி அவனை துரத்தி அடிப்பார்.

வேத வசன பிரியன்

யோனத்தான் கோபோர்த் தேவனுடைய வேத புத்தகத்தை தமது மரணத்திற்கு முன்னால் 73 தடவைகள் முழுவதுமாக வாசித்து முடித்திருந்தார். தேவனுடைய வேதத்தின் பகுதிகளை மனப்பாடமாக படிப்பதைக் குறித்து அவர் எழுதிய வார்த்தைகளை கவனியுங்கள் :-

"கர்த்தருடைய வசனங்களை மனப்பாடமாக கூறுதல் நலமானதுதான். ஆனால் அந்த வசனங்கள் வேதாகமத்தில் எந்த இடத்தில் இருக்கின்றது என்று அதிகாரம், வசனத்தை திட்டமாக குறிப்பிடுதல் மிகவும் அருமையானதாகும். ஆண்டவருடைய வசனங்கள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க வேதாகம ஒத்துவாக்கிய அகராதியை நான் தேடி ஓடுவது எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கின்றது. ஆனால், என் மனைவி என்னை "நடமாடும் ஒத்துவாக்கிய அகராதி" என்று என்னைக் கூறிக்கொள்ளுகின்றார்கள். அத்துடன் எனது சீன கிறிஸ்தவ சகோதரர்களும் வேதாகமம் எனக்கு அத்துப்படியாகத் தெரியும் என்று என்னை மெச்சிக் கொள்ளுகின்றனர். ஆனால், இந்த புகழ் உரைகளெல்லாம் எனக்கு திருப்தி அளிப்பதாகத் தெரியவில்லை. இன்னும் அநேக நுற்றாண்டு காலங்கள் நான் என் தேவனுடைய வேதத்துடன் காலம் செலவிடவேண்டுமென்றே நான் விரும்புகின்றேன்.

வேத பகுதிகளை மனப்பாடம் செய்வது நமக்கு ஆசீர்வாதமாகும். நான் மனப்பாடம் செய்யும் முறை யாதெனில் ஒவ்வொரு வசனத்தையும் ஐந்தைந்து தடவைகள் மிகவும் கவனத்துடன் வாசிப்பேன். முதல் முறை

வாசித்த உடனேயே அதை மனப்பாடமாக கூற முயற்சிப்பேன். பிறகு அதை ஆங்கில வேதாகமத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்து கொள்ளுவேன். இன்னும் சில நாட்களில் நான் என்னுடைய சீன மொழி வேதாகமத்தை 35வது தடவையாக வாசித்து முடிக்கப் போகின்றேன்!"

கர்த்தருடைய வேதத்தின் மேலுள்ள அவரது தாகம் யாவரும் அறிந்ததாகும். அவருடைய வேதாகமம் எப்பொழுதும் திறந்ததாகவும் தனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர் அதை தியானத்தோடு வாசித்துக் கொண்டே இருந்தார். அவர் தனது கண் பார்வையை முற்றும் இழந்து கபோதியாக இருந்த கடைசி நாட்களிலும் தினமும் 12 அதிகாரங்களை வேதத்திலிருந்து தனக்கு வாசித்துக் காண்பிக்கும்படியாக ஒரு சீன உதவியாளனை தனக்கு வைத்திருந்தார். வேத புத்தகம் தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் என்பதை பரிபூரணமாக விசுவாசித்து அதினுடைய சத்தியங்களுக்கு தனது வாழ்நாட்காலம் முழுமையிலும் அப்படியே கீழ்ப்படிந்து நடந்து வந்தார். அவர் ஒரு வல்லமையான ஜெப மாந்தன். ஜெபம், வேதவசன தியானம், மூலமாக தேவனுடைய சித்தத்தை அவர் கண்டுபிடித்து வந்தார். தேவனுடைய வசனங்கள் மேலுள்ள அவரது தாகமும் தேவனோடுள்ள அவரது இடைவிடாத ஐக்கிய சகவாசம் காரணமாக அவரது நற்செய்தி கூட்டங்களில் தேவ ஆவியானவர் மக்களை பாவ உணர்வுகளுக்குள்ளும், மனந்திரும்புதலுக்கும் வழிநடத்திச் சென்றார். "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல தேவனுடைய ஆவியினாலேயே ஆகும்" *(சகரியா 4 : 6)* என்ற தேவ வசனமும் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்" *(அப் 1 : 8)* என்ற வசனமும் அவரது வாழ்வின் யுத்தசத்தமாக இருந்தது.

இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில்
அன்புகூருகிறவராலே முற்றும்
ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்.

யோனத்தான் கோபோர்த் கண்ணற்ற கபோதி

தேவனால் இத்தனை வல்லமையாக எடுத்து பயன்படுத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான சீன மக்களை ஆண்டவருடைய மந்தையில் சேர்த்த மாபெரும் தேவ பக்தனாகிய கோபோர்த் தனது மரணத்திற்கு முன்பு 2 ஆண்டு காலம் கண் பார்வையிழந்த கபோதியாக இருந்தார் என்ற

காரியம் மனித சிந்தனைக்கும், அறிவிற்கும் அப்பாற்பட்டதொன்றாக உள்ளது. "உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது. உமது காலடிகள் தெரியப்படாமற் போயிற்று" (சங் 77 : 19) என்று சங்கீதக்காரன் அது குறித்து எழுதுவார்.

கோபோர்த் மூலமாக சீனாவில் நடைபெற்றிருந்த தேவ ஊழியங்கள் எல்லாம் மிகவும் சிறப்புற்று விளங்கின. 1932 ஆம் ஆண்டு அதைக்குறித்து ஒரு கணக்கெடுப்பை பார்த்தபோது எல்லாருடைய உள்ளங்களும் களிகூர்ந்தன. கோபோர்த் தமது ஒவ்வொரு மிஷனரி தளத்தையும் நேரில் பார்வையிட்டு அங்கு காணப்பட்ட ஆத்தும அறுவடையையும், உயிர் மீட்சியின் செய்திகளையும் அறிந்து ஆவியில் களிகூர்ந்து ஆர்ப்பரித்தார்.

அப்படிப்பட்ட மகிழ்ச்சியான நாட்கள் ஒன்றில்தான் 1932 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் மாலை நேரம் கோபோர்த் வெளிரிப்போன நிறத்தில் தனது மனைவி முன் வந்து நின்றார். தனது கணவருடைய பரிதாபகரமான நிலையைக் கண்ட ரோசலிண்ட் அம்மையார் ஆச்சரியத்தால் திடுக்கிட்டார். "ரோசி, எனது இடது கண்ணின் கருவிழி இடம் மாறியிருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன்" என்றார் கோபோர்த். அப்படித்தான் ஆகி இருந்தது.

ஏற்கெனவே, இந்த தொந்தரவு கனடாவில் இருந்தபோது ஒரு சமயம் அவருக்கு வந்தது. அதற்காக, கோபோர்த், சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் உள்ள ஒரு கண் மருத்துவமனையில் கடும் வேதனையான சிகிச்சை பெற்றது உண்டு. திரும்பவும், அந்த தொந்தரவு வரவே சீனாவின் தெற்கு மஞ்சூரியா பட்டணத்திலுள்ள டெய்ரன் என்ற துறைமுக பட்டணம் சென்று அங்குள்ள பிரசித்தி பெற்ற ஒரு கண் மருத்துவமனையில் இருந்த ஒரு புகழ்பெற்ற ஜப்பானிய மருத்துவரிடம் கோபோர்த் கொடிய வேதனை அளிக்கக்கூடிய சிகிட்சையை பெற்றார். வாரத்திற்கு மூன்று தடவைகள் அந்த மருத்துவமனைக்கு சென்று கண்ணில் ஊசி செலுத்தப்பட்டு அந்த வேதனையான சிகிச்சையை அவர் பெற்று வந்தார். எனினும் அந்த சிகிச்சைகள் எதுவும் பயன் அளிக்காமல் அவரது இரு கண்களின் பார்வையும் மறைந்து விட்டது. தனது பார்வை போய்விட்ட காரணத்திற்காக கோபோர்த் தன் அன்பின் தேவனைக்குறித்தும், அவரது வழிநடத்துதலைக் குறித்தும் ஒரு சிறிய முறுமுறுப்போ அல்லது கேள்வியோ எழுப்பவில்லை.

டெய்ரன் பட்டணத்தில் தனது தந்தையுடன் இருந்த ரூத் என்ற அவரது மகள் அந்த நாட்களில் நடந்த நிகழ்வுகள் குறித்து எழுதும் வரிகளை நாம் கவனிப்போம் :-

"எனது கணவர் ஐவரி ஜெஃப்ரி, எனது தந்தை கோபோர்த்தை வாரம் மூன்று நாட்கள் கண் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்று திரும்ப அழைத்து வந்தார்கள். கண்களின் உள் விழிகளில் போடப்பட்ட ஊசிகளின் வேதனையை தந்தை எப்படி தாங்கி பொறுத்துக் கொண்டார்களோ எங்களுக்கு தெரியாது. தனது கொடிய வேதனைகள் குறித்து ஒரு வார்த்தை கூட அவர்கள் எங்களிடம் பேச மாட்டார்கள். அப்பொழுது நாங்கள் டெய்ரன் பட்டணத்தில் அப்பாவின் கண் சிகிச்சைக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு வாடகை வீட்டில் தங்கி இருந்தோம். அந்நாட்களில் டெய்ரன் கடற்கரை துறைமுகத்துக்கு அநேக பிரிட்டிஷ் போர் கப்பல்கள் வந்து நின்று கொண்டிருந்தன. அதின் மாலுமிகள் பலரும் எங்கள் வீட்டிற்கு வந்து சென்றனர். எங்கள் வீட்டிற்கு வந்த ஒவ்வொரு கடற்படை மாலுமி மற்றும் உத்தியோகஸ்தர்களிடம் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்வின் இரட்சிப்பின் காரியம் குறித்து அப்பா பேசாமல் விடவே மாட்டார்கள். தனது கண்களின் வலியோடு ஒருபுறம் ஒதுங்கி இருக்காமல் வீட்டுக்கு வருகின்ற எல்லா மாலுமிகளிடமும் அவர்களின் இரட்சிப்பு குறித்து பேசி அவர்களின் கவனத்தை நித்தியத்துக்கு நேராக திருப்பினார்கள். தேவனை நோக்கிச் செய்யும் ஊக்கமான ஜெபங்கள் ஒருக்காலும் வீண்போகாது என்பதற்கு தான் ஒரு சாட்சி என்பதையும், சீனா தேசத்தில் தேவன் தன்னைக் கொண்டு நிறைவேற்றிய அரும்பெரும் தேவப்பணிகள் குறித்தும் அந்த கடற்படை வீரர்களிடம் கூறி அவர்களின் விசுவாசத்தை மேலோங்கி வளரச் செய்தார்கள்".

டெய்ரன் பட்டணத்திலேயே கோபோர்த் தனது கண் பார்வையை முற்றுமாக இழந்து கபோதியானார். அவரை கவனித்துக் கொள்ளவும், அவருக்கு வேதாகமத்தை தினமும் வாசித்துக் காண்பிக்கவும் ஒரு உத்தமமான கிறிஸ்தவ சீன வாலிபனை தேடினார்கள். கோபோர்த்தின் கண் பார்வையை எடுத்துக் கொண்ட கர்த்தர் தமது தாசன் மேல் இரக்கம் கொண்டு தமது கிருபையை பொழிந்தருளினார். அதின் காரணமாக வெகு துரிதமாக "கவோ" என்ற ஒரு சீன கிறிஸ்தவ இளைஞன் கோபோர்த்தின் உதவியாளனாக கிடைத்தான். தேவ மனிதர் எதிர்பார்த்த எல்லா பரிசுத்த

பண்புகளும் கவோ என்ற அந்த வாலிபனிடம் காணப்பட்டது. தினமும் தேவனுடைய வேதத்திலிருந்து 12 அதிகாரங்களை கோபோர்த்துக்கு வாசித்துக் காண்பிப்பதே அந்த வாலிபனின் பிரதான பணியாக இருந்தது. அவன் வாசிக்கும் போது ஒரு சிறு தவறு காணப்பட்டாலும் அதை உடனே கோபோர்த் கண்டுபிடித்து திருத்துவார்.

உதவியாளன் "கவோ" வுக்கு ஆகும் மாதாந்திர சம்பளத்தை மிஷன் ஸ்தாபனம் ஏற்றுக் கொள்ளாமல் கோபோர்த் குடும்பத்தினரே சந்தித்துக் கொள்ள ஆவலுடன் முன்வந்து அதற்காக அவர்கள் ஊக்கமாக ஜெபித்தார்கள். கோபோர்த்தை மிஷனரியாக அனுப்பிய மிஷன் ஸ்தாபனத்துக்கு சுமையாக இருக்கக்கூடாது என்று அவர்கள் நினைத்தனர். அதிலும், தேவன் தமது அன்பை அதிசயமாக விளங்கப்பண்ணினார். டெய்ரன் பட்டணத்தை விட்டு அவர்கள் சிப்பின்காய் என்ற அவர்களுடைய ஊழிய தளத்துக்கு திரும்பி வந்தபோது நியூயார்க் பட்டணத்திலிருந்து ஒரு மனிதர் தனது கடிதத்துடன் ஒரு பெருந்தொகைக்கான காசோலையை இணைத்து அனுப்பியிருந்தார். அந்தப் பணமானது "கவோ" என்ற அந்த கோபோர்த்தின் உதவியாளனுக்கு ஒரு ஆண்டு சம்பளத்துக்கு போதுமானதாக இருந்தது. "இந்தப்பணம் டாக்டர் கோபோர்த்துக்கு அனுப்பப்படுகின்றது. கண் பார்வையை இழந்த அவரது சுய தேவைக்காக இது பயன்படுத்தப்பட வேண்டும்" என்று அந்த கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

யோனத்தான் கோபோர்த்தின் கண் பார்வை பறிபோனதும் அவருடைய வல்லமையான தேவ ஊழியமும் அத்துடன் முற்றுப்பெற்றுவிடும் என்று எல்லாரும் எண்ணினர். ஆனால், தேவன் அதை அனுமதிக்கவில்லை. அதற்கு பின்னரும் தேவன் அவரை அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக எடுத்தாட்கொண்டார். வேதத்தில் பாண்டித்தியம் பெற்று விளங்கிய அவருக்கு வேதாகமத்தின் பல பகுதிகளும், ஏராளமான வசனங்களும் மனப்பாடமாக தெரிந்திருந்ததால் வேதாகமம் இல்லாமலேயே மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை எப்பொழுதும் போல வல்லமையாக அவரால் பிரசிங்கிக்க முடிந்தது. கண் பார்வை இழப்பின் காரணமாக தொலைதூரமான இடங்களுக்கு பிரயாணம் செய்து புற ஜாதியாருக்கு தேவனுடைய வார்த்தைகளை பிரசிங்கிப்பது அவருக்கு கடினமானதாக இருந்ததால் அந்த ஒரு ஊழியத்தை அவர் தவிர்க்க வேண்டியதாகி இருந்தது.

கண் பார்வை இழந்த பின்னர் முதன் முறையாக அவர் சிப்பின்காய் என்ற இடத்தில் தேவனுடைய செய்தியை கொடுத்தார். செய்தியை கொடுப்பதற்கு முன்னர் தனித்தனியாக மக்களை அவர் ஜெபிக்கச் சொன்னார். அப்பொழுது ஒரு ஐந்து வயது சிறுவன் ஜெபிக்கும்படியாக இரண்டு தடவைகள் முயற்சித்தும் கூடாது போயிற்று. அவன் ஜெபிக்கத் தொடங்கியதும் அவனுக்கும் மூப்பான பையன்கள் ஜெபித்து அவனை அப்படியே ஜெபிக்காமல் செய்துவிட்டனர். சிறுவனுக்கு துக்கம் தாங்காமல் போய்விட்டது.

கூட்டம் முடிவுற்றதும் அந்த சிறுவன் கோபோர்த் அண்டை ஓடிச்சென்று அவரது முகத்தை உற்று நோக்கியவனாக அவரது இரு கரங்களையும் பற்றிக் கொண்டான். அவன் அவரைப்பார்த்து "எனக்கும் ஜெபிக்க முடியும்" என்று கூறினான். அதற்கு மாறுத்தரமாக "உனக்கு ஜெபிக்கக் கூடும் என்பது எனக்கும் தெரியும். ஏனெனில், நீ கூட்டத்தில் ஜெபிக்க முயற்சித்த உன் குரலை நான் கேட்டேன்" என்று கோபோர்த் கூறினார். "அப்படியானால் உங்களது கண்பார்வை இப்பொழுது சற்று தெளிவாக இருக்கின்றதோ?" என்று சிறுவன் கேட்டான். "இன்னும் பார்வை கிடைக்கவில்லை. ஆனால், நீ கட்டாயம் அதற்காக ஜெபிக்க வேண்டும்" என்று தேவ மனிதர் கூறினார். "ஓ, கட்டாயம் உங்கள் கண் பார்வைக்காக நான் ஜெபித்து வருவேன்" என்று கூறினவனாக அவரது கரங்களை இன்னும் அன்பொழுக பற்றிக் கொண்டான்.

பரிசுத்த குடும்பத்தை சந்தித்த மரணங்கள்

கோபோர்த் தம்பதியினர் சீன தேசம் சென்றடைந்த மறு ஆண்டின் வசந்த காலத்திலேயே அவர்களது முதற் குழந்தை "ஜெர்ட்ரூட் மாடலின்" சீதபேதியால் மரித்துப் போனாள். எவ்வளவோ முயற்சித்தும் அந்த அன்பு குழந்தையை அவர்களால் காப்பாற்ற முடியாது போயிற்று. அந்தக் குழந்தையின் மரணம் குறித்து கோபோர்த் கனடாவிலுள்ள தனது மிஷன் ஸ்தாபனத்துக்கு கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதினார் :-

"எனது அருமை குமாரத்தி ஜெர்ட்ரூட் மாடலின் மரித்து போனாள். அவளது பிரிவு எங்கள் இருவரின் தாங்கொண்ணா துயரமாகும். இரண்டு வாரங்களுக்கு முன்னர் மகள் பூரண சுகதேகியாக இருந்தாள். ஆனால், சீதபேதியால் தாக்குண்ட 6 நாட்களுக்குள்ளேயே அவள் மரித்துவிட்டாள். வெளிநாட்டவர்களுக்கு இங்கு லிஞ்சிங்கில்

கல்லறை தோட்டம் இல்லாததால் மகளை புதைப்பதற்கு இங்கு இடம் இல்லை. எனவே, மகளின் சரீரத்தை ஒரு கட்டை வண்டியில் ஏற்றி 50 மைல்கள் தொலைவிலுள்ள பாங்ச்வாங் என்ற இடத்திற்கு கொண்டு சென்றோம். இரவு 11 மணிக்கு நாங்கள் புறப்பட்டு அடுத்த நாள் விடியற்காலை 5 மணிக்கு பாங்ச்வாங் போய் சேர்ந்தோம். அந்த இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த நாங்கள் மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் அந்த இடத்தைவிட்டு கிளம்பி இங்கு வந்திருந்தோம். பாங்ச்வாங் மிஷன் காம்பவுண்டில் எங்கள் அன்புக் குழந்தை மாடலின் எல்லாருக்கும் பிரியமானவள். சிறியோர், பெரியோர் அனைவரின் இருதயத்தையும் அவள் கவர்ந்திருந்தாள். மூன்று வாரங்களுக்கு முன்னால் தங்களைவிட்டு ஜீவனோடும், மகிழ்ச்சியின் குதூகலத்தோடும் போன குழந்தை மரித்து சடலமாக திரும்பவும் அவர்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது அங்குள்ள மக்களுக்கு ஆறாத துயரமாக இருந்தது. சீன மொழியில் மாடலினுக்கு அடக்க ஆராதனை நடத்தப்பட்ட பின்னர் நாங்கள் அவளது சரீரத்தை கரடுமுரடான ஒரு பிரேதப் பெட்டியில் வைத்து, பூக்களால் அதை அலங்கரித்து கிராமத்தின் புற மதிலுக்கு அப்பால் அடக்கம் செய்தோம். இருள் சூழ்ந்து கொண்டிருந்த அந்த மாலை நேரத்தில் குழந்தையின் அடக்கத்தை சில சீன அஞ்ஞானிகள் ஆச்சரியத்தோடு நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். ஏற்கெனவே அந்த இடத்தில் 2 வெளிநாட்டுக் குழந்தைகள் அடக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

அன்று இரவு மாடலினுக்காக ஒரு ஜெபக்கூட்டம் நடைபெற்றது. "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள், அவர்களை தடைபண்ணாதிருங்கள்" என்ற வசனத்தின் பேரில் சங்கை ஸ்மித் அவர்கள் பேசினார்கள். சிறு குழந்தைகள் தங்கள் இருதயத்தை ஆண்டவர் இயேசுவுக்கு கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும், மரணம் எந்த நேரமும் அவர்களைச் சந்திக்கலாம் என்றும் அவர் பேசினார். நான் மறு நாள் காலை எனது அருமை மகளின் கல்லறையைப் பார்க்க சென்றேன். என்ன ஆச்சரியம், எனக்கு முன்பாக இரண்டு மிஷனரி குழந்தைகள் ஃபுளோராவும், கேரியும் எனது மகளின் கல்லறைக்குச் சென்று அதை காட்டுப் புஷ்பங்களால் அலங்கரித்து கல்லறையை மூடியிருந்த மிருதுவான களிமண்ணில் எனது அருமை மகளின் பெயரின் முதன்மை இரு எழுத்துக்களை "ஜி.ஜி." (ஜெர்ட்ரூட் கோபோர்த்)

எழுதிவைத்து விட்டு அங்கு நின்று கொண்டிருந்தனர். தங்களுக்கு அருமை யானவர்களை மரணத்தின் மூலமாக இழக்கக் கொடுத்தவர்களுக்குத்தான் அதின் கடுந்துயரம் தெரியும். எங்களுக்கோ அந்த துயரம் இன்னும் அதிகம். காரணம், நாங்கள் தொலைதூரமான தேசத்தில் உற்றார், உறவினர் எவருமின்றி தனிமையாக அல்லவா இருக்கின்றோம்!"

அடுத்து வந்த வருடம் டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி கோபோர்த் தம்பதியினருக்கு ஆண்டவர் ஒரு அழகான பாலகனை கொடுத்தார். அவர்கள் அவனுக்கு டோனால்ட் என்று பெயர் சூட்டி பாசத்தோடு அதை வளர்த்தனர். அந்த குழந்தை அவர்களுடன் 19 மாதங்கள் மாத்திரமேதான் இருந்தது. ஒரு நாள் அந்தப் பாலகன் வீட்டு வராந்தாவிலே ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தபோது வராந்தாவிலிருந்து தவறி கீழே விழுந்து அங்கிருந்த பூந்தொட்டியின் மீது அவனது தலை மோதிற்று. ஆரம்பத்தில் அது ஒன்றும் தெரியவில்லை. ஆனால், துரிதமாகவே குழந்தை தனது கைகால்களை பயன்படுத்த இயலாது போயிற்று. கடுமையான வெயில் தணிந்ததும் ஷாங்காய் பட்டணத்துக்கு பாலகனை சிகிட்சைக்காக கொண்டு செல்ல பெற்றோர் நினைத்திருந்தனர். ஆனால், அதற்குள்ளாகவே பாலகன் டோனால்ட் ஆண்டவரண்டை சென்றுவிட்டான்.

திரும்பவும் இரண்டாம் தடவையாக கோபோர்த் தம்பதியினர் தங்களது மரித்த அருமை குழந்தையின் சரீரத்தை ஒரு கட்டை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு பாங்ச்வாங் என்ற கிராமம் நோக்கிச் சென்றனர். அங்கு அவனை அவளது அக்கா மாடலின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்துவிட்டு தாங்கொண்ணா துயரத்துடன் பெற்றோர் திரும்பி வந்தனர். இவை யாவற்றிலும் தேவ மனிதர் கோபோர்த்தும் பரிசுத்தவாட்டி மனைவி ரோசலிண்ட் அம்மையாரும் ஆண்டவர் பேரில் எந்த ஒரு முறுமுறுப்போ, மனக்கசப்போ கொள்ளாமல் "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதை செய்வாராக" என்று சொல்லி ஆண்டவருடைய பரிசுத்த சித்தத்துக்கு தங்களை ஒப்புவித்து அமர்ந்திருந்தனர்.

பின் வந்த நாட்களில் ஃபிளாரன்ஸ் என்ற அவர்களுடைய மற்றொரு குமாரத்தியும் மரித்தாள்.

மரண நிழலின் பள்ளத்தாக்கு

1900 ஆம் ஆண்டு சீனா தேசத்தில் பாக்ஸர் கலவரம் மூண்டது. வெளிநாட்டினரை கொல்லுவதே அந்த கலவரத்தின் ஒரே குறிக்கோளாகும். அதின்படி நூற்றுக்கணக்கான வெளிநாட்டு மிஷனரிகளும், ஏராளமான சீன கிறிஸ்தவ மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். அப்பொழுது சீன தேசத்தில் மிஷனரிகளாக பணியாற்றிய கோபோர்த் தம்பதியினருக்கும் மரணம் தலைவாசலில் வந்து நின்றது. அந்தக் கலவரத்தில் அவர்கள் உயிர் தப்பியதே ஒரு பெரிய அதிசயமும், தேவச் செயலுமாகும். பாக்ஸர் கலவரம் சீன தேசம் எங்கும் கொந்தளிப்பாக நடந்து கொண்டிருந்தது.

" பாக்ஸர் கலகக்காரர்கள் சீனாவின் வடக்கு வழியை துண்டித்துவிட்டனர். உங்கள் ஜீவன் தப்ப வேண்டுமானால் தெற்கு நோக்கி ஓடுங்கள்" என்ற அவசரமான செய்தி ஜெஃப்பூ என்ற சீன பட்டணத்திலுள்ள அமெரிக்க தூதரகத்தின் மூலமாக கோபோர்த் தம்பதியினருக்கு கிடைத்தது. அப்பொழுதுதான் அவர்களுடைய அருமைக் குமாரத்தி ஃப்ளாரன்ஸ் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்தாள்.

கோபோர்த் தம்பதியினரும், கிறிஸ்தவ வெளிநாட்டு மிஷனரிகள் சிலரும் தங்களுக்கு கிடைத்த தகவலின்படி தெற்கு நோக்கி தங்கள் ஜீவன் தப்ப ஓட ஆயத்தமாயினர். இந்த வேளையில் ஃப்ளாரன்ஸ் மரணமடைந்தாள். அவளை அடக்கம் செய்துவிட்டு தம்பதியினர் தங்களது எஞ்சிய நான்கு குழந்தைகளுடன் தங்கள் பயணத்தை ஆரம்பித்தனர். மிஷனரிகளின் திட்டப்படி 14 நாட்கள் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்து பாஞ்செங் என்ற இடத்தை அடைந்து அங்கிருந்து 10 நாட்களுக்கும் கூடுதலாக நாட்டுப்படகில் பயணம் செய்து ஹன்கோ பட்டணம் போய் சேருவதாக இருந்தது.

அதின்படி 10 மாட்டு வண்டிகளில் மிஷனரிகள் தங்களது பிரயாணத்தை ஆரம்பித்தனர். பாக்ஸர் கொலைகாரர்களுக்கு தெரியாமல் மறைவாக இருப்பதற்காக மாட்டு வண்டிகள் சீன தேசத்து நாடோடி மக்களின் மாட்டு வண்டிகளைப் போல வடிவமைக்கப்பட்டு புல்லினால் செய்யப்பட்ட பாய்களால் மூடப்பட்டிருந்தன. மாட்டு வண்டிகளில் மிஷனரிகளின் ஏராளமான பொருட்களும் ஏற்றப்பட்டிருந்தன. பகலில்

கடுமையான வெயிலில் பிரயாணம் செய்து இரவில் மிஷனரி குடும்பங்கள் கடுமையான பனிப்பொழிவுகள் இருந்த திறந்த வெளிகளில் படுத்து வந்தனர். மாட்டு வண்டி பிரயாணம் நரக வேதனையாக சொல்லொண்ணா துயரத்தை அவர்களுக்கு கொடுத்தது. கரடு முரடான அந்த வண்டிகளில் ஸ்பிரிங் கம்பிகள் இல்லாததால் அவர்களுடைய சரீரம் நொந்து, தொய்ந்து போனது. ஆரம்பத்தில் சில தினங்கள் அவர்களுடைய பிரயாணம் எந்த ஒரு தடங்கலும், இடையூறும் இல்லாமல் அமைதியாக சென்று கொண்டிருந்தது. ஆனால், வழியில் அவர்களுக்கு எத்தனை கொடிய ஆபத்து காத்திருக்கின்றது என்பது அப்பொழுது அவர்களுக்குத் தெரியாது.

தங்களுடைய பிரயாணத்தில் ஒரு குறிப்பிட்ட பட்டணத்தின் கோட்டையின் பிரதான கதவுக்கு முன்னால் அநேக நூற்றுக்கணக்கான பாக்ஸர் கலகக்காரர்கள் துப்பாக்கிகள், வாள்கள், கற்கள் போன்றவைகளுடன் கோபாவேசத்துடன் நின்று கொண்டிருந்தனர். வண்டிகள் பட்டணத்தை நெருங்க, நெருங்க அவர்கள் கற்களை வண்டிகளில் வீசினர். வண்டிகள் புற்பாய்களால் மூடப்பட்டிருந்ததால் கற்கள் மிஷனரிகளின் மேல் விழவில்லை. பின்னர் துப்பாக்கியால் சுட்டனர். அந்த குண்டுகள் வண்டி மாடுகள் மேல் பட்டு மாடுகள் ஒன்றிரண்டு கீழே விழுந்தன. பயங்கரமான நிலையை அறிந்த கோபோர்த் வண்டியைவிட்டு கீழே இறங்கி கூட்டத்தினரிடம் சென்று "எங்கள் பொருட்களையும், எங்களுக்குரியவைகள் அனைத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எங்களையும், எங்கள் அன்புக் குழந்தைகளையும் மாத்திரம் தயவுசெய்து கொல்லாதேயுங்கள்" என்று கெஞ்சினார். அந்த நேரம் ஒரு கொடியவன் தனது வாளை ஓங்கி கோபோர்த்தை வெட்டினான். அந்த வெட்டு அவரது தலைமேல் இருந்த அவரது தலைக்கவசத்தை நொறுக்கி முதுகிலும் பெரிய இரத்த காயத்தை ஏற்படுத்திற்று. கோபோர்த் உடனே தரையில் சாய்ந்து விழுந்தார்.

இந்த பயங்கரமான வேளை தேவனது அதிசயம் நடைபெற்றது. "பயப்படாதே, மக்கள் உனக்காக ஜெபித்துக்கொண்டிருக்கின்றனர்" என்ற தெளிவான தேவனுடைய குரலை அவரது காதுகள் கேட்டன. என்ன ஆச்சரியம்! இந்த வேளையில் ஒரு குதிரை கூட்டத்தினுள்ளே நாற்கால் பாய்ச்சலில் பாய்ந்து வந்து கோபோர்த்துக்கும், கொலைகாரர்களுக்கும் இடையில் வந்து கோபோர்த்தண்டை விழுந்து

தனது கால்களை பலமாக தரையில் உதறி கோபோர்த்தை எவரும் நெருங்காதபடி செய்து கொண்டிருந்தது. அந்த குதிரை தனது முதுகில் சவாரி செய்த தனது எஜமானனை எங்கேயோ வீசி எறிந்துவிட்டு வந்திருந்தது. கோபோர்த் தனது சுயநினைவுக்கு திரும்பி தரையிலிருந்து எழும்பும் வரை அந்தக் குதிரை அவ்வாறு தனது கால்களை மூர்க்கத்தனமாக உதறிக்கொண்டிருந்தது. இதற்கிடையில் கொலைகார கூட்டத்தினர் கோபோர்த்தை வெட்டுவதை விட்டுவிட்டு 10 மாட்டு வண்டிகளில் இருந்த பொருட்களை முற்றுமாக கொள்ளையடித்தனர். கொள்ளைப் பொருட்களை பங்கிடுவதில் கொலைகார கும்பலினருக்கு இடையே கடும் சண்டை மூண்டதால் அதை பயன்படுத்தி மிஷனரிகள் வண்டிகளிலிருந்து இறங்கி அந்த இடத்திலிருந்து கால் நடையாக நடந்து மற்றொரு கிராமத்துக்கு வந்து சேர்ந்தனர். இதற்கிடையில் ரோசலிண்ட் அம்மையாரை ஒரு கொலைகாரன் வாளால் வெட்டினான். அந்த வெட்டுக்கு அவர்கள் ஆச்சரியமாக தப்பிக்கொண்டார்கள். ஆண்டவருடைய சித்தமில்லாமல் தலையிலுள்ள ஒரு முடி கூட விழாது அல்லவா? அப்படித்தான் அங்கு நடந்தது. அந்த பரிசுத்த மக்களின் பாதுகாவலை தேவன் தமது கரத்தில் எடுத்திருந்தார். கோபோர்த்தினுடைய நான்கு குழந்தைகள் இந்த ஆபத்தான சூழ்நிலையிலும் எப்பொழுதும் கொலைகார கூட்டத்தினரைப் பார்த்து சிரித்துக் கொண்டும், தங்கள் சிறிய அன்புக் கரங்களை அசைத்துக் கொண்டும் இருந்தபடியால் அந்த கொலைகாரர்களின் உள்ளத்தில் கருணையும், இரக்கமும் பிறந்தது. சீனர்களுக்கு குழந்தைகள் என்றால் அலாதி அன்பாகும்.

பக்கத்து கிராமத்தை வந்தடைந்ததும் கோபோர்த்தின் வெட்டுக் காயங்களிலிருந்து ரத்தம் சற்று கூடுதலாக வடிந்து கொண்டிருந்தமையால் அவர் தரையில் விழுந்து தனது கால்களை உதறிக்கொண்டிருந்தார். அதைக் கண்ட ரோசலிண்ட் அம்மையார் தனது கணவனண்டை அமர்ந்து கதறி அழுதார்கள். அதைக் கண்ணுற்ற அன்புள்ளம் கொண்ட அந்த கிராமவாசிகள் ஓடிச்சென்று ஒருவித மெல்லிய மாவைக்கொண்டு வந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்த காயத்தில் வைத்து இரத்தப்போக்கை உடனடியாக நிறுத்தினார்கள். கிராமத்திலுள்ள பலரும் கோபோர்த்துக்கு உதவி செய்தனர். அந்த கிராமவாசிகள் மிஷனரிகளுக்கும், குழந்தைகளுக்கும் சூடான கூழ்கள் மற்றும் வேண்டிய ஆகாரங்களை கொடுத்து அவர்களை ஆற்றித்தேற்றி அரவணைத்தனர்.

குழந்தைகளுக்கு போடுவதற்கு தங்களிடமிருந்த பழைய உடைகளை கொடுத்தனர். அத்துடன் ரோசலிண்ட் அம்மையார் போட்டுக் கொள்ள ஒரு ஜோடி பழைய செருப்பையும் கொடுத்தனர். அம்மையாரின் செருப்புகளைக்கூட கொலைகாரர்கள் பிடுங்கிக்கொண்டனர். அந்த கிராமவாசிகள் மிஷனரிகளுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் பாராட்டிய அன்பு கொஞ்சமல்ல. அதற்கான காரணத்தை மிஷனரிகள் அந்த அன்புள்ள கிராமவாசிகளிடம் கேட்டபோது அவர்கள் சொன்ன பதில் இதுதான் :- "நாங்கள் முகமதியர்கள். நீங்கள் எந்த கடவுளை வழிபடுகின்றீர்களோ அவரைத்தான் நாங்களும் தொழுகின்றோம். மற்றவர்களைப் போல நாங்களும் உங்களை துன்புறுத்தி, கொல்ல முயற்சிப்போமானால் அல்லது உங்கள் பொருட்களை கொள்ளையிடுவோமானால் நாங்கள் எங்கள் ஆண்டவருக்கு முன்பாக ஒரு நாள் நிற்கும்போது நாங்கள் அவருக்கு பதில் சொல்லி ஆக வேண்டும். அவரது முகத்தை தைரியமாக எங்களால் பார்க்க முடியாது" என்று கூறினார்கள்.

அதின் பின்னர் மிஷனரிகள் பயணம் செய்து வந்த வண்டிகளில் சில அந்த கிராமத்துக்கு வந்து சேர்ந்தன. அவைகளில் ஏறி அவர்கள் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர். முன்பு போல வண்டிகளில் வசதியாக அவர்களால் இப்பொழுது உட்கார இயலவில்லை. வண்டிக்கு 7 பேர் உட்கார வேண்டியதானது. காரணம் வண்டியின் எண்ணிக்கை குறைந்து விட்டது. 30 மணி நேரங்களுக்கு பின்னர் கோபோர்த்தின் பலத்த வெட்டுக்காயத்துக்கு ஓரிடத்தில் சிகிட்சை செய்யப்பட்டது. அவர்களுடைய தொடர் பயணத்தில் மேலும் பல இடங்களில் பாக்ஸர் கொலைகார கும்பல்கள் அவர்களை சந்தித்தனர். ஆனால், உடம்பெல்லாம் காயப்பட்டு, எந்த ஒரு பொருட்களும் இல்லாமல் பிச்சைக்காரர்களாக சென்று கொண்டிருந்த அந்த பரிதாபகரமான மிஷனரிகளையும், பசியால் வாடும் குழந்தைகளையும் கண்டபோது அவர்கள் இரக்கமுற்று எந்த ஒரு தீங்கும் செய்யாமல் அவர்களை விட்டுவிட்டனர். இந்தப் பிரயாணத்தில் அவர்கள் பசி, தாகம், வெயில், குளிர், நிர்வாணம், சரீர உபாதைகள் என்று எத்தனை எத்தனையோ பாடுகள் பட்டனர். தமது பரிசுத்த மக்களை கண்ணின்மணி போல பாதுகாக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டமான தீர்மானமாக இருந்ததால் அவர்கள் கடைசியாக சுகபத்திரமாக தாங்கள் சென்று அடையவேண்டிய இடமான ஹன்கோ பட்டணத்துக்கு வந்து சேர்ந்தனர்.

சீன தேசத்திலிருந்து கண்ணீரின் பிரிவுபச்சாரம்

யோனத்தான் கோபோர்த் சீன தேசத்தில் சுமார் 45 ஆண்டு காலம் கர்த்தருக்கு மகிமையானதோர் தேவப்பணி செய்து, ஆயிரக்கணக்கான சீன மக்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடிமைகளாக்கி, அநேக இடங்களில் மிஷனரி பணித்தளங்களை தோற்றுவித்து, அவைகளை பின் நாட்களில் வழிநடத்திக் கொண்டு செல்ல ஏராளமான சீன தேவ ஊழியர்களை உருவாக்கிக் கொடுத்து, தனது அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் கர்த்தருக்கு மகிமையாகவும், உத்தமமாகவும் நிறைவேற்றி முடித்த பின்னர் தனது கண் பார்வை இழந்த காரணத்திற்காகவும், முதுமை காரணமாகவும் தனது தாய்நாடு திரும்பிச் செல்ல வேண்டியதானது.

கோபோர்த் கடைசியாக தேவப்பணி புரிந்த சிப்பின்காய் என்ற இடத்தில் கோபோர்த் தம்பதியினருக்கு சிறப்பான பிரிவுபச்சார விழா நடைபெற்றது. அதற்கான ஆயத்தங்கள் பல நாட்களுக்கு முன்பதாகவே தொடங்கிவிட்டது. குறிப்பிட்ட நாளில் சிப்பின்காய் சிற்றாலயம் தேவ வசனங்கள் எழுதப்பட்ட பட்டு, வெல்வெட், மற்றும் சாட்டின் துணி பானர்களால் சிற்றாலய சுவர்கள் முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தேவமனிதர் கோபோர்த்துக்கு முன்பாக ஒரு நீண்ட மேஜையில் 12 அழகான வெள்ளி கேடயங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதில் "இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரன்" என்றும் "அன்பை பின் வைத்துப்போகும் ஒரு உத்தம பாஸ்டர்" என்பது போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக சீன தேச தேவ ஊழியர்களும் மிஷனரிகள் அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் விதவிதமான கவர்ச்சியான வண்ணங்களில் ஷாங்காய் பட்டணத்தில் கைப்பின்னல் வேலையால் உருவாக்கப்பட்ட "அன்பு" என்ற வார்த்தை நேர்த்தியாக சட்டமிடப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தது. அதை கோபோர்த்துக்கென்று அன்பளிப்பு செய்திருந்தவர் சிப்பின்காய் வாசியான ஒரு வர்த்தகராவார். அந்த வர்த்தகர் ஒரு காலத்தில் மிகவும் கொடிய துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்தவர். அந்த மனிதரை கோபோர்த் ஆண்டவருடைய கல்வாரி அன்புக்குள் வழிநடத்தி அவரை எப்பொழுதும் ஆண்டவர் இயேசுவோடு இணைந்து வாழும் ஒரு உன்னத அனுபவத்துக்குள் கொண்டு வந்து வைத்திருந்தார். கோபோர்த்துக்கு முன்பாக சபை மக்களால்அளிக்கப்பட்ட அநேக வெகுமதிகள் இருந்தன.

பாஸ்ட்டர் சுயூ என்பவர் 2 தங்க மோதிரங்களை அன்பளிப்பாக கொடுத்து "இந்த மோதிரங்கள் உங்களுடைய சரீரங்களோடு எப்பொழுதும் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும். நான் உங்கள் மேல் கொண்டுள்ள அளவு கடந்த அன்புக்கு இது அடையாளம்" என்று கூறினார்.

அந்தக் கூட்டத்தில் பேசிய பலரும் துக்கம் தாளாது அழுது கொண்டே தங்கள் உரைகளை முடித்தனர். சிலர் துயரம் தாழாது பூமியில் விழுந்தனர். "எலியா தீர்க்கன் நம்மைவிட்டு பிரிந்து செல்லுகின்றார். நாம் எல்லாரும் எலிசா தீர்க்கதரிசிகளாக மாற்றம் அடைந்து தேவனுக்கு ஊழியம் செய்து கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்" என்று ஒரு தேவ ஊழியர் சொன்னார்.

மூன்று நாட்களுக்கு பின்னர் சிப்பின்காய் ரயில் நிலையம் கிறிஸ்தவ விசுவாசிகளாலும், சபை மக்களாலும், தேவ ஊழியர்களாலும், மிஷனரிகளாலும் நிறைந்து வழிந்தது. ரோசலிண்ட் அம்மையார் தனது கணவரை ரயில் பெட்டியின் ஜன்னல் ஓரமாக வசதியாக உட்கார வைத்தார்கள். திரள் கூட்டம் மக்கள் தங்களை விட்டு கடந்து செல்லும் தங்கள் அன்பு தேவ ஊழியரின் முகத்தை தங்கள் வாழ்வில் இறுதியாக பார்க்க கண்ணீரோடு முண்டியடித்துக் கொண்டிருந்தனர். கோபோர்த் தனது அன்பு மக்களை தனது கண்களால் காணக்கூடாவிட்டாலும் அவரது இருதயம் அவர்களோடு இருந்தது. அடிக்கடி தனது முகத்தை வானத்துக்கு நேராக ஏறெடுத்துக் கொண்டிருந்தார். அது, "என் பிள்ளைகளே, திரும்பவும் நாம் பரலோகத்தில் ஒன்றாக சந்திக்கப் போகின்றோம் என்ற மகிமையின் நம்பிக்கை நமக்குள்ளது" என்று அவர் கூறுவது போல இருந்தது.

கோபோர்த்தின் உதவியாளன் "கவோ" தான் துக்கம் தாங்க முடியாமல் முதலில் ரயில் நிலையத்தில் கதறி அழுதான். அவன்தான் அவருக்கு அருகில் ஜன்னல் ஓரமாக நின்று கொண்டிருந்தான். அவன் அழுவதைத் தொடர்ந்து மற்ற மக்கள் எல்லாரும் கதறி அழுதனர். ரயில் வண்டி மெதுவாக நகர்ந்தது. மக்கள் அழுது கொண்டே ரயில் பெட்டியை தொடர்ந்து ஓடினர். தேவ மனிதரின் காட்சி மறையும் வரை அவர்கள் அழுதுகொண்டே ஓடிக்கொண்டிருந்தனர். ஆ, எத்தனை உருக்கமும், நெஞ்சத்தை நெகிழ வைப்பதுமான கண்ணீர் காட்சி அது!

கோபோர்த் தம்பதியினர் கோப் என்ற துறைமுகப்பட்டணம் வந்து சேர்ந்தனர். கோப் துறைமுகத்தில் அநேக சின்னஞ்சிறிய அழகான மிஷனரி குழந்தைகள் கோபோர்த்தை சூழ்ந்து கொண்டனர். அவர்கள் அவரோடு ஒட்டிக்கொண்டே இருந்தனர். ஏராளமான மிஷனரிகளும் தேவ மனிதரை விடைகொடுத்து அனுப்ப வந்திருந்தனர். அங்கிருந்து கோபோர்த் தம்பதியினர் "ஜப்பானின் ராணி" என்ற கப்பலில் ஏறி கனடா நாட்டிலுள்ள வான்கூவர் பட்டணத்துக்கு பயணமானார்கள். அந்த கப்பலிலேயே தேவ மனிதருக்கு 76 ஆம் வயது பிறந்தது. கப்பலிலேயே அவரது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. கப்பலிலுள்ள மாலுமிகளும், உத்தியோகஸ்தர்களும், பயணிகளும் மாபெரும் மிஷனரியும், உண்மையும் உத்தமுமான தேவ பக்தனான கோபோர்த்தண்டை வந்து அவரை வாழ்த்தி அவருடன் கை குலுக்கிக் கொண்டனர்.

தேவ மனிதரின் இறுதி நாட்கள் - உச்சித மோட்ச பட்டண பயணம்

தேவ மனிதர் கோபோர்த்தின் வாழ்நாளின் கடைசி ஓய்வுநாள் ஒண்டேரியாவிலுள்ள ரிவர்டேல் என்ற இடத்திலுள்ள பிரஸ்பிட்டேரியன் தேவாலயத்தில் செலவிடப்பட்டது. அங்கு அவர் அன்று 4 தடவைகள் பிரசங்கித்தார். காலை, மாலை ஆராதனைகள், ஓய்வு நாள் பள்ளியில் அவர் தேவ செய்தி கொடுத்தார். அவருடைய அந்த நாளின் தேவ செய்திகள் மிகுந்த தேவ வல்லமையோடு காணப்பட்டது. அந்த தேவ செய்திகளை கேட்ட மக்களிடமிருந்து பின் வந்த நாட்களில் கிடைத்த அறிக்கை யாதெனில் கோபோர்த் அவர்களின் பிரகாசமான முகச்சாயல் என்றுமில்லாத விதத்தில் அப்பொழுது பிரகாசமாக இருந்தது என்றதுதான். அவருடைய அந்த நாளின் தேவச் செய்தியை கேட்ட பெர்த்தா மெர்சி என்ற பெண்மணி இவ்வாறு கூறுகின்றார்கள் :-

"சங்கை மாக் பெர்சன் அவர்கள் டாக்டர் கோபோர்த்தை தேவாலயத்தின் பிரசங்க பீடத்துக்கு அவரது கரத்தைப் பற்றிப் பிடித்து அழைத்துச் சென்ற போது கோபோர்த் உறுதியாக தனது காலடிகளை எடுத்து வைத்தவராக நிமிர்ந்த தலையுடன் முன் நோக்கி சென்று கொண்டிருந்தார். அவரது முகம் கிறிஸ்து இரட்சகரின் மேலுள்ள ஆனந்தத்தின் காரணமாக பிரகாசமாக இருந்தது. கண் பார்வை இழந்த கபோதியான அவர் தனது முகத்தை பரலோகத்துக்கு நேராக திருப்பினார்.

பூமிக்குரியவைகளை தான் காணக்கூடாதபோதினும் பரலோகத்தை தன்னால் நன்கு பார்க்க முடியும் என்று சொல்லுவதைப் போல அந்தப் பார்வை அமைந்திருந்தது. தேவாலயத்தில் கூடியிருந்த மக்கள் மிகுந்த பக்தி வினயத்தோடும் மகா அமைதியோடும் தேவ பக்தனின் செய்தியை கவனித்தனர். அவருடைய செய்தி பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு புறப்பட்டது".

செப்டம்பர் மாதம் 26 ஆம் நாள் யோனத்தான் கோபோர்த்தும் அவரது மனைவி ரோசலிண்ட் அம்மையாரும் அவர்களுடைய மகன் பிரட்ரிக் என்பவர் குருவானவராக பணி செய்த ஒண்டோரியாவிலுள்ள வாலஸ்பர்க் என்ற இடத்திற்கு புறப்பட்டு சென்றனர். அங்கு பல இடங்களிலும் கோபோர்த் தேவ செய்தி கொடுக்கும்படி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சற்றும் இடைவெளி இல்லாத ஊழியத்திட்டம் அது. பகற்காலம் முழுவதும் ஆங்காங்கு ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் கர்த்தருடைய செய்தியை கொடுத்துவிட்டு மாலையில் வாலஸ்பர்க்கிலுள்ள தனது மகனுடைய வீட்டுக்கு திரும்பி வந்துவிடுவது என்பது அந்த திட்டம். அதின்படி அக்டோபர் மாதம் 7ஆம் நாள் புதன்கிழமை கோபோர்த் 40 மைல்கள் தொலைவிலுள்ள ஓரிடத்தில் அந்த நாளின் பகற் காலங்களில் கர்த்தருடைய செய்தியை கொடுத்துவிட்டு வீடு திரும்பினார். "கொரியா தேசத்தில் எழுப்புதல் அக்கினி எவ்விதமாக பரிசுத்த ஆவியானவரால் ஊற்றப்பட்டது" என்பதே அந்த நாளின் மாலை வேளை கோபோர்த் கொடுத்த சற்று நீளமான தேவ வல்லமையின் செய்தியாகும். அந்த இறுதி கூட்ட முடிவில் கூடிவந்தோர் யாவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஆனால், கோபோர்த் தனக்கு அஜீரணமாக இருப்பதாகக்கூறி அதை அருந்தவில்லை. அந்த இடத்திலிருந்து புறப்பட்டு வீடு வந்து சேர்ந்து தனது இரவு இளைப்பாறுதலுக்கு செல்ல கோபோர்த்துக்கு மிகவும் பிந்திவிட்டது. இரவின் பிந்திய மணி நேரத்தில் தான் அவர் தூங்கச் சென்றார்.

அடுத்த நாள் காலை மற்றொரு இடத்திற்கு தேவ ஊழியத்துக்காக பயணப்பட வேண்டும். ரோசலிண்ட் கோபோர்த் அம்மையார் வழக்கம் போல காலையில் எழுந்து ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது காலை ஏழு மணி. தனது கணவர் கண் விழித்து எழுவதற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லாதிருந்தது. ரோசலிண்ட் அம்மையார் தனது கணவரை சற்று கூர்மையாக கவனித்தபோது அவர்

நித்திரை செய்பவரைப் போல காணப்படாமல் சற்று வித்தியாசமாக காணப்பட்டார். அம்மையார் மிகவும் அருகில் வந்து அவரைப் பார்த்தபோது கோபோர்த் அவர்களின் மண்ணுக்குரிய ஜீவனற்ற சடலம் மாத்திரமே அங்கிருந்தது. கோபோர்த் தனது ஜீவ காலம் முழுவதும் உண்மையும், உத்தமுமாக சேவித்து ஆராதித்து வந்து தன் அருமை ஆண்டவரின் பொன் முகம் தரிசிக்க இப்பொழுது கடந்து சென்றுவிட்டார். தனது ஒரு கரத்தின் மேல் தனது கன்னத்தை வைத்து ஆழ்ந்த இளைப்பாறுதலில் இருப்பவராக அவர் காணப்பட்டார். ரோசலிண்ட் அம்மையார் கண்விழித்த அதே காலை நேரம்தான் அவரது உயிர் பிரிந்ததாக அவரை வந்து பரிசோதித்த மருத்துவர் கூறினார். "மரணத்தின் கூரை அனுபவிக்காமலே அவரது ஜீவன் சரீரத்திலிருந்து விடைபெற்றிருப்பதாக" மருத்துவர் மேலும் சொன்னார்.

பூமியில் ஒரு கணம் தனது கண்களை மூடி அடுத்த கணம் இம்மானுவேலரின் மகிமை தேசத்தில் தனது கண்களை அவர் திறந்தார். சில வாரங்களுக்கு முன்னர்தான் அவர் "பென்லிப்பன்" என்ற இடத்தில் பேசும்போது "அடுத்தபடியாக நான் விரைவில் தரிசிக்கப் போகும் முகம் எனது அருமை இரட்சகர் இயேசுவின் முகம்தான்" என்று மிகுந்த ஆனந்த களிப்போடு கூறியிருந்தார். அப்படியே அவர் தனது நேச கர்த்தரை முகமுகமாக காணச் சென்றுவிட்டார். "நான் விழிக்கும் போது உமது சாயலால் திருப்தி ஆவேன்" (சங் 17 : 15) என்று சங்கீதக்காரன் கூறுவார்.

கோபோர்த்தின் வல்லமையுள்ள தேவ ஊழிய ஆசீர்வாதத்தின் இரகசியம்

அருமை இரட்சகர் இயேசுவின் பரிசுத்த தேவ பணியில் கோபோர்த்தை தேவன் இத்தனை வல்லமையும் அற்புதமுமாக பயன்படுத்துவதற்கு காரணம் என்ன என்பதை கண்டுபிடிக்கும் நேரம் இது. இதைக் குறித்து சங்கை ஆலன் ரோச் என்பவர் கூறும்போது :-

கோபோர்த்தின் ஆவிக்குரிய வல்லமைக்கான இரகசியம் என்று குறிப்பிட பல பரிசுத்த குணாதிசயங்கள் அவரிடம் காணப்பட்ட போதினும் கீழ்க்கண்ட ஏழு பரிசுத்த பண்புகள் முக்கியமானதாகும் என்று நான் கூற முடியும். அதை கோபோர்த் அவர்களே 1894 ஆம் ஆண்டு தனது வேத புத்தகத்தின் முகப்பு வெள்ளைத்தாள் ஒன்றில் எழுதி வைத்துள்ளார்.

1) ஒன்றையும் கைமாறாக எதிர்பாராமல் தேவ ஊழியத்துக்கு

அதிகமாகவே கொடுக்க முயற்சி செய். 2) மற்றவர்களின் பரிசுத்த செயல்களுக்கு உறுதியான அஸ்திபாரம் கொடு. 3) குறைந்த பட்சம் 30 நிமிடங்களாவது தேவனுடைய வேத வசனங்களுடன் நேரம் செலவிடாமல் எந்த ஒரு நாளையும் கை நழுவ விட்டுவிடாதே. 4) எல்லா காரியங்களிலும் தேவனுடைய திருவுள சித்தத்தை கண்டுபிடிக்க முயற்சி செய். அப்படி கண்டுபிடித்து விட்டால் எந்த ஒரு விலை கிரயம் கொடுத்தாகினும் அதற்கு கீழ்ப்படி. 5) காலை, மாலை இரு நேரங்களிலும் தனி ஜெபம், தியான வேளைகளை ஒருக்காலும் தவறவிட்டுவிடாதே. 6) அமர்ந்த ஜெப ஆவியை உனக்குள் உருவாக்க பிரயத்தனப்படு. 7) தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை குறித்து புறமதஸ்தர்கள் மத்தியில் தினமும் ஏதாவது பேசி அல்லது செய்துவர கவனமாயிரு.

மேற்கண்ட பரிசுத்த ஒழுங்குகள் யாவையும் எந்த ஒரு சந்தேகத்துக்கும் இடமின்றி கோபோர்த் தவறாது கடைபிடித்து வந்ததுடன் அவைகளுக்கு மிகவும் கூடுதலாகவே வாழ்ந்து வந்தார்.

யோனத்தான் கோபோர்த்தை குறித்து பண்டிதர் ஜான் கிப்சன் குறிப்பிடும் வார்த்தைகள்.

யோனத்தான் கோபோர்த், அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலைப்போன்ற பரிசுத்த குணநலன்களை கொண்டவர். அவரது சிந்தை, அவரது இருதயம், அவரது ஆவியின் தன்மைகள் அப்படியே அப்போஸ்தலனாம் பவுலைப் போன்றதாகும். அவரிடம் அஞ்சாத துணிவு, விடா முயற்சி, சோர்படையாத மனோ ஆற்றல், தேவ பணியில் கண்ணும் கருத்துமாயிருத்தல் போன்றவை குடிகொண்டிருந்தன. இயேசுவின் கல்வாரி அன்பில் மயங்கிக்கிடந்த ஒரு மனிதராக அவர் காணப்பட்டார். பரிசுத்த ஆவியாலும், அக்கினியாலும் அவர் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். தன்னை முழுமையாக கர்த்தருக்கு அர்ப்பணித்தவரும், தத்தம் செய்தவருமாக அவர் விளங்கினார். யாவுக்கும் மேலாக கோபோர்த் தாழ்மை சொரூபனாக இருந்தார். அவர் தன்னை முற்றுமாக வெறுமையாக்கியபோது பரிசுத்த ஆவியானவரால் பாத்திரம் நிரம்பி வழியும் அளவிற்கு நிரப்பப்பட்டார். தேவனோடும், மனிதரோடும் போராடி மேற்கொள்ளும் பரலோக வலிமையை அவர் பெற்றிருந்தார். பரிசுத்த ஆவியில் நிறைந்து விசுவாசத்தோடு ஜெபிக்கும் ஜெப வல்லமை அவருக்கிருந்தது.

வேதாகம புருஷர்களில் வேறு எவர்களைக் காட்டிலும் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் ஒருவரே அவருக்கு இணையாக ஒப்பிடப்படக்கூடியவர். மிஷனரி பணி ஆர்வத்தில் பவுல் அப்போஸ்தலனைப் போல வேறு எவரையும் நான் கண்டதில்லை. டேவிட் லிவிங்ஸ்டன், ஜட்ஸன், ஹட்சன் டெயிலர் போன்ற பரிசுத்த பக்தர்களைப் போன்றே தேவனுடைய சுவிசேஷத்தையும், இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் பிரசிங்கிக்கும் பொருட்டாகவே கோபோர்த் தன்னையே எரித்து சாம்பலாக்கிக் கொண்டார். அவருடைய பரிசுத்தமான வாழ்க்கை சோம்பிக் கிடக்கும் நம்மை வெட்கப்பட்டு தலைகுனியச் செய்ய வைப்பதுடன் கர்த்தருக்காக நாம் எதையாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையை நம்மிலே தூண்டி விடுவதாக இருக்கின்றது. எத்தனை ஆச்சரியமான முன்மாதிரி! நமது உள்ளத்தை உணர்த்தி எழுப்புதலடையச் செய்யும் எத்தனை பரவசமான பரிசுத்த வாழ்க்கை!

சிநேகிதா, அதிகாலை நீ கண் விழித்ததும் ஒரு கணம் யோசித்து பார்த்தல் வேண்டும். எதை என்று கேட்கின்றாயா? சொல்லுகின்றேன் கேள். காலையில் உன் மரணம் இருக்குமானால் மாலை சூரியன் மேல் திசையில் மறையுமுன்னர் உன் சரீரம் கல்லறை தோட்டத்தில் தனது இடத்தை தெரிந்து கொள்ளும். ஒருக்கால் உன் மரணம் அந்த நாளின் நண்பகல் அல்லது மாலை பொழுது இருக்கும் பட்சத்தில் மறுநாள் காலையில் அல்லது கூடின பட்சம் மாலை மயங்குவதற்குள்ளாக உனது ஜீவனற்ற சடலம் கல்லறை தோட்டத்துக்குள்ளாக சேர்க்கப்பட்டுவிடும். இப்படிப்பட்ட ஒரு மாய ஜால வாழ்வை நீ வைத்துக் கொண்டு வீண் ஜம்பங்கள் பேசுவது எதற்காக? உலகத்தை வாரிக் கட்டிக் கொண்டு போகிறவனைப் போல தினமும் நீ கற்பனை கோட்டை கட்டிக் கொண்டு அதற்காக பாடுபடுவது எதற்காக? இன்றே மனந்திரும்பு. இயேசு இரட்சகரை உனது ஆத்தும நேசராக உள்ளத்தில் ஏற்று நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்.

"தாவீது சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக்கொண்டதினிமித்தம் அவன் மனது அடித்துக் கொண்டிருந்தது" (1 சாமு 24 : 5)

"இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" (அப் 24 : 16)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் பிரியமானவர்களே,

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்று திருவுளம் பற்றிய நம் அருமை நேச இரட்சகர் இயேசுவின் பரிசுத்தமும், இனிமையுமான நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

இந்த இதழ் உங்கள் கரங்களை வந்தடைந்த சில தினங்களில் கர்த்தருக்கு சித்தமானால் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கு நோக்கி கடந்து செல்லுவோம். இதுகாறும் எங்களுக்கு அரணும், அடைக்கலமும், பாதுகாவலுமாக இருந்து எங்களை வழிநடத்தி தமது பரிசுத்த ஊழியத்தை ஆசீர்வதித்த கர்த்தரின் ஆணி கடாவுண்ட கரங்களில் எங்களை முகங்குப்புற தாழ்த்தி ஒப்புக் கொடுத்து கடந்து செல்லுகின்றோம்.

கர்த்தருடைய மகிமையின் சுவிசேஷம் எட்டாத, அதைக் கேட்க வாய்ப்பில்லாத இமயத்தின் கடையாந்திர பகுதிகளுக்கு நாங்கள் அதை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் செல்லுகின்றோம். இந்தவிதமான சுவிசேஷ பயணங்கள் எத்தனை பிராண மோசம் நிறைந்தவை என்பதை பல தடவைகளிலும் நான் நமது தேவ எக்காளத்தில் எழுதியிருக்கின்றேன். அதை மீண்டும் ஒரு முறை இங்கே எழுத நான் விரும்பவில்லை.

எங்களுடைய பாதுகாப்பான பயணங்களுக்காக நீங்கள் அன்பாக ஜெபிப்பதுடன் கர்த்தர் எங்களுக்கு நல்ல ஊழிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவும், சுவிசேஷம் செல்லும்படியான திறந்த வாசல்களை எங்களுக்கு

ஆயத்தப்படுத்திக் கொடுக்கவும், நாங்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நிரப்பப்பட்டு ஆத்தும பாரத்தோடும், தைரியத்தோடும் சுவிசேஷத்தை மக்களுக்கு அறிவிக்கவும், விதைக்கப்படும் சுவிசேஷ வித்துக்களை பொறுக்கிப் போடும் தந்திரம் பெற்ற சாத்தானாம் பிசாசானவனால் எங்களுக்கு எந்தவொரு இடையூறுகளும் வராதபடியும் நீங்கள் எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்து வாருங்கள்.

அத்துடன் நாங்கள் அங்கு புசிக்கும் வித்தியாசமான உணவு வகைகள், இடத்திற்கு இடம் மாறுபட்ட நிலையில் நாங்கள் பருகும் தண்ணீர் போன்றவைகளால் எங்களது விருத்தாப்பிய சரீரங்கள் பாதிக்கப்படாதிருக்கவும், எந்த ஒரு வியாதி துன்பங்கள் எங்களை அணுகாதவாறும் நீங்கள் எங்களுக்காக ஜெபிக்க உங்களை அன்போடு கெஞ்சிக்கேட்கின்றேன்.

கடந்த தேவ எக்காள இதழ் உங்களில் அநேகருக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்ததாக கடிதங்கள் எழுதியிருந்தீர்கள். எல்லா துதி ஸ்தோத்திரம் புகழ்ச்சிக்கு பாத்திரமானவர் நம் நேச இரட்சகர் இயேசு அப்பா ஒருவரே. உங்களுக்கான தேவ செய்திகளை எனது முழங்கால்களில் நின்று அவரிடமிருந்து பெற்று உங்களுக்கு கொடுக்கின்றேன். அவ்வளவுதான்.

உங்களிடமிருந்து வந்த கடிதங்களில் ஒரு கடிதத்தில் "முடிவில்லா நித்தியத்தை நீங்கள் மனதில் வைத்து நித்தியத்தின் அடிப்படையில் தேவ எக்காள செய்திகளை எழுதுகின்றீர்கள்" என்று ஒரு அன்பான தேவப்பிள்ளை எழுதியிருந்தார்கள். எத்தனை உண்மையான வரிகள் அவை. நித்தியத்தின் கண்ணோட்டத்தில்தான் தேவ எக்காள செய்திகள் எழுதப்படுகின்றன. அதில் சற்றும் சந்தேகமில்லை. கர்த்தர் கிருபைகூர்ந்தால் வரும் நாட்களிலும் அந்த நித்தியத்தின் அடிப்படையில்தான் உங்களுக்கு தேவ செய்திகள் கிடைக்கும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

உங்கள் மனசாட்சியை சந்தியுங்கள்.

வாரன் வியர்ஸ்பி என்ற தேவ மனிதர் எழுதியுள்ள "உங்கள் மனசாட்சியை சந்தியுங்கள்" என்றதொரு புத்தகத்தை நான் சமீபத்தில் வாசித்துக் கொண்டிருந்தபோது அதின் பக்கங்கள் எனக்கு மிகவும்

ஆசீர்வாதமாக இருந்தன. Meet Your Conscience என்ற அந்த ஆங்கில புத்தகத்தின் தலைப்பே என்னை நடுங்க வைப்பதாக இருந்தது. எனக்கு ஆசீர்வாதமாக இருந்த அந்தப்புத்தகத்தில் சில வரிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். கர்த்தர் அதை உங்களுக்கு ஆசீர்வதித்துத் தருவாராக.

"மனச்சாட்சி" என்ற வார்த்தை தேவனுடைய வேதபுத்தகத்தின் புதிய ஏற்பாட்டில் மாத்திரம் 32 தடவைகள் வருகின்றன. அதில் அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் அடிகளார் மட்டுமே 21 இடங்களில் அதை பயன்படுத்துகின்றார்.

"இரண்டு காரியங்கள் எனக்கு மகா ஆச்சரியத்தையும், சொல்லொண்ணா பிரமிப்பையும் உண்டாக்குகின்றது. ஒன்று, நட்சத்திரங்கள் நிறைந்த எனது தலைக்கு மேலாக உள்ள வானமண்டலம். இரண்டு, நான் செய்வது சரி அல்லது தவறு என்று என்னை உணர்த்திக் காண்பிக்கும் எனது மனச்சாட்சி" என்று ஜெர்மன் தேசத்து தத்துவ ஞானி இம்மானுவேல் காண்ட் என்பவர் கூறியுள்ளார்.

மனச்சாட்சி என்றால் என்ன? ஆங்கிலத்தில் "கான்சையன்ஸ்" என்று கூறப்படும் இந்த வார்த்தை இரண்டு லத்தீன் வார்த்தைகளின் தொகுப்பாகும். அதின் அர்த்தம் என்னவெனில் "முழுமையும் எனக்குத் தெரியும்" எனக்கு என்ன தெரியும்? என் மனதின் அந்தரங்கம் முழுமையும் எனக்குத் தெரியும். புதிய ஏற்பாட்டின் காலத்தில் "மனச்சாட்சி" என்ற வார்த்தை ஒரு நூதனமான வார்த்தை அல்ல. அக்காலத்திலிருந்த கிரேக்க மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையின் சம்பாஷணைகளில் அதை பயன்படுத்தினார்கள். "நீ தீமை செய்யும்போது நீ உன்னளவில் உணருகின்ற வேதனை" என்று கிரேக்கர்கள் மனச்சாட்சிக்கு விளக்கம் கொடுத்தனர். எத்தனை பொருத்தமான விளக்கம் இல்லையா?

நீ உனது மனச்சாட்சிக்கு தப்பிச் செல்ல முடியாது. உனது மனச்சாட்சியோடேயே தான் நீ இறுதி வரை வாழவேண்டும். நீ உனது மனச்சாட்சியோடு வாக்குவாதம் செய்யலாம். அல்லது உனது மனச்சாட்சியை நீ களங்கப்படுத்தலாம். அல்லது உனது மனச்சாட்சியை நீ கடினப்படுத்தலாம். ஆனால், நீ உனது மனச்சாட்சியிடமிருந்து ஒருக்காலும் உன்னை தனிமைப்படுத்தி தப்பிச் செல்ல இயலாது. நீ வலுக்காட்டாயம் செய்து அதை தவறான வழிகளில் செல்ல வழி

வகுக்கலாம். ஆனால், மனச்சாட்சி அங்கேயேதான் இருந்து கொண்டேயிருக்கும். தேவன் விரும்பாதவழிகளில் தங்கள் மனச்சாட்சியை பயன்படுத்துகிறவர்களின் வாழ்க்கை மகா நிர்ப்பந்தமானது.

ஒரு நல்ல மனச்சாட்சி ஒளி வீசி பிரகாசிக்கக்கூடிய ஒன்றாகும். அது தேவனுடைய வசனத்தாலும், தேவ ஆவியானவரின் ஆளுகையாலும் ஒளி வீசுகின்றது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனச்சாட்சியை வெளிச்சத்தை வீட்டினுள்ளே தாராளமாக பிரவேசிக்கச் செய்து கொண்டிருக்கும் ஒரு ஜன்னலுக்கு ஒப்பிட்டுக் கூறினார். "கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும், இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்" *(மத் 6 : 22, 23)*

வெளிச்சத்தை தாராளமாக உள்ளே பிரவேசிக்கச் செய்து கொண்டிருக்கும் ஜன்னலைப்போலவே தேவனுடைய வசனங்களின் வெளிச்சத்தை உனது இருதயத்துக்குள் வருவதற்கு அனுமதி அளிக்க, அளிக்க உனது மனச்சாட்சியும் கர்த்தருக்கு மகிமையாக சிறப்புற்று செயல்படும். அநேகருடைய மனச்சாட்சி அவர்களை எதுவுமே செய்வதில்லை. ஏனெனில் தங்கள் மனச்சாட்சியை பிரகாசிக்கப் பண்ணும் தேவனுடைய வசனங்களின் அறிவை அவர்கள் தங்கள் உள்ளத்தினுள் அனுமதிப்பதே இல்லை. அதின் காரணமாக, அவர்களின் மனச்சாட்சியானது அறியாமை, மூடநம்பிக்கை போன்ற இருளால் சூழப்பட்டிருக்கிறது.

அப்படி மனச்சாட்சியானது இருளால் சூழப்பட்டிருந்த நிலையில் வாழ்ந்தவள்தான் ஸ்காட்லாந்து தேசத்தின் "இரத்த மேரி" ஆவாள். அவளால் கொலையுண்ட கிறிஸ்தவ மக்கள் அநேகர். அந்த நாட்களில் ஸ்காட்லாந்து தேசத்தில் தேவனுடைய சுவிசேஷத்தை மிகவும் தைரியமாக ஜாண் நாக்ஸ் என்ற தேவ பக்தன் அறிவித்து வந்தார். தேசத்தை அரசாண்ட ராணி மேரியின் (இரத்த மேரி) எந்த ஒரு மிரட்டலுக்கும் அவர் அஞ்சவில்லை. மாறாக, ஜாண் நாக்ஸ் உடைய ஜெபங்களுக்கு ராணி மேரி அஞ்சி நடுங்கி வந்தாள்.

ஒரு நாள் ஜாண் நாக்ஸை நேருக்கு நேராக சந்தித்த ராணி "உங்களுடைய மனச்சாட்சி போல எனக்கு மனச்சாட்சி இல்லையே" என்று கூறின போது "ராணி அம்மையாரே, தேவனுடைய வார்த்தை என்ற ஒளி உங்கள் மனச்சாட்சியை சுத்திகரித்து அதை பிரகாசிக்கப்பண்ணாத காரணத்தால் அது அறிவிழந்து இருளாகக் கிடக்கின்றது. அதற்கு எந்த ஒரு அறிவும் இல்லையென்று காண்கின்றேன்" என்று அஞ்சாத தேவ மனிதன் ஜாண் நாக்ஸ் அவளுக்கு பதில் அளித்தார்.

கிறிஸ்தவ பரிசுத்த வாழ்க்கைக்கு மனச்சாட்சி இன்றியமையாத ஒன்றாகும். அதிலும் தேவனுடைய ஊழியம் செய்வதற்கு அது இன்னும் வெகு முக்கியமானதாகும். தேவ ஊழியனாகிய தீமோத்தேயுவுக்கு "நீ விசுவாசமும் நல் மனச்சாட்சியும் உடையவனாயிரு" *(1 தீமோ 1 : 18)* என்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எழுதினார். நாம் இணைந்திருக்கின்ற சபைகளில் நாம் பக்தி வைராக்கியம் காண்பித்து விசுவாசத்தை நிரூபித்து காண்பிக்கும் ஆற்றல்கள் நமக்கு இருக்கலாம். ஆனால், நல் மனச்சாட்சியில்லாமல் நமது விசுவாசத்தை காண்பிப்பது ஒன்றுக்கும் உதவாது. விசுவாசத்திற்கு சாட்சியாக ஜீவித்தார் என்று நாம் மக்களால் பாராட்டல்கள் பெற்றும் நம்மிடம் நல்மனச்சாட்சி இல்லையென்றால் அதினால் யாதும் பயன் கிடையாது. நமது தேவ ஊழியங்கள் ஆசீர்வாதமாயிருப்பதற்கு நல்ல பரிசுத்த மனச்சாட்சி அத்தியந்த அவசியமாகும்.

ஒரு மனிதன் நல்ல மனச்சாட்சிக்கு நேராக தனது வாழ்க்கையை கொண்டு செல்லும்போது அவன் ஒரு நல்ல கிறிஸ்தவனாகின்றான். அது மாத்திரம் அல்ல, அவன் தனது ஆண்டவருக்கு ஒரு நல்ல சாட்சியாகவும் வாழ்கின்றான். தேவனால் முன்குறிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை அவன் சுதந்தரித்தும் கொள்ளுகின்றான். அப்படிப்பட்ட நல் மனச்சாட்சியுடைய கிறிஸ்தவன் தனது முழு வாழ்க்கையையுமே கர்த்தருக்கு கையளித்து தனது வாழ்வின் ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரிடம் ஆலோசனை கலந்து " ஆண்டவரே, நான் அங்கு செல்லலாமா?" "இந்தக் காரியத்தில் நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?" " நான் அந்த மனிதனோடு எவ்வாறாக பேச வேண்டும்?" இப்படியாக தனது ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவரோடு தேவ ஆலோசனை கலந்து நடக்கின்றான். ஆ, நல்மனச்சாட்சியுள்ள ஒரு கிறிஸ்தவனின் அலங்கார ஆவிக்குரிய வாழ்க்கை அது!

உங்களுடைய மனச்சாட்சியில் ஏதாவது தவறுகள் இருப்பின் அதை இப்பொழுதே ஆண்டவரிடம் அறிக்கையிடுங்கள். அத்த உடனே சரிபடுத்திக் கொள்ளுங்கள். கறைபட்ட துர்மனச் சாட்சியோடு உங்கள் நாளின் வேலைகளை தொடங்க வேண்டாம். தேவன் உங்களுக்கு மன்னித்து உங்கள் கறைப்பட்ட மனச்சாட்சியை சுத்திகரித்து உங்களுக்கு ஒரு சுத்தமானதும், பெலமுள்ளதுமான நல் மனச்சாட்சியை கொடுக்க வல்லவராக இருக்கின்றார். இன்றே அவரண்டை வாருங்கள். தேவனுடைய பரிசுத்த நாம மகிமைக்காக வாழக்கூடிய கல்வாரியின் இரத்தம் தெளிக்கப்பட்ட நல்ல பரிசுத்தமான மனச்சாட்சியை பெற்றுக் கொள்ளுங்கள்.

(வாரன் வியர்ஸ்பி என்பவர் எழுதிய "உங்களுடைய மனச்சாட்சியை சந்தியுங்கள்" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி)

நான் இங்கு இருக்கும் வீட்டைப் பார்க்கும் தேவ ஊழியர்களில் பெரும்பாலானோரும் என்னிடம் கேட்கும் முதற் கேள்வி "இந்த வீடு உங்களுக்குச் சொந்தமானதா?" என்பதுதான். தேவ ஊழியம் குறித்தோ அல்லது எனது தனிப்பட்ட வாழ்வின் காரியம் குறித்தோ எதுவும் கேட்பதற்கு முன்னர் அவர்கள் கேட்கும் முதற் கேள்வி அது.

"எனது வீடு பரலோகத்தில் உள்ளது. இது எனது வாடகை வீடு மாத்திரமே" என்று நான் அம்மக்களிடம் பதிற்கூறுகின்றேன். தேவ மக்கள் பலருடைய இருதயத்தில் உள்ள நினைவுகள் முழுமையாக உலகத்தைப்பற்றியதாகும். "இருதயத்தின் நினைவினால் அவனவன் வாய் பேசும்" (லூக் 6 : 45) என்று ஆண்டவர் அன்றைக்கே கூறிவைத்தார். ஒரு வீட்டை எனக்கென்று சொந்தமாக நான் எப்பொழுதோ பெற்றிருக்க முடியும். ஏன் இன்றைக்கு கூட நான் விரும்பினால் எனக்கு ஒரு வீட்டை வாங்கித்தர பரிசுத்த தேவ மக்கள் ஆயத்தமாக இருக்கின்றனர். என்னிடம் அது குறித்து அவர்கள் விருப்பம் கேட்டது கூட உண்டு. எனக்கென்று செந்தமாக வீடுவாசல்களை நான் எக்காலத்தும் விரும்பியதே இல்லை. தலைசாய்க்க இடம் இல்லாதவராக இந்த உலகத்தை கடந்து சென்ற என் அருமை இரட்சகரை ஆண்டவராக கொண்ட நான் அவரைப்போல அந்நியனும் பரதேசியுமாக இந்த உலகத்தை கடந்து செல்ல எப்பொழுதோ தீர்மானித்து விட்டேன்.

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை ஒடுக்கி, நல்ல ஆகாரங்கள் சாப்பிடாமலும், மனம் விரும்பிய நல்ல வஸ்திரங்களை உடுத்தாமலும் தியாகத்தோடும், கஷ்டங்களின் மத்தியிலும் தேவ ஊழியத்துக்காக கொடுக்கும் காணிக்கைகளில் நான் எனக்கென்று வீடுவாசல்களைக் கொண்டு நிலபுலன்களை வாங்கி, எனது பிள்ளைகளுக்கென்று வங்கிகளில் பெரும் பணங்களை தந்திரமாக சேர்த்து வைத்து நான் தேவனுடைய பரிசுத்த ஊழியத்தை உலக ஆதாயத்துக்காகச் செய்யலாம். அப்படி நான் செய்து வந்திருப்பேனானால் இந்த தனிமையான வீட்டில் மிகுந்த தேவ சமாதானத்தோடு மோட்சத்தின் முன் ருசியை அனுபவித்துக் கொண்டு என் அருமை ஆண்டவரோடு மிகுந்த களிகூருதலோடு ஜீவிக்க இயலாது. எனது மனச்சாட்சி என்னை பைத்தியக்காரனாக ஆக்கிப்போடும். இராக்காலங்களில் கெட்ட சொப்பனங்களைக் கண்டு படுக்கையில் அலறிக்கொண்டும், கட்டிலிலிருந்து கீழே விழுந்துகொண்டும், பகற்காலங்களில் எனக்குள்ளாக பேசி, சிரித்து, கைகால்களை அங்கும் இங்கும் ஆட்டி அசைத்து ஒரு மனநோயாளியாக நாடகம் ஆடி வாழ்வதைத் தவிர வேறு வழியே கிடையாது. தேவனுடைய பரிசுத்தமான ஊழியத்தை தங்களுடைய லோகாதாயத்துக்காக அப்பாவி ஏழை விசுவாசிகளை தந்திரமாக ஏமாற்றிச் செய்வோர் எவராயினும் அவர்களுடைய கடைசி முடிவு பரிதபிக்கப்படத்தக்கதொன்றாகும்.

சமீபத்தில் ஒரு பாஸ்ட்டர் "சகோதரனே, சபை பாஸ்ட்டர்களாகிய எங்களுக்கு கொடுப்பதற்காக மேல்நாட்டிலுள்ள எங்கள் தலைமை ஸ்தாபனத்திலிருந்து 5 லட்சம் ரூபாய் அங்கீகாரம் செய்யப்பட்டது. அந்தப்பணமானது இந்தியாவிலுள்ள எங்களது தலைமைப் பாஸ்ட்டருக்கு வந்தது. அந்தப் பணத்தில் எங்களுக்கு ஒரு பைசா கூட தராமல் அவர் அதை தந்திரமாக கொண்டு சென்று தனது மாவட்டத்தில் வீடுவாசலை வாங்கிக்கொண்டு பிறிதொரு மாவட்டத்தில் சில செழிப்பான நிலபுலன்களையும் தன்கைவசப்படுத்திக் கொண்டு அமைதியாகிவிட்டார்" என்று கூறினார். இப்படிப்பட்ட துரோகமான காரியங்களை செய்யும் மக்களுக்கு விரோதமாக கர்த்தரின் கரம் நீட்டப்பட்டிருக்கின்றது. அவர்களின் இறுதி காலங்களும், முடிவும் ஒருக்காலும் தேவ சமாதானம் நிறைந்ததாகவோ இல்லை ஆசீர்வாதமாகவோ ஒருக்காலும் இருக்காது.

ஆண்டவரை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத ஒரு கிறிஸ்தவ சகோதரி ஒரு சமயம் "சகோதரனே, இந்தப் பெரிய, தனிமையான வீட்டில் நீங்கள் எப்படி தனிமையாக ஜீவித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? என்னைப் போன்ற ஆளுக்கெல்லாம் கட்டாயம் பைத்தியமே பிடித்துவிடும். ஒரு நாள் கூட நான் இந்த வீட்டில் தனிமையாக இருக்க இயலாது" என்று என்னைப் பார்த்து சொன்னார்கள். நான் அவர்களுக்கு மாறுத்தரமாக "நீங்கள் நினைப்பது போல நான் மாத்திரம் இங்கு தனிமையாக இருக்கவில்லை. என் இயேசு ராஜாவும் நானும் இங்கே இருக்கின்றோம். அவர் எங்கே இருக்கின்றாரோ அங்கே மோட்சம் உண்டு. அந்த மோட்சம் இந்த வீட்டில் உள்ளது" என்று கூறினேன். அவர்கள் பிரமிப்படைந்தார்கள். அல்லேலுயா.

சங்கீதக்காரன் சொன்னது போல "கர்த்தருடைய வழிகளை காத்துக் கொண்டு வந்தேன். நான் என் தேவனுக்கு துரோகம் பண்ணினதில்லை" (2 சாமு 22 : 22) தேவ பெலத்தாலும், ஆண்டவருடைய அளவற்ற கிருபையாலும் நான் எனது மனச்சாட்சியை எனது வாழ்வில் பரிசுத்தமாக காத்து வந்திருக்கின்றேன். எனது உலகப்பிரகாரமான தேயிலை தோட்ட குமஸ்தா அலுவலை 19 ஆண்டுகள் 8 மாதங்கள் செய்து, தேவனுடைய வெகு திட்டமான அழைப்பின் பேரில் வேலையை விட்டு வெளியே வரும்போது எங்களுக்கென்று படுக்கக்கூட சொந்தமான ஒரு கட்டில் கிடையாது. எனது மனைவியும், எனது இரு பிள்ளைகளும் ஒரு அன்பான பாஸ்ட்டர் ஐயா தந்த இரவல் கட்டிலில் ஒன்றாக ஓரிரு ஆண்டுகள் படுத்திருந்தனர். நான், கோரம் பாய் ஒன்றை கடுங்குளிரான தரையில் விரித்து அதில் படுத்து நித்திரை செய்தேன். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற உத்தியோகஸ்தர்கள் பலரும் (எல்லாரும் அல்ல) தாங்கள் வேலையைவிட்டுச் செல்லும்போது தங்களல்லாத ஏராளமான பொருட்களை திருட்டளவாக கொண்டு செல்லுவதுண்டு. அவர்கள் வேலை செய்த தேயிலை தோட்டங்களில் உள்ள தேக்கு, கருங்காலி மரங்களை வெட்டி தங்கள் வீட்டில் தச்சாசாரிகளை வைத்தே வேண்டியமட்டும் மேஜை, நாற்காலி, கட்டில் போன்றவைகளை செய்து கொண்டு போய்விடுவார்கள். தேயிலை தொழிற்கூடங்களில் பணிசெய்யும் உத்தியோகஸ்தர் அங்கு கிடைக்கக் கூடிய வெண்கலம், அலுமினியம் போன்ற உலோகங்களை தாங்கள் செல்லும் லாரிகளில் ஏற்றி விடுவார்கள். இதற்கு எல்லாருடைய கையும்

ஒத்து சேர்ந்திருக்கும். அவ்விதமான பொருட்கள் தங்களுக்கு ஒரு செப்புக் காசுக்கும் பயன்படாது என்பது அவர்களுக்கு தெரியாது.

நான் தேயிலைத் தோட்டத்திலிருந்து வரும்போது ஒரு சாக்குத்தைக்கின்ற ஊசியும், மேஜையின் டிராயர் சாவிகள் ஒன்றிரண்டு எங்களுடைய கொஞ்சப் பொருட்களோடு வந்துவிட்டன. அவற்றைக்கூட முதலாளிக்கு கடிதம் எழுதி திருப்பி அனுப்பி வைத்தேன். ஒரு நாள் எனது தேயிலை தோட்ட முதலாளி என்னை வழியில் கண்டு "உனது வேலையை உன் இஷ்டப்படி விட்டுவிட்டாய். எனினும் அந்த வேலை உனக்கு அங்கேயே இருக்கின்றது. நீ விரும்பும்போது அதை வந்து செய்யலாம்" என்று கூறினார். "இனி ஒருக்காலும் உலகப்பிரகாரமான எந்த ஒரு வேலைக்கும் செல்லுவதான உத்தேசம் இல்லை" என்று தெரிவித்தேன். இரவு 11 மணி வரை கூட ஓவர்டைம் சம்பளம் இல்லாமல் நான் என் அலுவலகத்தில் வேலை செய்ததுண்டு. எனது ஆயிரக்கணக்கான மணி நேர வேலைக்கு கூலியில்லாமல் லாபான் யாக்கோபை வஞ்சித்தது போல எனது முதலாளியானவர் என்னையும் என்னுடன் வேலை செய்த எனது மூத்த சகாக்கள் இருவரையும் வஞ்சித்தார். எனது உலகப்பணியிலும் நான் என் தேவனுக்கு துரோகம் செய்யவில்லை.

எனது குடும்ப வாழ்வில் எனது அருமை மனைவி முற்றிலும் பெலவீனமானவர்கள். அவர்களுடன் ஒன்றாக குடும்ப வாழ்க்கை நடத்துவது என்பது அத்தனை எளிதல்ல. மனநிலை முழுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருந்தார்கள். எனது இரு பிள்ளைகளுக்கான எல்லா காரியங்களையும் நானே தாயாகவும், தந்தையாகவும் நின்று கவனித்தேன். அவர்களுடைய ஆகாரங்களை சமைப்பது, துணிகளை துவைப்பது, பள்ளிக்கு அனுப்புவது எல்லாம் என்னைச் சார்ந்ததாக இருந்தது. எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில் நான் அவைகளைச் செய்தேன் என்பதை கர்த்தர் ஒருவரே அறிந்தவராக இருக்கின்றார். இந்த இக்கட்டான நிலையில் சாத்தான் என்னண்டை பல தடவைகளும் வந்து எனது குடும்ப வாழ்வின் மகிழ்ச்சிக்காகவும், பிள்ளைகளைக் கவனிக்கவும் மற்றொரு பெண்ணை மனைவியாகக் கொள்ள வெகுவாக போராடினான். எனது தாங்கொண்ணா பாடுகளை கண்டு மனம் பொறுக்காத அன்புள்ளம் கொண்டோரும் அந்த ஆலோசனையை எனக்குக் கொடுத்ததுண்டு. ஆனால், ஒரு நாள் ஒரு திட்டமான முடிவெடுத்தேன். அதின்படி கர்த்தர் எனக்கு தந்த

பாத்திரத்தை கடைசிவரை பாதுகாத்து, அவர்களை முழு மனதோடும் நேசித்து, அவர்களுக்குச் செய்ய வேண்டிய எல்லாக்கடமைகளையும் உத்தமமாகச் செய்து அவர்களுக்கு பிறகு மரணப்பரியந்தம் எந்த ஒரு வாழ்வின் துணையையும் தேடாமல் தனியனாக எனது விசுவாச ஓட்டத்தை ஓடி முடிப்பது என்று தீர்மானித்தேன். இப்படியாக எனது குடும்ப வாழ்விலும் எனது மனைவிக்கோ, என்னை ஆட்கொண்ட தேவனுக்கோ நான் துரோகம் செய்யவில்லை.

தேவ ஊழியத்தின் பாதையிலும் நான் என் ஆண்டவருக்கு துரோகம் பண்ணவில்லை. ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டவாறு ஆண்டவருடைய பணத்தில் நான் எனக்கென்று வீடுவாசல்களைக் கொள்ளவில்லை. நிலபுலன்களை வாங்கவில்லை. பின் சந்ததிக்காக வங்கிகளில் பணங்களை தந்திரமாக சேர்த்துவைக்கவில்லை. அது மாத்திரமல்ல, தேவ ஊழியத்தின் பாதையில் நான் பயன்படுத்திக் கொண்டிருக்கும் எல்லா பொருட்களும் கர்த்தருக்கு சொந்தமானதாகும். அது எனது பிள்ளைகளுக்கு போய் சேராது. எனது பரிசுத்தமான அந்த மக்களும் அதை வாங்க மாட்டார்கள். உதாரணமாக, தேவ எக்காளம் சந்தாதாரர்களின் முகவரிகளை காப்பி எடுக்க ஒரு "சைக்ளோஸ்டைல்" மிஷன் வைத்து பயன்படுத்தி வந்தேன். இப்பொழுது ஜெராக்ஸ் மூலமாக வெளியிடங்களில் தெளிவான பிரதிகளை எடுக்க முடிவதால் என் வசம் இருந்த ரூபாய் 6000 மதிப்புள்ள அந்த சைக்ளோஸ்டைல் மிஷனை மாணவர்கள் மத்தியில் பணிபுரியும் "யூ. இ. எஸ். ஐ" என்ற ஸ்தாபனத்துக்கு எனது பிள்ளைகள் கொடுத்து வந்தனர். அப்படியே எனது இதர பொருட்களும் எனது காலத்திற்கு பின்னர் தேவனுடைய ஊழிய ஸ்தாபனங்களுக்கு போய் சேரும். இதில், நான் பயன்படுத்தும் எனது கிறிஸ்தவ புத்தகங்கள் நீங்கலாகும். பிள்ளைகள் அவைகளை ஆர்வத்தோடு வாசித்து பயன்படுத்தி வருவதால் தேவ ஊழியத்தை செய்து கொண்டிருக்கும் அவர்களுக்கு கொடுத்திருக்கின்றேன்.

கர்த்தர் கிருபையாக எனக்கு கொடுத்த எனது இரு ஆண் மக்களும் ஆசிரியர்களாக பணி ஆற்றிக் கொண்டே ஓய்வு நேரங்களில் நம் ஆண்டவர் இயேசுவுக்கு அருமையான ஊழியம் செய்து வருகின்றனர். அவர்கள் இருவரும் நமது தேவ எக்காள ஊழியத்துக்கு மாதந்தோறும் ஒரு பெரிய தொகையை காணிக்கையாக தருகின்றனர். அதுமாத்திரமல்ல, தேவ ஊழியத்தின் பாதையில் அவர்கள் எனக்கு தோளோடு தோள்

கொடுத்து உதவி செய்து, தேவ ஆலோசனைகளையும் கொடுத்து வருகின்றனர். கர்த்தர் எனக்கு இப்படிப்பட்ட முற்றும் பண ஆசையற்ற மக்களை கொடுத்திருக்கின்றபடியால் அவருக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

இப்படியாக எனது மனச்சாட்சியை தேவனுடைய பெலத்தையும், அவருடைய கிருபையையும் கொண்டு என்னால் முடிந்த வரை பரிசுத்தமாக பாதுகாத்து வருவதால் எனது முழுமையான நேரங்களையும் காலத்தையும் . தேவ ஊழியத்திலும், ஜெபத்திலும், வேதவசன தியானத்திலும், கர்த்தரை துதிப்பதிலும் செலவிட்டு வருகின்றேன். கோத்தகிரியில் நான் இப்பொழுது இருப்பது எனது நான்காவது வாடகை வீடாகும். இந்த நான்கு வாடகை வீடுகளையும் நீங்கள் போய் பார்த்தால் நான் அங்கிருந்த ஆண்டுகளில் எனது ஜெபத்திற்காக முழங்காலூன்றியிருந்த இடத்தை தனியாக காண முடியும். நம் இயேசு இராஜாவுக்கு மகிமையாகவும் உங்களுடைய ஆசீர்வாதத்திற்காகவும் நான் இந்த வரிகளை இங்கு எழுதுகின்றேன்.

இந்த வீட்டிலும் தேவனுடைய பிரசன்னம் எப்பொழுதும் பிரத்தியட்சமாக இருப்பதை நான் காண்கின்றேன். ஜெபத்தில் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் தேவ சமூகத்தில் செலவிட்டுக் கொண்டிருக்கலாம். நேரம் போவதே தெரியாது. இராக்கால மற்றும் விடிபகல் ஜெபவேளைகளின் மோட்சானந்த பாக்கியமே அலாதியானதாகும். ஆ, தனது மனச்சாட்சியை பரிசுத்தமாக பாதுகாத்து தனது தேவனுக்கு முன்பாக உண்மையும், உத்தமுமாக ஜீவிக்கும் ஒரு தேவ பிள்ளையின் வாழ்வே ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கையாகும்.

தேவனுக்கு முன்பாக தனது முழங்கால்களை முடக்கிவிட்டால் மோட்சத்தின் முன் ருசியை அந்த தேவ பிள்ளை ஜெபத்திலேயே அனுபவித்து ஆனந்திக்கலாம். அந்த தேவ பிள்ளை மரித்து பரலோகம் சென்றபின்னர் தான் மோட்சானந்த மகிமைகளை அனுபவிக்கும் என்பதல்ல, உலகத்தில் இருக்கும்போதே அந்த பரிசுத்த தேவ பிள்ளைக்கு மோட்சம் ஆரம்பித்து விடுகின்றது. "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" (லூக் 17 : 21) என்று ஆண்டவர் சொன்னதும் "உன் ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வை காண்பாய்" (சங் 128 : 5) என்று சங்கீதக்காரர் சொன்னதும் இதை மனதில் கொண்டுதான். தனது பாவங்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் கழுவப்பட்டு

மறுபடியும் பிறந்து தேவனுக்கு முன்பாக குற்றமற்றதொரு பரிசுத்த மனச்சாட்சியை கொண்டிருக்கும் தேவ மக்களுக்கு மோட்சம் இந்த பூலோகத்திலேயே ஆரம்பமாகிவிடுகின்றது. அதில் கடுகளவும் சந்தேகம் கிடையாது.

தனது மரணத்தை எதிர்நோக்கி மரணப்படுக்கையிலிருந்த ஒரு விருத்தாப்பிய கிறிஸ்தவ ஐயாவை நான் காணச்சென்றிருந்தேன். அவர்கள் கண்கள் முழுமையாக மூடப்பட்டிருந்தன. நான் சென்றதும் அவர்களுடைய மகள் நான் வந்திருப்பதை அவர்களுடைய காதிற்குள் கூறி கட்டிலில் அவர்களை உயர்த்தி உட்கார வைத்து என்னைப் பார்க்கும்படியாக சொன்னாள். ஒருகணம் தனது கண்களை திறந்து என்னைப் பார்த்தார்கள். நான் அவர்களுக்கு வாங்கிச் சென்றிருந்த சாக்லட்டை அவர்களுடைய வாயில் ஊட்டினேன். அதை அவர்கள் சாப்பிட்டார்கள். திரும்பவும் ஒரு துண்டை கொடுத்தபோது சாப்பிட முடியாது என்று மறுத்துவிட்டார்கள்.

"இதுவரை நீங்கள் இந்த உலகத்தில் தொழுது ஸ்தோத்தரித்து சேவித்த ஆண்டவர் இயேசுவை வெகு விரைவில் நேருக்கு நேராக சந்திக்கப் போகும் பெரும் மகிழ்ச்சி உங்களுக்கு இருக்கும் என்று நான் நம்புகின்றேன். மோட்ச லோகத்தின் பாக்கியங்களை எல்லாம் நீங்கள் சீக்கிரமாக அனுபவிக்கப் போகின்றீர்கள். ஆண்டவர் இயேசுவை நேருக்கு நேர் முகமுகமாக சந்திப்பது உங்களுக்கு மிகுந்த சந்தோசம்தானே?" என்று நான் அவர்களிடம் கேட்டேன். உடனே அவர்கள் தனது கரங்களை வானத்திற்கு நேராக உயர்த்தி "அது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்" என்று மிகுந்த பெருமூச்சோடு கூறி தனது படுக்கையில் படுத்துக்கொண்டார்கள். நான் அவர்களை சந்தித்த அதே வாரத்திலேயே அவர்கள் இறந்தும் போனார்கள்.

அவர்கள் சொன்ன அந்த நம்பிக்கையற்ற வார்த்தைகள் எனக்கு பெரிய அதிர்ச்சியை கொடுப்பதாக இருந்தது. எப்பொழுதும் தனது வேத புத்தகத்தை தனது மார்போடு அணைத்து தெருக்களில் அலைந்த அந்த ஆத்துமாவுக்கு மரணத்தின் இறுதி நேரம் ஒரு உறுதியான நம்பிக்கையில்லாமல் போய்விட்டதே என்று நான் அதிகமாக சிந்தித்தேன்.

"நீதிமான் தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன்" (நீதி 14 : 32) என்று தேவனுடைய வார்த்தை எத்தனை திட்டமாக பேசுகின்றது! முடிவைக் குறித்து தனக்கே நம்பிக்கையில்லாமல் இருக்கும்போது ஆண்டவனுக்குத்தான் அது தெரியும் என்று கூறுவது எத்தனை தடுமாற்றமான வார்த்தை பாருங்கள்! நஷ்டமடைந்த ஒரு ஆத்துமாவின் குரல் அல்லவா அது! "உன் முடிவைப் பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு" (எரே 31 : 17) என்று தேவனே கூறியுள்ளார். நாம் மோட்சம் செல்லுகின்றோமா ஆண்டவர் இயேசுவை முகமுகமாக தரிசிக்கப்போகின்றோமா என்ற நம்பிக்கை இந்த உலகத்திலேயே நமக்கு கிடைத்து விடும். எனவேதான் " நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன்" (1 கொரி 9 : 26) என்று அப்போஸ்தலன் அத்தனை நிச்சயமாக தனது மகிமையின் நம்பிக்கையை குறித்து பேசினார்.

இதைக் கருத்தோடு வாசிக்கும் தேவப்பிள்ளையே, உனது மனசாட்சியை தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாக பாதுகாத்துக்கொள். எந்த ஒரு நிலையிலும் உங்கள் மனச்சாட்சியை கறைப்படுத்தி, களங்கப்படுத்தி தாறுமாறாக வாழ்ந்து விடாதீர்கள். வெகு துரிதமாக நமது மானிட வாழ்க்கை விருத்தாப்பியத்தை எட்டிப்பிடித்து லோக மாந்தர் யாவரும் நம்மை ஒரு புறமாக ஒதுக்கி வைத்து விடும் கொடிய காலம் வரும். லோக மாந்தர் யாவரும் நம்மை கைவிட்டு நம்மை அற்பமாக எண்ணி ஒதுக்கி வைத்தாலும் தேவன் நம்மை கைவிடாமல் நம்மோடிருக்கும்படியாக நமது மனச்சாட்சியை நாம் தேவ பெலத்தால் பரிசுத்தமாக பாதுகாத்துக் கொள்ளுவோமாக. "நமது மரணக்கட்டிலில் நமது பரிசுத்தமான மனச்சாட்சி நாம் ஆனந்தமாக தலைவைத்துப் படுத்திருக்கும் இன்பமான பஞ்சு மெத்தை தலையணை" என்று ஒரு தேவ பக்தன் கூறினார். எத்தனை பரவசமான வார்த்தை அது. எத்தனையோ கிறிஸ்தவ மக்கள் அந்த இன்பமான பஞ்சு மெத்தை தலையணையாகிய தங்கள் மனச்சாட்சியை நாள்தோறும் கறைப்படுத்தி, கடினப்படுத்தி, அதற்கு எதிர்த்து நின்று அதின் மூலம் அதை நெரிஞ்சில் முட்களால் நிரப்பி வருகின்றனர்.

அவர்கள் சமாதானத்தோடு தங்கள் பரம இளைப்பாறுதலுக்குள் ஒருக்காரும் பிரவேசிக்க இயலாது. அவர்களுடைய மரணக்கட்டிலில் அவர்களின் கறைப்பட்ட மனச்சாட்சி அம்மக்களை நிம்மதியாக

தலைசாய்க்கவொட்டாது. அவைகள் நெரிஞ்சில் முட்களாக குத்தி அவர்களை வேதனைப்படுத்தும்.

தேவ மக்களே, இந்தக்கிருபையின் காலத்தில் தேவ சமூகம் சென்று உங்களுடைய மனச்சாட்சி எங்கெல்லாம் கறைப்படுத்தப் பட்டிருக்கின்றது, எங்கெங்கெல்லாம் எதிர்த்து நின்று அது அடக்கப்பட்டிருக்கின்றது, எங்கெங்கெல்லாம் அது களங்கப் படுத்தப்பட்டு கடினப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையால் கண்டுபிடித்து அவைகளை எல்லாம் தேவனுக்கு முன்பாக சரிசெய்து கொள்ளுங்கள். காலங்கடத்த வேண்டாம். நமது தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே (எபி 12 : 29) அதற்கான தேவ கிருபைகளை கர்த்தர் உங்களுக்கும், எனக்கும் தந்தருள்வாராக. ஆமென்.

நான் அடக்கி அமர்த்த வேண்டிய மிருகங்கள், பட்சி ஜாதிகள்.

ஒரு விந்தையான விருத்தாப்பிய மனிதர் ஒரு முறை இவ்விதமாக சொன்னார் :-

"நான் தினமும் இரண்டு கழுதைகளை சாந்தப்படுத்தி அமர்த்த வேண்டும். இரண்டு முயல்களை எங்கும் ஓடிப் போய் விடாதவாறு கருத்தோடு பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டு பருந்துகளை சமாளித்தாக வேண்டும். ஒரு நாகப்பாம்பை ஜாக்கிரதையாக அடக்கி வைக்க வேண்டும். ஒரு சிங்கத்தை சங்கிலியால் கட்டி வைக்க வேண்டும்." என்றார்.

"நீங்கள் வேடிக்கைக்காக இப்படிச் சொல்லுகின்றீர்கள்" என்றார் அவரது நண்பன்.

"உண்மையில் நான் தமாஷாக இதை சொல்லவில்லை" என்று விருத்தாப்பியர் பதிலளித்தார்.

முதியவர் சொன்ன அந்த இரண்டு கழுகுகளும் அவரது இரண்டு கண்களாகும். அவற்றை அவர் மிகவும் விழிப்போடு பாதுகாக்க வேண்டும். இல்லையேல் அவைகள் தீமைக்கு நேராக அவரை வழி நடத்திக் கொண்டு சென்று விடும். அவர் சொன்ன அந்த இரண்டு முயல்களும் அவரது இரண்டு கால்களாகும். அந்த கால்களை அவர் நல்ல விதமாக பிடித்து வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் அவைகள் ஏதாவது தீய இடத்திற்கு நேராக தனது பொடி நடையை துரிதமாக கட்டி விடும். அவர் குறிப்பிட்ட அந்த இரண்டு பருந்துகள் என்பது அவரது இரு கரங்களைக் குறிப்பதாகும். அதை அவர் நல்ல காரியங்களை செய்ய பயிற்றுவித்தல் அவசியமாகும். அவர் சொன்ன அந்த நாகப்பாம்பு என்பது அவருடைய பொல்லாத நாவாகும். அதை அவர் கடிவாளத்தால் இறுகக் கட்டி வைக்க வேண்டும். அவர் குறிப்பிட்ட சிங்கம் அவரது திருக்குள்ள இருதயமாகும். தீய வழிகளிலிருந்து அதை பாதுகாத்துக் கொள்ள அவர் தொடர்ந்து அதோடு போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

"என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்" (1 சாமு 2 : 30)

வானத்தையும், பூமியையும் படைத்த தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தா சுமார் 5000 வருடங்களுக்கு முன்னர் தனது நித்திரையிலிருந்த ஒரு சிறு பாலகனை திரும்பத் திரும்ப 4 தடவைகள் பெயர் சொல்லிக் கூப்பிட்டு தம்முடைய பரிசுத்த நாமத்தை தங்களது பாவ அக்கிரமச் செயல்களால் இழிவுபடுத்தி வந்த இரண்டு வாலிபர்களுக்கு விரோதமாய் தாம் செய்யப்போகின்ற ஆக்கினையைக் குறித்து இவ்விதமாக கூறினார் "என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள்" (1 சாமு 2 : 30)

அந்த ஓப்னி, பினெகாஸ் என்ற இரு வாலிபரும் ஆசாரியனாகிய ஏலியின் மக்கள். அவர்கள் கர்த்தரை அறியாத பேலியாளின் மக்கள் (1 சாமு 2 : 12) அவர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்கு ஆண்டவரை தொழுது கொள்ள வந்த ஸ்திரீகளோடு விபச்சாரம் செய்து பரிசுத்த கர்த்தருடைய நாமத்தை மகிமை குலைச்சலாக்கினதுடன், தேவாலயத்தில் பலி செலுத்த வந்த மக்களிடத்தில் பலிபீடத்தில் பலி செலுத்துவதற்கு முன்னரே பச்சை இறைச்சியை வலுக்கட்டாயமாக வாங்கி இவ்விதமாக மக்கள் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணும் அளவுக்கு நடந்து கொண்ட கொடிய பாதகராக இருந்தனர்.

தேவனுடைய நாமத்தை அவமானத்துக்குள்ளாக்கிய மேற்கண்ட ஓப்னி, பினெகாஸ் என்ற இரண்டு பொல்லாத வாலிபர்களை தேவன் சங்காரம் செய்தார். இஸ்ரவேலருக்கும், பெலிஸ்தருக்கும் எதிராக நடந்த யுத்தத்தில் ஓப்னி, பினெகாஸ் என்ற அந்த இருவர் கொல்லப் பட்டிருந்தாலும் (1 சாமு 4 : 17) தேவனுடைய வார்த்தையின்படி அவர்கள் இருவரும் கர்த்தரால் சங்காரம் பண்ணப்பட்டார்கள் (1 சாமு 2 : 25) என்பதே சரியானதாகும்.

ஜீவனுள்ள தேவனை அவமதிப்பவர்கள், தூஷிப்பவர்கள், அவருடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கி அதை தங்கள்

கால்களின் கீழ்போட்டு மிதிக்கிறவர்கள் எவரானாலும் அவர்களுடைய முடிவு ஓப்னி, பினெகாஸ் என்பவர்களின் முடிவேயாகும்.

இந்த ஆண்டின் ஜூன் மாதம் முதலாம் தேதி நேப்பாள தேசத்தின் அரசரான பிரேந்திராவையும், அவரது மனைவி ராணி ஐஸ்வர்யாவையும் அரசரின் மகன் நிராஜன், மகள் சுருதி மற்றும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த வேறு 7 பேர்களையும் பட்டத்து இளவரசன் திபேந்திரா (அரசரின் மூத்த மகன்) சுட்டுக் கொன்று தன்னையும் சுட்டு மாண்டு கொண்ட செய்தியை நாம் துக்கத்துடன் கேள்விப்பட்டோம். தான் நேசித்து விரும்பிய ஒரு ராஜகுல பெண்ணை தனக்கு தனது பெற்றோர் கலியாணம் செய்து வைக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காக இந்தப்படுகொலைகள் நடந்தன என்பது முக்கியமான காரணமாக இருந்தபோதிலும் ஆரம்பத்தில் நாம் பார்த்த ஓப்னி, பினெகாஸ் என்பவர்களுக்கு தேவனால் வந்து சம்பவித்ததே அரச குடும்பத்துக்கும் வந்து சம்பவித்துவிட்டது என்று நாம் திட்டமாக கூறலாம்.

சுட்டுக் கொல்லப்பட்ட மன்னர் பிரேந்திராவின் தகப்பனார் மன்னர் மகேந்திரா நேப்பாள தேசத்தை அரசாட்சி செய்த காலத்தில் அதாவது 1972 ஆம் ஆண்டுக்கு முன்னான வருடங்கள் ஒன்றில் நான் அவருக்கு ஒரு அழகான ஆங்கில புதிய ஏற்பாட்டை அனுப்பி தனிப்பட்டவிதமாக ஒரு கடிதமும் அவருக்கு எழுதினேன். கடிதத்தில் நான் என்ன எழுதினேன் என்பதை அத்தனை துல்லியமாக இப்பொழுது எனக்கு குறிப்பிட இயலாத போதினும் நான் எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்ட வரிகள் கட்டாயம் இடம் பெற்றிருந்தன. "மன்னர் அவர்களே, நான் உங்களுக்கு அனுப்பியுள்ள தேவனுடைய புத்தகத்தின் வார்த்தைகளை வாசித்து அந்த புத்தகத்தின் கட்டளைகளின்படி நீங்கள் உங்கள் எளிமையான தேசத்தை



அரசாள்வீர்களானால் உங்கள் தேசம் எல்லா நலனும் பெற்று செழிப்பானதோர் நாடாக விளங்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது" என்று எழுதினேன்.

நீண்ட நாட்களாக எனது கடிதத்துக்கு நேப்பாள மன்னரிடமிருந்து எந்த ஒரு பதிலும் வரவே இல்லை. ஆனால், என்ன ஆச்சரியம்! ஒரு நாள் மன்னர் மகேந்திராவிடமிருந்து அவரது அரச முத்திரையிட்ட தாளில் எனக்கு பதில் வந்தது. நான் அனுப்பிய புத்தகத்துக்கு மன்னர் நன்றி தெரிவித்திருந்ததுடன் நான் அனுப்பிய புத்தகத்தை படிப்பதாகவும் மன்னர் அதில் எழுதியிருந்தார். கர்த்தருக்கு துதி உண்டாவதாக. இந்த கடிதம் குறித்த செய்தியை 1974 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாத தேவ எக்காள இதழில் நான் எழுதியிருக்கின்றேன். அப்படிப்பட்ட மன்னர் மகேந்திராவும் தனது சொற்பமான 51 ஆம் வயதிலேயே மரணம் அடைந்த போதினும் அவரது மரணம் ஒரு நல்மரணமாக இருந்தது. மேற்கண்டவிதமான எந்த ஒரு இரத்தக்களறியும் அரச அரண்மனையில் அப்பொழுது நடைபெறவில்லை. என்னிடமிருந்து ஆங்கில புதிய ஏற்பாட்டைப் பெற்றுக்கொண்ட மன்னர் மகேந்திராவின் படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

233 ஆண்டு காலமாக நேப்பாள தேசத்தை அரசாட்சி செய்த ஷா அரச பரம்பரை இந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் தேதி முற்றுமாக அழிக்கப்பட்டு விட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட அரசர் பிரேந்திரா தனது ஞானமுள்ள தந்தையைப்போல அத்தனையான மத நல்லிணக்கம் கொண்டவர் அல்லர். அவரது ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ மக்கள் குறிப்பாக தேவ ஊழியர்கள் நேப்பாளத்தில் எவ்வளவோ இன்னல்களை அடைந்துள்ளனர். 10 தடவைகள் தேவனுடைய சுவிசேஷத்துடன் நேப்பாளத்துக்கு சென்றுள்ள நானும் பல துன்பங்களை அங்கு அனுபவித்ததுண்டு. ஒரு தடவை நான் அந்த நாட்டில் கைதும் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டேன்.



சுவிசேஷம் அறிவித்த காரணத்திற்காக கடந்த 2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தீபாவளி சமயத்தில் நேப்பாள தேசத்தில் நார்வே நாட்டைச் சேர்ந்த பாஸ்ட்டர் ட்ரான்ட்பெர்க் என்பவரையும், நேப்பாள தேச தேவ ஊழியர்களான பாஸ்ட்டர் தீமோத்தி ராய், பாஸ்ட்டர் பிரேம் பகதூர், பாஸ்ட்டர் டேவிட் பட்டராய் ஆகியோரையும் கைது செய்து சப்தாரி என்ற இடத்திலுள்ள சிறைக்கூடத்தில் அடைத்தனர்.

அதில் ஒரு பெரிய கொடுமை என்னவெனில் உயரம் குறைவான ஒரு சிறை கூட அறையில் மேற்கண்ட நால்வரையும் அடைத்து வைத்ததுதான். நல்ல உயரமான பாஸ்ட்டர் ட்ரான்ட்பெர்க் எழுந்து கூட நிற்க இயலாமல் சிறைக்கூடத்தில் முழங்கால்களிலேயே இருந்தார். அந்தக் கண்ணீரின் காட்சியை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். அப்படி அவர் சில மாதங்கள் அந்த சிறைக்கூடத்தில் சொல்லொண்ணா துயரம் அனுபவித்தார்.



தமது ஜீவனுள்ள நாமத்துக்கு கனஈனத்தையும், நிந்தையையும், அவமானத்தையும் கொண்டு வருவோர் எவராயினும் தேவன் தமது வார்த்தையின்படி (1 சாமு 2 : 30) அவர்களை கனஈனம் பண்ணி அவர்களுக்கு நீதியை சரிக்கட்டுகின்றார். அதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது. ஜூன் மாதம் முதலாம் தேதி படுகொலையடைந்த நேப்பாள அரச குடும்பத்தையும் நீங்கள் இங்கு காண இயலும்.

WONDERFULLY TRUE

The Bible is the only Book that grows richer with each repeated reading. It is a mine of wealth and paradise of glory. Though it is assailed by many outspoken enemies and wounded in the house of its friends, they have not shortened its march by one mile, not by one yard, nor by one footstep. There is no book in the world that has the power that the Bible has to transform derelicts, wrecks, and ostracised lives of society into holy, happy, victorious saints.

"வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்"

(1 கொரி 6 : 18)

பல ஆண்டு காலத்துக்கு முன்னால் "இந்து" என்ற ஆங்கில நாளேட்டில் ஒரு செய்தி வெளி வந்தது. அதை சுத்தரித்து வைத்துக் கொள்ளும்படியாக அன்று ஆவிக்குள் உணர்த்தப்பட்டபடியால் அப்படியே செய்து அதை பத்திரமாக வைத்திருந்தேன். அதற்கான செய்தியை எழுதும்படியாக இப்பொழுது நான் அதிகமாக உணர்த்தப்படுவதால் தேவ ஒத்தாசையோடு எழுதுகின்றேன்.

அது ஒரு உண்மைச்சரித்திரம். பண்டைய நாட்களில் கேரளாவில் நடந்தது. விலாயமங்கலத்து நம்பூதிரி என்ற ஒரு உயர் குலத்து பிராமண வாலிபன் தனது குல அந்தஸ்தை மனதில் கொள்ளாமல் தனது கண்களுக்கு பிரியமான ஒரு அழகான பெண்ணை சூத்திர குலத்திலிருந்து தெரிந்து கொண்டான். அவளுடைய வீடு சில கி. மீட்டர் தொலைவில் ஒரு ஆற்றங்கரையில் அமைந்து இருந்தது.

ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குளிர் காலத்தில் எதிர்பாராதவிதமாக மழை பெய்ய ஆரம்பித்து அது பெரும் மழையாக மாறி பகல் முழுவதும் பலத்துப் பெய்து இரவிலும் மழை தொடர்ந்தது. நம்பூதிரியின் மனைவி தனது பெற்றோருடைய வீட்டிற்குச் சென்றிருந்தாள். அன்று இரவு எப்படியாவது தனது மனைவியிடம் சென்றுவிட வேண்டும் என்ற கட்டுக்கடங்கா ஆவல் அவனை வாட்டி வதைத்தது. வாலிபனான அவன் நள்ளிரவு நேரத்தில் தென்னை ஓலைகளால் தீப்பந்தம் கட்டிக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்தான்.

எப்பொழுதும் ஆற்றில் கணுக்கால் அளவு தண்ணீர்தான் ஓடிக்கொண்டு இருக்கும். ஆனால் அன்று பலத்த மழை காரணமாக பெரும் வெள்ளம் ஆற்றில் ஓடிக்கொண்டிருந்தது. கும் இருட்டான அந்த நேரம் ஆற்றைக் கடக்க சிறு தோணி எதுவும் அங்கில்லை. எப்படியாவது ஆற்றைக்கடந்தாக வேண்டும் என்று நம்பூதிரி தனது உள்ளத்தில் திட்டமாகத் தீர்மானித்தான். அந்த நேரம் ஒரு மின்னல் பளிச்சிட்டது. அதின் ஒளியில் பார்த்தபோது தனக்கு அருகாமையிலேயே ஒரு மரம் தண்ணீரில் மிதப்பதை அவன் கண்டான். அதை தனக்கு சாதகமாக

பயன்படுத்திக் கொண்டு அதின் மேல் அமர்ந்து தனது கைகளால் தண்டுவலித்தவனாக ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தான். மறு கரை சேரவும் அவனது கால்கள் ஏதோ ஒரு கயிற்றில் மாட்டிக்கொண்டதை அவன் கவனித்தான். அந்தக் கயிறு அவன் ஏறிவந்த மரத்தில் கட்டப்பட்டிருந்த கயிறு தான் என்பதை கண்டு அவன் சந்தோசப்பட்டு அந்தக்கயிற்றை அங்கு நின்ற ஒரு மரத்துடன் இணைத்துக் கட்டி



மரமானது தண்ணீரால் அடித்துச் சென்று விடாதபடி செய்துவிட்டு தனது மனைவியிடம் அந்த நள்ளிரவில் சென்று கதவத் தட்டினான். மனைவி வந்து கதவைத் திறந்து மழையில் நனைந்து வந்திருந்த தனது கணவனுக்கு மாற்று வஸ்திரங்களை கொடுத்து சரீரத்தை துடைக்க துண்டு வஸ்திரமும் கொடுத்தாள். மழையோ மழையில் கும் இருட்டான நடுநிசியில் தான் எவ்வண்ணமாக ஆற்றைக் கடந்து வந்தேன் என்ற விபரத்தை நம்பூதிரி தனது மனைவியிடம் விபரமாகக் கூறினான். சூத்திரகுல அழகான பெண்ணான அவள் அதைக்கேள்விப்பட்டபோது பெரும் ஆச்சரியம் அடைந்தாள். அவள் மிகவும் கடவுள் பக்தியுள்ளவள். தன்னுடைய அழிந்து போகும் அற்பமான எலும்பும், தசைகளுமான சரீரத்தை அடைவதற்காக நள்ளிரவில் நம்பூதிரி பட்ட பாடுகளையும், அவனது உள்ளத்தின் கட்டுக்கடங்கா சிற்றின்ப ஆவலையும் தெய்வத்தின் மேல் வைக்கும் பட்சத்தில் அதினால் அவனுக்கு கடவுளிடமிருந்து எத்தனை மேலான பலாபலன்கள் கிடைக்கும் என்பதை மனைவி விளக்கி கூறவே அந்த நிமிடமே அவன் கடவுள் பக்தனாகி துறவறம் பூண்டுவிட்டான். அடுத்த நாள் காலையில் தனது சொந்த ஊர் செல்ல அவன் ஆற்றங்கரை வந்தபோது அவன் கண்ட காட்சியால் அவன் பலத்த அதிர்ச்சியடைந்தான்.

கடந்த நாள் நள்ளிரவில் ஆற்றங்கரையில் அவன் கட்டி வந்த மரமானது வெறும் மரம் அல்ல அது ஒரு தற்கொலை செய்து கொண்ட

மனித உடல் என்பதை அறிந்தபோது அவன் பயத்தாலும் ஆச்சரியத்தாலும் நடுக்கமுற்றான். கழுத்தில் கயிறுபோட்டு தன் உயிரை மாய்த்துக் கொண்ட ஒரு மனித உடல் அது. அதை யாரோ எடுத்து அப்படியே ஆற்று வெள்ளத்தில் போட்டிருக்கின்றனர். அது நம்பூதிரிக்கு ஆற்றைக் கடக்கும் நல்லதோர் படகாக அமைந்தது. அந்தப் படகில் பயணம் செய்யும் விலாயமங்கலத்து நம்பூதிரியை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். "இந்து" பேப்பரில் வெளியான படம் இது.

தான் ஒரு பிணத்தின்மேல் அமர்ந்து செல்லுகின்றோம் என்ற உணர்வைக்கூட காமவிகாரம் என்ற கொடிய போதை வஸ்து அவனிலிருந்து அழித்துப்போட்டது பாருங்கள்! கரடுமுரடான மரத்துக்கும் மனித உடலுக்கும் வேறுபாடு அவனுக்கு கிடைக்கவில்லை.

ஒரு மாலை நேரம் தனது அரண்மனை உப்பிரிக்கையின்மேல் உலாவிக் கொண்டிருந்த இஸ்ரவேலின் மன்னனான தாவீது, பிறந்த மேனியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்த அழகான பத்சேபாளும், உரியா என்ற பிறன் ஒருவனுடைய அன்பு மனைவியாளைக் கண்டதும் காமவிகாரம் அவனை ஆட்கொண்டது. அந்த போதை வஸ்துவுக்கு அடிமையான அவன் அப்போதே மயக்கம் அடைந்தான். அந்த காமவிகார மதிமயக்கத்தால் அவன் அடுத்தடுத்து என்ன என்ன கொடிய அக்கிரமங்களை எல்லாம் செய்தான் என்பதை 2 சாமுவேல் 11ஆம் அதிகாரம் நமக்கு அடுக்கடுக்காக தருகின்றது. எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்ததுபோல உரியாவை கொல்லுவதற்கான நிருபத்தை எழுதி யோவாப் என்ற சேனாதிபதிக்கு அந்த ஏதும் பாவமறியா அப்பாவி உரியாவின் மூலமாக தாவீது அனுப்புகிறான். உண்மைதான், காமவிகாரம் மனிதனுடைய கண்களை குருடாக்கிப்போடும்.

நமது முற்பிதாவாகிய யாக்கோபை எடுத்துக் கொள்ளுங்கள். தனது மாமனாகிய லாபானுடைய வீட்டிலே 7 வருடங்கள் அவனுடைய பெண் மக்களான ராகேல் மற்றும் லேயாளோடு வாழ்ந்து வந்திருக்கின்றார். பகல் முழுவதும் அவர்கள் ஒன்றாக ஆடுகளை மேய்த்திருக்கின்றனர். ராகேல், லேயாள் இருவரின் சரீர உருவ அமைப்புகள், குரல் வித்தியாசங்கள், அவர்களது நடபடிகளெல்லாம் வாலிபனான யாக்கோபுக்கு அத்துப்படியான பாடங்களாகத் தெரிந்திருக்கும். அப்படியிருந்தும், ராகேலுக்கு பதிலாக லேயாளை மனைவியாக தனது மாமன் தந்திரமாக கொடுத்த முதல் நாள் இரவில் நமது முற்பிதாவுக்கு இரா முழுவதும்

லேயாளை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் பொழுது விடிந்தபோது மட்டுமே அவளை இன்னார் என்று கண்டுபிடிக்க முடிந்த செயல் (ஆதி 29 : 25) நமக்கு பெரிதும் ஆச்சரியத்தை அளிப்பதாக இருக்கின்றது. மெய்தான், மனிதனை காமவிகாரம் மேற்கொள்ளும்போது அவனுக்கு மதிமயக்கம் ஏற்பட்டுவிடுகின்றது.

அந்த காமவிகாரத்தால் ஆட்கொள்ளப்பட்ட மற்றொரு மனிதனை அதே ஆதியாகமத்தில் நாம் பார்க்கின்றோம். அவன் பெயர் யூதாவாகும். தனது மரித்துப் போன மூத்த குமாரன் ஏர் என்பவனுடைய மனைவி தாமாருடன் அவன் பிரவேசித்திருக்கின்றான். தாமார் தனது முகத்தை மூடி முக்காடிட்டுக் கொண்டு ஒரு வேசிப்பெண்ணைப்போல திம்னாவுக்கு போகிற பாதையில் உட்கார்ந்திருந்தது மெய்தான். தனது சொந்த மருமகளுடைய உருவச்சாயல், முகலட்சணம், குரலோசை எல்லாம் யூதாவுக்கு தெரியாமல் போய்விட்டதா? எத்தனை ஆண்டுகள் அவர்கள் ஒருமிக்க வாழ்ந்து வந்திருந்தார்கள்? தாமார் தனது மாமனுக்கு எவ்வளவோ பணிவிடை செய்திருப்பாள்! உண்மைதான், காமவிகாரம் ஒரு மனிதனை ஆட்கொள்ளும்போது அவன் தனது சுயநினைவையே இழந்து மயக்கம் அடைந்து விடுகின்றான். ஆதியாகமம் 38 ஆம் அதிகாரத்தில் நாம் அந்த சம்பவத்தைக் காண்கின்றோம். அந்த போதையின் காரணமாக யூதா தனது உயிருக்குச்சமமான முத்திரை மோதிரம், ஆரம், கைக்கோல் போன்றவற்றை தாமாருடைய விருப்பப்படி கொடுக்கவும் தயங்கவில்லை.

மனிதனை இந்த காமவிகாரம் மிருகமாக்கிவிடுகின்றது. சில நூறு விசுவாசிகளைக் கொண்டதொரு பெரிய பெந்தெகொஸ்தே சபை. மிகுந்த உற்சாகத்தோடும், உயிர் மீட்சியோடும் சபை பெருகி வளர்ந்து வந்து கொண்டிருந்த நேரத்தில் சபையின் பாஸ்ட்டர் திடீரென்று காணாமற்போனார். சபையிலே ஒரு பெரிய பரபரப்பு. பாஸ்ட்டரின் குடும்பத்திலே ஒரே அழுகையும் கண்ணீருமாகிவிட்டது. கிறிஸ்தவ மார்க்கத்துக்கு எதிராக செயல்படும் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தினரால் பாஸ்டருக்கு ஏதாவது தீங்கு நேரிட்டுவிட்டதோ என்ற திகிலிலும் பயத்திலும் குடும்பத்தினரும், சபை மக்களும் துடிதுடித்துக் கொண்டிருக்கும்போது அதே சபையிலுள்ள ஒரு வாலிப பெண்ணையும் காணவில்லை என்ற செய்தி கிடைத்தது. சில நாட்களுக்குப் பிறகு அந்த பாஸ்ட்டரையும், சபையிலுள்ள அந்தப் பெண்ணையும் காவல்

துறையினர் ஒரு நாள் இரவில் ஒரு வீட்டில் வைத்து கண்டுபிடித்தனர். "அந்தப் பெண் அநாதை அவளுக்கு நான் அடைக்கலம் கொடுத்தேன். அதில் தவறு ஏதும் இல்லை" என்று பரிசுத்த பாஸ்ட்டர் காவல் துறையினரிடம் மார்தட்டிப் பேசினார். ஏற்கெனவே அவர் திருமணமாகி அவரது நெஞ்சு வரை வளர்ந்துள்ள பிள்ளைகளுக்கு தந்தையாவார். நாம் என்ன சொல்ல இருக்கின்றது!

சில ஆயிரம் பேர்களைக் கொண்டதொரு பெரிய திருச்சபை. ஞாயிறு ஆராதனைகளின் போதும், திருச்சபையின் இதர முக்கியமான சபை கூடுகைகளிலும் அந்த சபையின் குருவானவர் ஒரு குறுநில மன்னருக்குரிய ராஜ மரியாதைகள், அந்தஸ்துக்களிலே கொடிகட்டி பறந்து நின்றார். தேவன் தனக்கு கொடுத்த பொறுப்பான பரிசுத்த தேவப்பணியை தேவ பயத்தோடு நிறைவேற்றி சபை மக்களை ஆண்டவருடைய பரலோக நாட்டிற்கு வழிநடத்தவேண்டிய அந்தக் குருவானவர் சிற்றின்ப ஆசை இச்சைகளிலும், காமவிகார மயக்கத்திலும் நாளெல்லாம் சுற்றியலைந்தார். கடைசியாக காரியம் சபைக்கு வெளிப்பட்டது. அவரால் பாதிப்புக்குள்ளான பெண் அதை சபைக்கு தெரிவிக்கவே திருச்சபை மக்கள் கொந்தளித்துப்பொங்கி எழும்பி அந்தக் குருவானவரை தங்கள் சபையைவிட்டு அடித்து துரத்துகின்றனர்.

சபையில் அநேகரை நீதியின் ஜீவபாதையில் வழிநடத்தி, அநேகரை பரலோக ராஜ்யத்தின் புத்திரராக்கி, துன்பம், துக்கம், வறுமை, வியாதி, பாடுகளிலே சிக்கி தவிக்கும் சபை மக்களை ஆற்றி தேற்றி அரவணைத்து அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய பரிசுத்த தகப்பனாக இருந்து அவர் அந்த சபையிலிருந்து விடைபெற்றுச் செல்லும்போது " என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமாய் இருந்தவரே " என்று சபை மக்கள் அவருக்காக புலம்ப வேண்டிய இடத்தில் குருவானவரின் கீழ்த்தரமான, மிருகத்தன நடத்தை காரணமாக அவரை ன்னத்தில் அறைந்து, காலால் மிதித்து தள்ளி தங்கள் சபையைவிட்டு க்கள் வெளியேற்றுகின்றனர். மிகவும் மனக்கிலேசத்தோடும் உள்ளத்தின் ாரத்தோடும் நான் இந்த வரிகளை இங்கு எழுதுகின்றேன். இன்னும் த்தனையோ உண்மை நிகழ்வுகளை எழுதிக்கொண்டு போகலாம். அது தேவநாமத்துக்கு மகிமை சேர்க்காது.

மாந்தரை அழிக்க சாத்தானுடைய கரங்களில் உள்ளதான படைத்தளவாடங்களில் காமவிகாரம், அதைத் தொடர்ந்து வரும்

விபச்சாரம் பிரதானமான சர்வாயுதவர்க்கமாக அவனுக்கு உள்ளது. அந்த சர்வாயுதவர்க்கத்தை ஆண்டவருடைய சிங்காரப்பூங்காவாம் ஏதேனில் கவலையின்றி ஆனந்தமாக தேவனோடு வாழ்ந்து கொண்டிருந்த ஆதாம், ஏவாள் என்ற நமது ஆதி தாய் தந்தையர் மேலேயேதான் அவன் முதன் முதலாவதாக பயன்படுத்தினான் என்று நான் சிறுவனாக இருந்தபோது ஒரு விருத்தாப்பிய தேவ மனிதர் எங்கள் ஊர் தேவாலயத்தில் பிரசிங்கித்திருப்பதை நான் கேட்டிருக்கின்றேன்.

அந்த நாளிலிருந்து இதுவரை மனுஷ கொலைபாதகனான சாத்தான் தனது அக்கினியாஸ்திரத்தை பெருமளவுக்கு பயன்படுத்தி உலகத்தை அழித்து வருகின்றான். தங்களுடைய விசுவாச ஓட்டத்தை வெற்றியோடு ஓடிமுடித்து தங்களுக்கு முன்பாக உள்ள வெற்றிக்கயிற்றை தங்கள் மார்பு தொடும் அந்த இறுதி நேரத்தில் கூட இந்த கொடிய ஏவுகணையை சத்துரு ஏவிவிட்டு எத்தனையோ நட்சத்திரங்களான பரிசுத்தவான்களை இரக்கமில்லாமல் அவன் அழித்திருக்கின்றான்.

ஒரு பரிசுத்தமான தேவனுடைய ஊழியக்கார ஐயாவை எனக்குத் தெரியும். நெல்லை மாவட்டத்தை சேர்ந்த அவர்கள் வயலின் இசைத்து தெருப்பிரசங்கம் செய்வதில் சிறந்து விளங்கினார்கள். மாந்தரின் எந்த ஒரு பரிகாசத்தையும், நிந்தையையும் பொருட்படுத்தாமல் தைரியமாக தனது வாத்தியத்தை இசைத்து தெருக்களில் நின்று பாடித்துதித்து தேவனுடைய சுவிசேஷத்தைப் பிரசிங்கித்தார்கள். இங்கு கோத்தகிரிக்கு கூட சில தடவைகள் வந்து அப்படிப் பிரசிங்கித்திருக்கின்றார்கள். தனது தேவன் மேலுள்ள அன்பின் காரணமாக அவர்கள் சிம்லா மலைகள் வரைச் சென்று தேவனுக்கு ஊழியம் செய்ததுண்டு. இந்த நிலையில் அவர்களுடைய மனைவி இறந்து போனார்கள். தனிமையாக தானே சமைத்து சாப்பிட்டு ஆண்டவருடைய ஊழியங்களை வெளியிடங்களுக்குப் போய் செய்து வந்தார்கள். வயது சென்ற நிலையில் அப்பொழுது அவர்கள் இருந்தார்கள்.

ஒரு நாள் இங்கு என்னண்டை வந்த அவர்கள் அதிகமாக கண்ணீர் சிந்தி அழுதார்கள். அதின் விபரம் நான் அவர்களிடம் கேட்டபோது " சகோதரனே, நான் தேவனுக்கு விரோதமாக ஒரு பெரிய அக்கிரமம் செய்துவிட்டேன். இவ்வளவு காலம் கர்த்தருக்கு முன்பாக நான் வாழ்ந்த எனது களங்கமற்ற பரிசுத்த வாழ்க்கையில் பெரும் பாவக்கறை விழுந்துவிட்டது. என்னால் அதை தாங்கவே முடியவில்லை " என்று

மிகுந்த மனமடிவுடன் சொன்னார்கள். எவ்விதமாக அந்த பாவம் உங்களை மேற்கொள்ள அனுமதித்துவிட்டீர்கள் என்று நான் அவர்களைக் கேட்டபோது இவ்வண்ணமாக பதில் சொன்னார்கள். " எனது வயலின் வாத்திய கருவியை வழக்கம்போல எடுத்துக்கொண்டு கிராமம் கிராமமாக தேவனுடைய சுவிசேஷத்தை பாட்டுகள் பாடி அறிவித்து இறுதியாக நான் சென்னை பட்டணத்தை நெருங்கிக் கொண்டிருந்தேன். சென்னைக்கு பக்கமாக உள்ள ஒரு கிராமத்தில் தேவனுடைய ஊழியத்தை செய்து முடித்து அங்குள்ள கிறிஸ்தவ விதவையான ஒரு ஸ்திரீயின் வீட்டில் அன்று இராத்தங்கினேன். தந்திர சாத்தான் அந்த விதவையைக்கொண்டு என்னை மேற்கொண்டு என்னை விபச்சாரப்பாவத்தில் வீழ்த்தி பாவப்படுகுழியில் என்னைத் தள்ளிவிட்டான். என் தேவனுக்கு நான் துரோகம் செய்துவிட்டேனே ! நான் என் செய்வேன்? " என்று புலம்பினார்கள். அதுவே எங்களது இறுதி சந்திப்பாகவும் அமைந்து விட்டது. பின்னர் அவர்கள் மரித்தும் போனார்கள்.

விசுவாச ஓட்டத்தை வெற்றியோடு ஓடிமுடித்து தனக்கு முன்பாக இருந்த வெற்றிக்கோட்டு கயிற்றை அவர்கள் மார்பு மோதப்போகும் இறுதி வினாடியில் கொடிய சாத்தான் தனது குறி தவறாத விபச்சார வேசித்தன வச்சிராயுதத்தை கர்த்தருடைய தாசனுக்கு நேராக ஏவிவிட்டு ஷணப் பொழுதில் அவர்களை அடித்து வீழ்த்திவிட்டான்.

கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான் (நீதி 22 : 14)

தேவனுடைய பிள்ளைகளை ஆண்டவருடைய அன்பிலிருந்து நித்தியமாக பிரிப்பதற்கு சத்துரு இந்த கொடிய அக்கினியாஸ்திரத்தை அவர்கள் மேல் எய்து கொண்டே இருக்கின்றான். நாம் கவலையீனமாக சற்று விழிப்பற்ற நிலையில் இருப்போமானால் சாத்தான் நம்மை இலகுவாக வீழ்த்திவிடுவான்.

இதை எழுதும் உங்கள் சகோதரனாகிய என்னையும் சாத்தானாம் பிசாசு இந்தியாவிலும் நேப்பாளத்திலுமாக மொத்தம் 5 பெண்களைக் கொண்டு எனது தேவ ஊழியத்தின் பாதையிலே என்னைச் சந்தித்திருக்கின்றான். போத்திப்பாரின் மனைவி கொண்டிருந்த அதே

விபச்சார நோக்கில்தான் இந்த ஐவரும் என்னைச் சந்தித்தனர். இந்த ஐவரிடத்திலும் நான் சற்று கவனக்குறைவாக இருந்திருக்கும் பட்சத்தில் நான் நிச்சயமாக அழியவேண்டிய இடங்கள் அவை. ஆனால், என்னை ஆட்கொண்ட என் கிருபைநிறைந்த கர்த்தர் சாத்தானுடைய அந்த கொடிய வல்லடிகளுக்கெல்லாம் என்னை அற்புதமாக விலக்கிக் காத்துக் கொண்டார். காசி பட்டணத்தில் நான் தனியாக தங்கியிருந்த எனது அறையின் கதவைத் தட்டி உள்ளே வந்து என் அருகில் அமர்ந்த வேசிப்பெண்ணை தேவ அன்பால் நிரப்பி அவளை கண்ணீர்விட்டு அழுதுகொண்டு வெளியே செல்லத்தக்கதாக தேவகிருபை அத்தனை பலமாக அப்பொழுது என்னில் கிரியை செய்யத் தொடங்கியது. இதை எழுதும்போது எனது உள்ளம் தேவனைப் பற்றிய அன்பால் நிரம்புகின்றது. சீனாய் மலையில் பிரத்தியட்சமாக இறங்கிய தேவன் நாங்கள் இருவரும் அமர்ந்திருந்த அந்த காசி பட்டண விடுதியில் அப்பொழுது இறங்கியிருந்தார். " தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? " *(ஆதி 39 : 9)* என்ற தேவ வார்த்தை அந்தப் பெண் என்னைவிட்டு கடந்து செல்லும் வரை என் உள்ளத்தில் தொனித்துக்கொண்டே இருந்தது. ஆம், தேவன் பேசினார். அல்லேலூயா. அப்படியே இதர 4 பெண்களும் என்னை மேற்கொள்ள இயலாமல் ஏமாற்றத்துடன் சென்றனர். இது தேவனுடைய சுத்தக்கிருபையாகும். எனது சுயபெலத்தால் எதுவும் நடக்கவே இல்லை. " கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான் " *(நீதி 22 : 14)* என்று தேவனுடைய வார்த்தை திட்டமாக கூறுகின்றது. உண்மைதான், கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவான மக்களை பொல்லாத சாத்தான் இந்த விபச்சார பாவத்திலே மிக சுலபமாக வீழ்த்திவிடுகின்றான். விபச்சாரத்தில் இருந்து கொண்டே தேவ ஊழியம் செய்யத்தக்க துணிச்சலையும் கர்த்தரின் கோபத்திற்கு ஏதுவான மக்களுக்கு அவன் கொடுத்து வருகின்றான்.

தினமும் நாம் தேவனுக்கு முன்பாக நம்மை தரைமட்டாகத் தாழ்த்தி முகங்குப்புற விழுந்து நாம் எந்த ஒரு நிலையிலும் சாத்தானுடைய தந்திர வஞ்சக வலையில் விழுந்து நம்மை தேவனைவிட்டு நித்தியமாக பிரித்துவிடக்கூடிய விபச்சார வேசித்தனம் என்ற கொடிய பாவத்தில் சிக்கிக் கொள்ளாமல் கர்த்தர் நம்மை பாதுகாக்க மன்றாடி ஜெபிக்க கருத்தோடிருப்போம்.

பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் (எபே 4 : 27)

இதை கருத்தோடு வாசிக்கும் அன்பான தேவ மக்களே, நமது வஸ்திரத்தில் ஒரு மை கறை பட்டுவிடுமானால் அதை நாம் தண்ணீரில் நனையவைத்து சோப்பை போட்டு இலகுவாக எடுத்துவிடலாம். அதில் ஒரு கரிய தார் கறை படும்பட்சத்தில் அதை நாம் மண்ணெண்ணையை பயன்படுத்தி அப்புறப்படுத்திவிடலாம். ஆனால், அதில் ஒரு வாழைக்குலையின் பால் பட்டுவிடுமானால் அதை எதை வைத்தும் எடுக்க இயலாது. நமது சட்டையில் அந்த வாழை மரத்தின் கறை தனித்து இருந்து கொண்டே இருக்கும். நமது வஸ்திரம் நாள்பட்டு பழமையாகிப் போனலும் அந்த வாழை கறை சற்றும் மாற்றம் பெறாமல் அங்கேதான் இருக்கும். அதை போக்கடிக்கவே முடியாது. அதின் காரணமாகத்தான் வாழைத் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் அதற்கென்றே தனி வஸ்திரம் வைத்திருப்பார்கள்.

அதைப்போலவே தான் விபச்சார வேசித்தன பாவங்களும் ஆகும். இந்த கொடிய வேசித்தனத்தால் தன்னைக் கறைப்படுத்திக்கொண்ட மனிதனுடைய பாவக்கறை தனித்து நின்று கொண்டிருக்கும். தாவீது ராஜாவுக்கு அது எப்பொழுதும் அவர் முகத்துக்கு முன்பாக நிழலாடிக்கொண்டிருந்ததாக வேதாகமத்தில் நாம் பார்க்கின்றோம் (சங் 51 : 3) " எங்கள் மீறுதல்கள் எங்களோடே இருக்கிறது " (ஏசா 59 : 12) என்று தீர்க்கன் எழுதுவார். " அவனுடைய வாலவயதின் பாவங்கள் (விபச்சாரம், வேசித்தனம் போன்றவை) அவனோடே கூட மண்ணிலே படுத்துக் கொள்ளும் " (யோபு 20 : 11) என்று யோபு பக்தன் எழுதுவார்.

இந்தப்பாவம் பரிசுத்த கர்த்தருக்கு கொஞ்சம்கூட பிடிக்காத ஒரு காரியமாகும். " விபச்சாரம் செய்யாதிருப்பாயாக " என்ற கற்பனையை கர்த்தருடைய விரலே கற்பலகையில் எழுதினது மாத்திரம் அல்ல (உபா 9 : 10) தாம் எழுதியதை அக்கினியிலும், மேகத்திலும், காரிருளிலும் இருந்து இஸ்ரவேலருக்கு மகா சத்தத்துடன் அவர் சொன்னதாக தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. (உபா 5 : 22). அதிலிருந்து அது தேவனுக்கு எத்தனை கொடிய அருவருப்பான பாவம் என்பதை நாம் நம்மளவில் நன்கு நிதானித்துக்கொள்ளலாம். தம்மை தரிசிக்க வந்த இஸ்ரவேல் ஜனங்கள் கணவன், மனைவி உறவு கூட இல்லாமல் சீனாய் மலை

அடிவாரம் வந்து தம்மை தரிசித்து தமது குரல் கேட்க வேண்டும் என்று விரும்பிய (யாத் 19 : 15) அத்தனை பரிசுத்தமுள்ள தேவன் விபச்சாரம், வேசித்தனத்தை எப்படிப் பொறுத்துக்கொள்ளுவார்? விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த இஸ்ரவேல் மனிதனையும், அந்த மீதியான பெண்ணையும் அவர்கள் படுக்கையிலேயே வைத்து தனது ஈட்டியினால் உருவக்குத்தி கொன்று போட்ட எலெயாசரின் மகன் பினெகாஸ் மேல் தேவன் அகமகிழ்ந்து அவனுக்கும், அவன் பின் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கையை செய்து தமது வைராக்கியத்தை காண்பித்த கர்த்தருக்கு (எண் 25 : 8, 13) விபச்சாரம் கொடிய அருவருப்பாகும்.

" ஸ்திரீயுடனே விபச்சாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன், அப்படிச்செய்கிறவன்தன் ஆத்துமாவை கெடுத்துப்போடுகிறான் " (நீதி 6 : 32) என்று சொன்னார் சாலொமோன் ஞானி. " வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்கு புறம்பாயிருக்கும், வேசித்தனம் செய்கிறவனோ தன் சுயசரீரத்துக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறான் " (1 கொரி 6 : 18) என்று பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் எழுதியிருக்கின்றார். தேவ ஜனமே, இந்த கொடிய விபச்சார பாவத்திற்கு விலகியோடுங்கள். இந்த விபச்சார பாவம் காரணமாக தேவன் நம் மேல் மாத்திரமல்ல நமது சந்ததியின் மேலும் தமது நீதியை சரிக்கட்டுவார். அப்படி நீதியை சரிக்கட்டினதை தாவீது ராஜாவுடைய காரியத்தில் நாம் பார்க்கின்றோம். தாவீது ராஜாவின் குமாரன் அம்னோன் அதில் அழிந்தான். (2 சாமு 13 : 33)

தினமும் தேவனோடு சில மணி நேரங்கள் ஜெபத்தில் செலவிட்டு ஒழுங்காக உபவாசித்து ஆண்டவரோடு நெருங்கி ஜீவிக்கும் தேவ மக்களை மாம்ச சிற்றின்ப ஆசை இச்சைகள் எதுவுமே செய்ய இயலாது. அந்தப் பாவங்களை சாத்தான் அவர்களுக்கு விரோதமாக ஏவிவிட்டாலும் அந்தப்பாவங்களின் கவர்ச்சி அந்த மக்களை கண்டதும் " தொட்டால் சிணுங்கி " செடியைப் போல தங்களது தலைகளைத் தாழ்த்திவிடும். அவைகள் அவர்களை ஒருக்காலும் மேற்கொள்ள இயலாது.

இந்தப்பாவத்தில் நமக்கு கைகண்ட வெற்றிக்கான ஒரு இரகசியத்தை அப்போஸ்தலன் தமது நிருபத்தில் நமக்கு எழுதி வைத்திருக்கின்றார். " பிசாசுக்கு இடங்கொடாமலிருங்கள் "

(எபே 4 : 27) என்பதே அந்த இரகசியம். எந்த ஒரு நிலையிலும் நாம் பிசாசுக்கு இடம் கொடுக்கக் கூடாது. நமது சிந்தனையில் பிசாசுக்கு நாம் சற்று இடம் கொடுத்தால் போதும். அதற்கு அவன் கண், காது, மூக்கு, வாய், எல்லாம் கொடுத்து முழு உருவத்தையே சாத்தான் நமக்கு முன்பாக நிறுத்தி நம்மை பாவத்தில் வீழ்த்திவிடுவான். நமது சிந்தனையையேதான் அவன் குறி வைத்து தாக்குவான். அதுதான் அவன் பிரவேசிக்கக்கூடிய முக்கியமான இடமாகும். எனவேதான் அப்போஸ்தலன் நமது சிந்தையை எப்பொழுதும் உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தி யுள்ளவைகள், புண்ணியம், புகழ் போன்ற தேவனுக்கு பிரியமான பரிசுத்த குணநலன்களால் நிரப்பி சத்துருவுடைய எந்த ஒரு அசுத்தமான சிந்தைக்கும் இருதயத்தில் இடம் இல்லாதபடி பார்த்துக்கொள்ள பிலிப்பி சபை தேவ மக்களுக்கு திட்டமான தேவ ஆலோசனையாக எழுதிவைத்தார். (பிலி 4 : 8)

" உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் " (லேவி 19 : 2) " கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக. நீங்கள் என்னுடையவர் களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன் " (லேவி 20 : 26) என்று திருவுளம்பற்றி நம்மைத் தமது சொந்த ஜனமாக நிலைப்படுத்தி தமது பரம கானானுக்கு நம்மை அழைத்துச் சென்று கொண்டிருக்கும் நமது பரிசுத்த கர்த்தருக்கு முன்பாக நாம் நம்மை பரிசுத்தமாக அவரது உன்னத பலத்தால் பாதுகாத்து நமது உன்னத இலக்கை நோக்கி தொடருவோமாக.

ஒரு கிறிஸ்தவனின் வளர்ச்சி அளவு கோல்

ஆண்ட்ரு போனர் என்ற தேவ பக்தன் ஒரு கிறிஸ்தவன் எப்பொழுது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றான் என்பதை தன்னால் சொல்ல முடியும் என்று ஒரு முறை கூறினார். குறிப்பிட்ட அந்த கிறிஸ்தவனின் ஆவிக்குரிய வளர்ச்சி அதிகரிக்க, அதிகரிக்க அவன் தன் ஆண்டவர் இயேசுவை வானளாவ புகழ்ந்து அவரையே உயர்த்திப் பேசிக் கொண்டிருப்பான். அதே சமயம் அவன் தன்னைக் குறைத்து, குறைத்துப் பேசி இறுதியில் தன்னை தரை மட்டத்திற்கே தாழ்த்திக் கொண்டு வந்து விடுவான். சூரியன் கீழ்த் திசையில் உதயமானதும் விடி வெள்ளி நட்சத்திரம் தானாகவே ஒளி மங்கி மறைந்துவிடுவது போல நீதியின் சூரியனாம் தேவனுடைய உதயத்தின் முன்பாக அவன் ஒன்றுமில்லாமல் மறைந்தே போவான்.

"நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" (மாற்கு 16 : 15)

தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர் நம் அருமை இயேசு இரட்சகருக்கே எல்லா துதி, கனம், மகிமை உண்டாவதாக. ஆமென்.

மனுமக்களின் பாவம் போக்கி, அவர்களை தமது நித்திய ஜீவனுக்கு பங்கு உள்ளவர்களாக்கி, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் அவர்களை பங்கு உள்ளவர்களாக்கும் பொருட்டாக கல்வாரி மாமலைமேல் தமது கடைசி துளி இரத்தம் வரை அத்தனை அன்பாக வடித்துக் கொடுத்த தேவமைந்தனின் கல்வாரி அன்பை உணராமல் இந்த உலக மாந்தர் சாத்தானுடைய ஆதிக்கத்துக்குள் அடிமைப்பட்டு எத்தனை எத்தனை கொடிய சித்திரவதைகளை அனுபவித்து வருகின்றனர் என்பதை எண்ணும்போது நமது கண்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது. இரண்டு உதாரணங்களை உங்களுக்கு கூறிவிட்டு தேவ ஊழிய செய்திகளுக்கு கடந்து செல்ல விரும்புகின்றேன்.

நமது சரீரத்தில் தலையானது மிகவும் முக்கியமான அவயவமாகும். "எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்" என்பது முதுமொழி. சரீரத்தின் எல்லா இயக்கங்களும் நமது தலைக்குள்ளாக இருக்கும் மூளையால் செயல்படுத்தப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான மிக நுண்ணிய நரம்புகளும், இரத்த நாளங்களும் அதில் உள்ளன. அதில் ஒரு சிறு அடிபட்டாலும், அல்லது அதில் ஒரு பலமான அதிர்ச்சி ஏற்படுமானாலும் உயிர் மோசம் நேரிடும். அதை கவனத்தில் கொண்டு சிருஷ்ட்டிகராம் தேவன் அந்த மூளையை மட்டற்ற ஞானத்துடன் மிக வலிமையான மண்டை ஓட்டுக்குள் பாதுகாப்பாக வைத்து வைத்திருக்கின்றார்.

ஆனால் மக்கள் வழிபடும் தேவதா தேவிகள் அப்படிப்பட்ட மனிதனின் மண்டை ஓட்டில் கண் வைத்து அதில் தேங்காய் உடைத்து தங்களைப் பிரியப்படுத்த கூறுகின்றனர். மனிதனின் மண்டையில் தேங்காய் உடைத்தால் அதற்குள்ளாக இருக்கும் அதி முக்கிய உறுப்பான மூளையின் கதி என்னவாகும்? இரும்புக்குக்கூட சவால் கொடுத்து நிற்கும் தேங்காய் மனுஷனின் தலைமேல் உடைபடுவது அத்தனை எளிதான காரியமா? அப்படி உடைபட்டாலும் அதற்குள்ளாக இருக்கும் மூளை

எவ்வளவு பாதிப்புக்குள்ளாகும்? ஒரு வேளை அந்த பாதிப்பு இன்று தெரியாவிட்டாலும் காலப்போக்கில் அந்த பாதிப்பு கட்டாயம் அதற்கு உண்டு. தங்கள் தலையில் தேங்காய் உடைத்து தங்கள் கடவுளரை பிரியப்படுத்தும் கண்ணீரின் காட்சிகளை செய்தி தாட்களில் நாம் அவ்வப்போது துயரத்துடன் காண்கின்றோம்.

தனது தங்க நகைப்பட்டறை தொழில் பாதிப்படைந்து நஷ்டத்தில் கலங்கி நின்ற தனது அன்புத் தொண்டனின் கனவில் அவன் வணங்கி வழிபடும் தேவதை தோன்றி அவனுடைய மூத்த குமாரனை தனக்கு நரபலியாக கொடுக்கக் கேட்கின்றது. அப்படியே அந்த மனிதன் தனது 20 வயது மூத்த குமாரனை நள்ளிரவில் அவனது ஆழ்ந்த உறக்கத்தில் அவனது படுக்கையறையிலேயே தலையை அறுத்து துண்டாடிவிடுகிறான். கையில் தலையுடன் தனது வீட்டு தலைவாசலில் அமர்ந்தவாறே போலீசாரிடம் அவன் சரண் அடைகின்றான். "எனது கனவில் நான் வணங்கும் தேவதை தோன்றி எனது மூத்த குமாரனை அந்த தேவதைக்கு பலி கொடுத்தால் எனது தொழில் செழிப்புற்று வளரும் என்று கூறியதால் நான் அவனை தேவதைக்கு பலி கொடுத்தேன்" என்று அந்த மனிதன் போலீசாரிடம் சொல்லுகின்றான் (3-9-2001 தினமணி செய்தி)

கடவுளர்கள் தங்களை நேசிக்கும் தங்களது அன்பு மக்களிடம் எதை எதை எதிர்பார்க்கின்றன பாருங்கள். நமது தேசத்திற்கு தேவனுடைய மகிமையின் சுவிசேஷம் எத்தனை அவசியம் என்பது இந்த பயங்கரமான செயல்களிலிருந்து தெரிகின்றது அல்லவா? தாங்கள் செய்வது இன்னவென்று அறியாமல் மாந்தர் தங்கள் அறியாமையால் என்ன என்ன நீசச்செயல்களை எல்லாம் செய்கின்றனர்.


கடந்த ஆண்டு நாங்கள் தேவ ஊழியத்தின் பாதையில் வடக்கே சென்றிருந்தபோது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தோம். பேருந்து இமயத்தின் பனி மூடிய சிகரங்களுக்கு அருகாமையிலுள்ள கிராமங்களின் வழியாக ஓடிக்கொண்டிருந்தது. எங்களோடு பயணம் செய்த ஒரு மனிதர் பேருந்து கடந்து செல்லும் ஊர்களிலுள்ள கடவுளர்களின் கோவில்களையும், ரஸ்தா ஓரமாக காணப்படும் விக்கிரகங்களையும் தலை குனிந்து வணங்கிக் கொண்டே வந்தார். அப்படி அவர் வணங்கி வரும்போது ரஸ்தாவில் ஆங்காங்கு நாட்டப்பட்டிருக்கும் மைல் கற்களையும் தெரியாமல் நமஸ்கரிப்பதை நாங்கள் பார்த்து துயரடைந்தோம்.

மெய்தான், மாந்தர் தங்களை சிருஷ்டித்த ஜீவனுள்ள தேவனை வழிபடுவதை விட்டு விட்டு எதை எதையெல்லாமோ வணங்குகின்றனர். அவைகள் தங்களிடம் செல்லுகின்றன என்று அவைகளின் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு தங்கள் தலைகளில் தேங்காய் உடைக்க அனுமதிக்கின்றனர். தாங்கள் பெற்ற தங்கள் அருமை மக்கட் செல்வங்களின் கழுத்துகளை அறுத்து துண்டாக்கி அந்த தேவதைகளுக்கு பலி செலுத்துகின்றனர். கர்த்தர்தான் நமது தேசத்தை கிருபையாக சந்திக்க வேண்டும். சத்தியத்தை எழுதினால் "வெட்டுவோம்" "கொல்லுவோம்" தீக்கொழுத்துவோம்" என்று நம்மை அச்சுறுத்துகின்றார்கள்.

போலிங் கிராமத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

இமயமலைகளின் அடிவாரத்திலுள்ள பாகேஷ்வர் என்ற இடத்திலிருந்து நாங்கள் எங்களது ஜோல்னா பைகளை தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களால் நிறைத்துக்கொண்டு ஜெபத்துடன் போலிங் என்ற இடத்திற்கு புறப்பட்டோம். பாகேஷ்வரிலிருந்து பராடி என்ற இடத்திற்குச் செல்லும் ஜீப் ஒன்றில் ஆளுக்கு ரூபாய் 15 கொடுத்து ஆசோன் என்ற இடத்திற்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். இந்த ஆசோன் என்ற இடமானது இமயத்திலுள்ள பிண்டாரி என்ற பனிமலை சிகரங்களுக்குச் செல்லும் பாதையில் 25 ஆம் கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆசோன் என்ற கிராமம் சரயு நதிக்கு அப்பால் இருக்கின்றது. நதிக்கு மேலாக ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலத்திற்கு முன்பாக ரஸ்தா ஓரமாக ஒரு டீ கடையும், ஒரு மளிகை கடையும் உள்ளது. நாங்கள் ஜீப்பிலிருந்து இறங்கியதும் எங்களுடைய கண்களுக்கு முன்பாக வெகு தொலைவில் தெரிந்தது அழகான பிண்டாரி வெண்பனி மலைச்



சிகரங்கள்தான். அந்த 12000 அடி உயரமான பனி மலைகளை சற்று நேரம் நின்று நாங்கள் பார்த்த பின்னர் அருகிலிருந்த டீ கடையில் டீ குடித்துவிட்டு எங்களது சுவிசேஷ பணியை ஜெபத்தோடு ஆரம்பித்தோம். முதலில் டீ கடைக்கார தம்பி ஜீவன் சந்திரசிங் என்ற வாலிபனுக்கு சுவிசேஷ கைப் பிரதிகளுடன் ஒரு இந்திமொழி புதிய ஏற்பாடு ஜெபத்தோடு கொடுத்தோம். அதைத் தொடர்ந்து ஆனந்த் சிங் என்ற மனிதருக்கு "மனிதனின் இருதயம்" என்ற சிறிய புத்தகத்துடன் சில சுவிசேஷ பிரதிகளையும் வழங்கினோம். தனது கரத்தில் "மனிதனின் இருதயம்" என்ற புத்தகத்தை வைத்து அதை வாசிக்க தயாராகும் ஆனந்சிங்கை நீங்கள் இந்த செய்தியில் காணலாம். நாங்கள் கொடுத்த சுவிசேஷ பிரதிகளை ஆசை ஆவலோடு வாசித்துக் கொண்டிருக்கும் ஒரு வாலிபனையும் நீங்கள் காண முடியும். கர்த்தருடைய சுவிசேஷ பிரதிகளை எங்களிடமிருந்து ஆசை ஆவலோடு பெற்ற ஒரு மனிதர் தனது கரங்களில் அவற்றை வைத்துக் கொண்டு நமது சகோதரன் நார்ட்டன் அவர்களுடன் ஆர்வமாக சம்பாஷித்து கொண்டிருப்பதையும் நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம்.



அதற்கப்பால் நாங்கள் சரயு நதிக்கு மேலாக கட்டப்பட்ட பாலத்தின் வழியாக நடந்து வந்து ஆசோன் கிராமத்தை வந்தடைந்தோம். ஒரு உயரமான மலையின் அடிவாரத்தில் அந்தக் கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்துக்குள் நாங்கள் நடந்து வருவதை கவனித்துக் கொண்டிருந்த ஊரிலுள்ள சில பெரியவர்கள் எங்களிடம் பல கேள்விகளும் கேட்டனர். பொறுமையாக நாங்கள் அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தோம். தமிழ்நாட்டிலிருந்து நாங்கள் வந்திருப்பதை அறிந்ததும் அவர்கள் மிகவும் சந்தோசம் அடைந்தனர். நாங்கள் சென்ற சமயம் ஆசோன் ஊரிலுள்ள பெண் மக்கள் பலரும் கூடைகளில் உரங்களை நிரப்பிக் கொண்டு தங்கள் தலையில் அவற்றை எடுத்துக்கொண்டு தங்கள் வயல் நிலங்களுக்கு அவைகளை கொண்டுபோய் போடுவதும் வருவதுமாக இருந்தனர். அவர்களில் பள்ளிகளில் படிக்கும் வாலிபப் பெண் மக்களும் இருந்தனர்.


அவர்களில் சிலருக்கு தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை ஜெபத்தோடு விநியோகித்தோம். ஊர்ப் பெரியவர்களுக்கும், சில வாலிபர்களுக்கும் கூட அவைகளை கொடுக்க ஆண்டவர் உதவி செய்தார். அவர்களில் எருமை மாடு மேய்த்துக் கொண்டிருந்த கமல்சிங் என்ற இளைஞன் மிகவும் ஆர்வத்தோடு எங்களிடமிருந்து சுவிசேஷ பிரசுரங்களை வாங்கி வாசித்ததுடன் மற்ற மக்களையும் வாங்கி வாசிக்க கேட்டுக் கொண்டான். ஆசோன் என்ற அந்த இமயமலை கிராமத்தை நீங்கள் இந்த செய்தியில் காணக்கூடும்.

ஆசோன் கிராமத்தை நாங்கள் கடந்து காய்ந்து கிடந்த நன்செய் நிலங்களின் வழியாக கரடு முரடான பாதைகளில் சென்று இறுதியில் செங்குத்தாக சரயு ஆற்றுப் படுகையில் இறங்கினோம். சரயு நதியின் ஒரு சிறிய கிளை வாய்க்கால் எங்களுக்கு குறுக்கிட்டு ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கடந்துதான் நாங்கள் போலிங் கிராமம் செல்ல வேண்டும். எங்கள் செருப்புகளை கழற்றி எங்கள் கரங்களில் எடுத்துக் கொண்டு தண்ணீருக்குள் கிடந்த பாறைகளில் எங்களது கால்களை கவனமாக எடுத்து வைத்து ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டே சென்றோம். ஏதாவது ஒரு பாறையில் நாங்கள் வழுக்கி விழுவதாக இருந்தாலும் வயோதிகர்களான எங்களது காரியம் துயரமாக முடியும் அல்லவா? எனினும், எங்களை இந்த கடைக்கோடியான இமயக்கிராமத்துக்கு தமது மிகுந்த கிருபையால் அழைத்துவந்த அன்பின் கருணாகரக் கர்த்தர் "அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார்" (மீகா 2 : 13) என்ற வேத வசனத்தின்படி எங்களுக்கு முன்பாக சென்று கொண்டிருந்தபடியால் நாங்கள் பாதுகாப்பாக அக்கரை சேர்ந்து திரும்பவும் மலை ஏறி ஒற்றையடிப்பாதை வழியாக எங்களது பயணத்தைத் தொடர்ந்தோம். மேட்டிலிருந்து நாங்கள் கீழே பார்த்தபோது ஆட்டு மந்தையைப் போல காணப்பட்ட ஒரு பெரிய குரங்கு கூட்டத்தைக் கண்டோம். அவைகள், கிராம மக்களின் வேளாண்மைப் பயிர்களை சிம்சோனுடைய நரிகள் அழித்தவண்ணமாக




அழித்துப்போடுமே என்பதை நாங்கள் நினைத்தபோது எங்கள் உள்ளம் உருகினது. எனினும், மக்கள் தங்கள் மூடநம்பிக்கை, அறியாமை காரணமாக அந்த அழிக்கும் ஜெந்துக்களையும் வணங்கி வழிபட்டு அவைகளுக்கு தீங்கு செய்யாமல் வைத்திருப்பதை நாங்கள் எண்ணி ஒரு புறம் துக்கமும், ஒரு புறம் ஆச்சரியமும் கொண்டவர்களாக நடந்து போனோம்.

போலிங் கிராமத்தின் அடிவாரம் நாங்கள் வந்தபோது எங்களை வரவேற்றது ஒரு செத்த மாடுதான். எங்கள் வலது கைப்பக்கமாக உயரமான மலையில் மற்ற மாடுகளுடன் அது புல் மேய்ந்து கொண்டிருந்த போது அது கால் இடறி கீழே விழுந்து மடிந்து கிடந்தது. நாங்கள் அந்த இடத்திற்கு வருவதற்கு சற்று முன்புதான் அது கீழே விழுந்திருக்கலாம் என்று நாங்கள் யூகித்துக் கொண்டோம். உயரமான மலை உச்சியில் போலிங் கிராமம் இருப்பதையும் நமது சகோதரன் நார்ட்டன் அவர்கள் தனது தோளில் ஜோல்னா பையுடன் விரைந்து நடந்து சென்று கொண்டிருப்பதையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.



மூச்சு வாங்க நாங்கள் செங்குத்து மலை ஏறி போலிங் கிராமத்தை வந்தடைந்தோம். அந்தச் சமயம் எங்களது வலது கைப்பக்கமாக பள்ளிப் பிள்ளைகள் பாடம் படிக்கும் சத்தம் எங்களுக்கு கேட்டது. சற்று தூரம் சென்று பார்த்தபோது அங்கே ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. இந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு தேவனுடைய வார்த்தைகளடங்கிய சுவிசேஷ பிரதிகளைக் கொடுத்தால் கட்டாயம் அவர்கள் அவற்றை தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று அவர்களுடைய பெற்றோர், இனஜனபெந்துக்கள் வாசிக்க வகை செய்வார்கள் என்ற தேவ ஆலோசனையின் அடிப்படையில் பள்ளியை நோக்கிச் சென்று அங்கிருந்த இரு ஆசிரியைகளிடம் தேவனுடைய சுவிசேஷ பிரதிகளை

பள்ளிப் பிள்ளைகளிடம் கொடுக்க அனுமதி கேட்டோம். "எங்கள் தேவனுடைய தயவுள்ள கரம் எங்கள் மேல் இருந்தபடியால்"



(நெகேமியா 2 : 8) லலிதா ஆர்யா, அஞ்சம் சௌஹான் என்ற அந்த இரு ஆசிரியைகளும் எங்களுக்கு சந்தோசமாக அனுமதி அளித்தார்கள்.

சந்தர்ப்பத்தை கர்த்தருக்கு மகிமையாக பயன்படுத்திக் கொண்டு நன்றாக எழுத வாசிக்கத் தெரிந்த பிள்ளைகள் யாவருக்கும் தேவனுடைய பிரசுரங்களை ஜெபத்துடன் கொடுத்தோம். தேவனுடைய வார்த்தைகளை தங்களுடைய கரங்களில் பெற்றுக்கொண்ட அந்த அன்புக் குழந்தைகளை இந்தச்செய்தியில் நீங்களும் கண்டு மகிழ்வதுடன் அந்த ஜீவனுள்ள பிரசுரங்கள் முப்பது, அறுபது, நூறுமான ஆத்தும அறுவடையைத் தரவும் நீங்கள் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். பள்ளி ஆசிரியைகள் லலிதா ஆர்யா மற்றும் அஞ்சம் சௌஹான் படத்தையும் நீங்கள் காணலாம். அவர்களுக்கும் கர்த்தருடைய பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான இந்தி மொழி தங்கவசன காலண்டர்களை நாங்கள் இங்கு வந்தவுடன் 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். இந்த ஆண்டும் கர்த்தர் கிருபைகூர்ந்தால் திரும்பவும் போலிங் கிராமம் சென்று சுவிசேஷத்துடன் அவர்களை சந்திக்க கர்த்தருக்குள் நாங்கள் ஆலோசித்து வருகின்றோம். கர்த்தர் எங்கள் பரிசுத்த ஆவலை தமது நாம மகிமைக்காக நிறைவு செய்ய நீங்கள் தயவாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நாங்கள் சென்ற போலிங் கிராமம் மலை உச்சியில் உள்ளது. மக்களுடைய தொழில் விவசாயம் மாத்திரமேதான். மாடுகளும் நிறைய வைத்திருக்கின்றனர். வீடுகளுக்கு முன்பாக நிறைய பூச்செடிகளை நாம்

காணலாம். அந்தக் கிராமத்தில் அநேகருக்கு நாங்கள் சுவிசேஷம் அளித்துள்ளோம். தேவனுடைய பிரசுரங்களை அந்தக் கிராமத்தில்



பெற்றுக்கொண்ட மக்களுடைய படங்களை நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கக்கூடும்.

எங்கள் கண்களை குளமாக்கிய ஒரு நிகழ்ச்சி

நாங்கள் போலிங் கிராமத்தில் கொடுத்திருந்த சுவிசேஷ பிரதிகளில் ஒன்றை அந்தக்கிராமத்திலுள்ள தீபா என்ற மகள் யாரிடமோ வாங்கி வாசித்து அதினால் அவள் பரவசமடைந்திருக்கின்றாள். எங்களைக் கண்டதும் தனக்கும் படிப்பதற்கு புத்தகங்கள் தரவேண்டுமென்று எங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டாள். "எங்கள் வசமிருந்த சுவிசேஷ பிரதிகள் அனைத்தும் கொடுத்து தீர்ந்துவிட்டது. ஒன்றுகூட எங்கள் வசம் இல்லை" என்று நாங்கள் அவளுக்கு பதிற்கூறினோம். "உங்கள் இருவரின் பைகளை திரும்பவும் ஒரு தடவை நன்றாகத் தேடிப்பாருங்கள்" என்று தீபா எங்களிடம் கூறவே அப்படியே தேடி எங்கள் வசம் ஒன்றுமில்லை என்று நாங்கள் பதில் சொன்னோம். அவளால் எங்களை நம்பவே முடியவில்லை. அவள் எங்களண்டை நெருங்கி வந்து எங்கள்



இருவரின் பைகளையும் நன்றாக சோதனை போட்டு தேடிப்பார்த்தாள். ஒன்றும் கிடைக்கவில்லை என்றதும் அவள் மிகவும் துயரம் அடைந்தாள். அவள் அப்படிச் செய்த செயல் எங்களுடைய கண்களில் கண்ணீரை கொண்டு வருவதாக இருந்தது. தீபாவுடைய முகவரியை எழுதி எடுத்து வந்து இங்கு வந்ததும் முதல் வேலையாக ஒரு இந்தி மொழி புதிய ஏற்பாட்டுடன் இன்னும் சில பயனுள்ள ஆண்டவருடைய பிரசுரங்களை பதிவு தபாலில் அவளுக்கு அனுப்பி வைத்தோம். தனது தலையில் உரம் எடுக்கும் கூடையுடன் காணப்படும் தீபா என்ற அந்த தவனமுள்ள ஆத்துமாவின் படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

ஆசோன், போலிங்கில் நடைபெற்ற தேவனுடைய ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்க அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்கள் போலிங்கில் ஊழியத்தை முடித்து மலைப்பாதை வழியாக வந்து கொண்டிருந்தபோது எங்கள் பாதையின் இடது கைப்பக்கமாக சரயு நதிக்கரை ஓரமாக மலை முகட்டில் வழி நெடுகிலும் இலந்தைப்பழ செடிகளை நாங்கள் கண்டோம். நம் ஊர்களில் மரங்களில் அவை காணப்படுகின்றன. ஆனால், அந்த இடத்தில் தரைகளிலுள்ள குத்துச் செடிகளில் அவை பழுத்துக் கிடக்கின்றன. நம் ஊர் பழங்களின் அதே ருசியை அது கொண்டிருப்பினும் அளவில் சற்று சிறியதாக உள்ளது.

பாகேஷ்வரிலிருந்து காலை சுமார் 8 மணிக்கு போலிங் என்ற இடத்துக்கு புறப்பட்டுச் சென்ற நாங்கள் மாலைப்பொழுதுதான் திரும்பவும் எங்கள் தங்கும் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். பல கி. மீட்டர் தூரம் அன்று நாங்கள் தேவ ஊழியத்தின் பாதையில் கால்நடையாக கரடுமுரடான மலைப்பாதைகளில் நடந்து சென்றிருந்தோம். தேவன் எங்களுக்கு அன்று நல்ல ஊழிய வாய்ப்பை தந்திருந்தமையால் நாங்கள் எங்கள் மாலை ஆகாரத்தை மகிழ்ச்சியோடு புசித்து களிகூருதலோடு எங்கள் இராக்கால இளைப்பாறுதலுக்குச் சென்றோம்.


டங்கோலி கிராமத்தில் நடைபெற்ற தேவ ஊழியம்.

வடக்கே இமயத்தில் உள்ள கிராமங்களில் தேவ ஊழியத்திற்கு செல்லும் நாங்கள் அந்த இடங்களில் உள்ள எந்த ஒரு மக்களாலும் அழைக்கப்பட்டுச் செல்லுவதில்லை. அங்கு எங்களுக்குத் தெரிந்தவர்கள் யாரும் கிடையாது. முற்றும் அந்நியர்களாக எங்களுக்கு முன்பின் தெரியாத இந்து மக்களின் கிராமங்களின் நடுவே தேவ ஆலோசனையின்

படி தேவனை முன்வைத்து நாங்கள் செல்லுகின்றோம். ஒவ்வொரு நாளும் அந்த நாளில் தேவ ஊழியத்திற்காக செல்லுவதற்கு முன்பாக மணிக்கணக்கான நேரத்தை தேவ சமூகத்தில் ஜெபத்தில் செலவிட்டு நாங்கள் செல்ல வேண்டிய இடத்தை கர்த்தாவிடம் கேட்டு விசாரித்து ஜெபத்தோடு புறப்பட்டுச் சென்று தேவ ஊழியம் செய்கின்றோம்.

இமயத்தின் கடைக்கோடியில் டங்கோலி என்ற ஒரு அழகிய கிராமம் உள்ளது. மலை உச்சியில் அமைந்துள்ள அந்த கிராமத்திலிருந்து பார்த்தால் வெண்பனிச் சிகரங்கள் கண்கொள்ளாக் காட்சியாக எழுந்து நிற்கின்றன. பாகேஷ்வர் என்ற இடத்திலிருந்து இந்த இடமானது சுமார் 25 கி. மீ. தூரத்தில் இருக்கின்றது. நாங்கள் டங்கோலிக்கு சென்று அங்குள்ள சிறிய கடை வீதியில் சிலருக்கு தேவனுடைய பிரசுரங்களை கொடுத்த பின்னர் மேட்டில் ஏறி கிராமத்துக்குள் ஜெபத்தோடு பிரவேசித்தோம். போகிற வழியிலும் சிலருக்கு கைப்பிரதிகளை விநியோகித்தோம். அந்த கிராமத்தின் உச்சிப்பகுதியை நாங்கள் எட்டிப்பிடித்தபோது பள்ளத்தாக்கிலுள்ள கூட்டம் கூட்டமான பைன் மரத்தோப்புகளையும், ஆங்காங்கு கோதுமை விளை நிலங்கள், சிறுசிறு நீரோடைகள் போன்றவை பார்ப்பதற்கு கண் கொள்ளாக்காட்சியாக இருந்தன. டங்கோலி கிராமம் பழ மரங்களால் நிறைந்து காணப்பட்டது. ஆனால், நாங்கள் சென்ற சமயம் இலையுதிர் காலமானதால் மரங்கள் தங்கள் இலைகளை உதிர்த்து நின்று கொண்டிருந்தன.

டங்கோலி கிராமத்திலும் நாங்கள் சிலருக்கு சுவிசேஷ பிரதிகளை கொடுத்தோம். மரங்கள் அடர்ந்த மேட்டின் மேல் பள்ளிக்கூடம் ஒன்று இருப்பதை கவனித்த நாங்கள் அங்கு சென்று ஆசிரியர்களின் அனுமதி



DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

பெற்று பள்ளிக் குழந்தைகளுக்கு தேவனுடைய நற்செய்தி பிரதிகளை ஜெபத்தோடு வழங்கினோம். அந்தப் பள்ளிக் குழந்தைகள் யாவரும் இந்துக் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. கணவனும், மனைவியுமாக ஆசிரியர்களாக பணியாற்றும் அவர்களுக்கு சாதுசுந்தர்சிங் புத்தகமும் இதர சுவிசேஷ இலக்கியங்களும் கொடுத்தோம். அந்த அன்பான பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தை நாங்கள் கேட்டபோது அதிர்ச்சியடைந்தோம். மாதம் ரூபாய் 300 மாத்திரமே ஒவ்வொருவரும் சம்பளமாக பெறுவதை எங்களிடம் கூறினார்கள். தங்கள் கரங்களில் கர்த்தருடைய வார்த்தைகளுடன் காணப்படும் மாணவ மாணவிகளையும், ஆசிரியர், ஆசிரியையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். ஏழைக் குழந்தைகளான அந்த பள்ளிப் பிள்ளைகளுக்கு பிஸ்க்கட்டுகளாவது அல்லது இனிப்புகளாவது கொடுத்து மகிழ்விக்காமல் வெறுமையாக வந்து விட்டோமே என்ற கவலை எங்களை வாட்டி வதைப்பதாக இருந்தது. டங்கோலி என்ற அந்த ஏகாந்தமான இமயக்கிராமத்தில் நடைபெற்ற சிறிய தேவ ஊழியங்களுக்காக அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

HOW LONG WILL IT BE?

Have you ever thought of the length of ETERNITY? An eminent writer said : "Suppose some little insect were to carry this world by its tiny mouthfuls to the most distant star. Hundreds of millions of years are required for the performance of a single journey. The insect commences on the leaf of a tree, and takes its little load, and sets out upon its almost endless journey. After millions and millions of years have rolled away, it arrives back again for its second load. Oh, what ages must pass before one leaf be removed! In what period of coming time would the whole tree be borne away? When would the forest be gone? And when would that insect take the last particle of this globe, and bear it away in its long, long journey? Even then Eternity would just have commenced". What is Eternal Punishment? It is the expression of God's hatred of sin.

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

Coonoor Printing Press ✆ 230630